Registared as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 182 • 14.04.2019






# சிங்கள பௌத்தத்தின் பிடியில் வவுனியா...!

வாசகர்கள்,
விளம்பரதாரகள்,
முகவர்கள்
அனைவருக்கும்
இனிய தமிழ் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்...!






# அடர் காடு - உச்ச பாதுகாப்பு என்ன செய்தார்கள் புலிகள்...?





ZHARA TAILORS
சஹ்ரா டெய்லர்
Specialist Wedding Suits
& Expert Gents Tailors
Grand Bazaar, Jaffna
Naizar-0719192908


YARL AHI Ice Cream
யாழ் அகி ஐஸ்கிறீம்
திருமணநாள் மற்றும் பிறந்தநாள் பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும்
ஏனைய விழாக்களுக்கும் வாகன வசதியுடன் வழங்கப்படும்.
குறிப்பு : மேலதிக விபரங்களை அறிந்திட www.yarlahi.comஐ பார்வையிடவும்.
இல. 46, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
No. 46, Kanakapuram Road, Kilinochchi.
T.P 021 7917585 / 077 0232328
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...!


இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...!
Nathan
key cutting center
அனைத்து வகையான திறப்புக்களையும்
10 நிமிடத்தில் மிசின் மூலம்
வெட்டி கொடுக்கப்படும்
இல 63, முட்டாஸ்கடைச் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி 0776175609


சிவா சூப்பர் மார்க்கற்
பருத்தித்துறை வீதி, கொடிகாமம் தொலைபேசி இல 0212050249
தங்களுக்கு தேவையான அனைத்து பொருட்களையும்
தரமானதாகவும் மலிவானதாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...!


பெயர் மாற்றம்
செனியுட் மல்ரி சென்ரர் என்பது தர்மலிங்கம் மல்ரி சென்ரர் எனவும்
கலைமகள், மகள் மல்ரி சென்ரர் என்றும் மாற்றப்பட்டுள்ளது.
மாணவர்களுக்கு தேவையான அனைத்து பாடசாலைப்
பொருட்களையும் இங்கே மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
முல்லை பிரதான வீதி, தண்ணீர் ஊற்று
முள்ளியவளை, முல்லைத்தீவு.
தொலைபேசி இல 0770569715
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...!


New
V.M.K
JEWELLERY
வீ.எம்.கே. ஜுவெல்லரி
Dealers in 22kt. Gold Jeweller
No: 80/30 Kasthuriar Road, jaffna
Tel: 021 2222515, 0777 849369
Kandy Road, Chavakachcheri
Tel:021 2271616 - 0777 849369
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...!


Rashmy
Beauty Care &
Training Centre
All types makeup all skin facial treatment hair dressing manicure & pedicure cake icing training classes.
Point Pedro road, Kopay Junction, Kopay
Contact No: 0214917905
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...!


உங்கள் கிணற்று
நீர் பருகுவதற்கு உகந்ததா?
நீரில் உள்ள பிரச்சினைகளின் தீர்வாக நாங்கள்
• இலவச நீர் பரிசோதனை
• இலவச ஆலோசனை
• 24 Hours விற்பனைக்குப் பிந்திய சேவை.
• Life Time Service warranty
நீங்கள் அருந்தும் நீர்
Yarl Smart Water
Filter நீர் ஆக
இருந்தால் நீங்களும்
SMART
KENT
ACE
உங்கள் வீடுகளில் / தொழிற்சாலைகளில்
வேறு நிறுவனங்களினால்
பொருத்தப்பட்டிருக்கும் நீர் சுத்திகரிப்பு
இயந்திரங்களையும் எம்மால்
சரிபார்த்து தரப்படும்.
இனிய தமிழ் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்...!
Yarl Smart Water Solution (Pvt) Ltd
Hotline: 021 430 0044, 0770573684, 0774739802, 0771126410
No.319, KKS Road, Jaffna./ Karadippokku Junction, A9 Road, Kilinochchi.


றெஜிபோம் வடிவமைப்புத்துறையில் 10 வருடங்கள் கடந்து...
சித்தா றெஜிபோம்
மங்களகரமான வைபவங்களுக்கு சித்தா றெஜிபோம்
• தரமான றெஜிபோம்
• குவாலிற்றியான Dust
• 2D - 3D டிசைன்கள்
• ஜசிங் கட்டிங் மற்றும் உருவங்கள்(தீப நாயகி)
• இந்தியன் டெக்னொலெஜி
• நவீனகரமான வடிவமைப்பு
• HD குவாலிற்றி
'உங்கள் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம்.'
Wedding
Gobi Anu
27.01.2018
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...!
NO 65A. அச்சுக்கூடவீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். 0755445901 (Viber), 0750394357


தமிழ் புடவையகம்
Thamil Tex
நவீன உலகின் பாரம்பரியம்
ஆடைத் தெரிவுகளின் முன்னோடி
பருத்தித்துறை நகரின் ஆடை அரங்கம்
ஆடைத்தெரிவுகளின் முன்னோடி
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்
பிரதான வீதி, பருத்தித்துறை
0771500707, 0774840750 m.p.makinthan0731@gmail.com
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...!


ROYAL FARM
றோயல் பாம்
✓ பேரன்ஸ்
✓ சேவல்
✓ புறொயிலர்
✓ ஊர்ப்பேடு
மானிப்பாய் வீதி உரும்பிராய் (உரும்பிராய் சந்தியிலிருந்து கோப்பாய் சந்திக்கு செல்வதற்கு முன்பாக 1km தூரத்தில்)
அனைத்து விதமான கோழி இறைச்சிகளையும் தேவையான அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம்
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...!
T.P : 0779229588


முல்லைத்தீவு மேற்கு
பனை தென்னை வள
அபிவிருத்திகூட்டுறவுச் சங்கம்
எமது சங்கத்தின் தயாரிப்புக்கள்
பனை சார் உற்பத்தி
பொருட்கள் கைப்பணி
பொருட்கள் பனங்களி
கருப்பட்டி பதனீர் போத்தல்கள்
அடைத்தல் ஒடியல் மா
அரைத்து பொதிசெய்தல்
இவ்வாறான பொருட்களை
முதல் தரத்துடன் பெற்றுக்
கொள்ளலாம் என்பதை
தெரியப்படுத்துவதுடன்
நெதர்லாந் நாட்டுக்கும்
இலங்கையின் தென்பகுதிக்கும்
எமது சங்கத்தின் பொருட்கள்
அனுப்பி வைக்கப்படுகின்றது.
பிரதான வீதி
முள்ளியவளை
தொலைபேசி எண்:
021 - 3202388
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...!



# அடர் காடு உச்ச பாதுகாப்பு என்ன செய்தார்கள் புலிகள்...?

## முகிலைத் துளைத்த புலிகள் 06

“எவரும் உட்பிரவேசித்தல் ஆகாது தமிழீழ விடுதலைப் புலிகள்” என்ற அறிவித்தல் பலகை தொங்கியது. தளபதியின் முகத்தில் அதிர்ச்சியும் ஏமாற்றமும் தெரிந்தது. அறிவிப்பு பலகையை மீறி இவ்வழியில் செல்ல முடியாது அவர் செல்லவும் மாட்டார். காரணம் புலிகளின் வளர்ப்பு, விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆரம்பகால உறுப்பினரான அவருக்கு இயக்கத்தின் கட்டுப்பாடுகள் தெரியும்.

வீரன் ஒருவனின் முதல் கடமை கட்டளைக்கு கீழ்படிதல். அந்தக் கட்டளை எப்படியாக இருந்தாலும் அதை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் உலக இராணுவங்களில் இந்த விதி தவறாது இடம்பிடிக்கும். விடுதலைப் புலி வீரர்களுக்கும் இந்தக் கட்டளை மிகச்சரியாகப் பொருந்தும். அவர்களின் நெடிய கடின போராட்டப் பாதையில் இறுதிவரை தலைவரின் தளபதிகளின் கட்டளைகளை அவர்கள் ஒருபோதும் மீறியதில்லை.

போகும் வழியில் அவருக்கு புலிகள் அந்தக் காட்டுக்குள் செய்து வைத்துள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் விளங்கின. எவருமே நுழையக்கூடாது என தடை விதித்துள்ள இந்த அடர் காட்டுக்குள் இருப்பது என்ன? என்ற கேள்வி அவருள் எழுந்தது. மூத்தவரான அவருக்கு ஓரளவுக்கு விடயம் விளங்கியிருக்கும். ஆனால், அதுபற்றி அவர் அலட்டிக்கொள்ளவில்லை. அவர் இந்தக் கதையை சக தளபதிகளுக்கு நகைச்சுவையாக “கடைசி அறிவிப்பு பலகையை முன்னுக்கே போட்டிருந்தால் எனக்கு இவ்வளவு அலைச்சல் இல்லையே” என்றும் அவர் வருந்தியதுண்டு.

ஆனால், அதன் வல்லமை அதில் பொதிந்திருந்த இரகசியத்தின் வலிமை அவருக்கு நன்கு தெரியும். சாதாரணமாக முன்னுக்கே அந்த அறிவிப்புப் பலகையை வைத்திருந்தால் பெரும்பாலானவர்கள் குறிப்பாக இராணுவப் புலனாய்வாளர்கள் விழித்துக்கொண்டு அந்த இரகசியத்தை அறிய கடும் பிரயத்தனம் எடுத்திருப்பார்கள். ஆகையால் பொதுமக்கள் நுழையத் தடை என்ற பலகை இருந்தால் அங்கு புலிகளின் முகாம் ஒன்று உள்ளது என்பதே அனைவரின் எண்ணமாகவும் இருந்திருக்கும். அதேபோல புலி வீரர்களுக்கு தடை என்ற அறிவித்தல் மூலம் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் அல்லது புலனாய்வுத் தளபதியின் முகாமாக இருக்கலாம் என்ற கருதுவர்.

**தலைவர் பிரபாகரன் எப்போதும் ஒழுக்கத்தை கடுமையாகப் பின்பற்றுபவர். அமைப்பின் அடிப்படை ஒழுக்கங்களை சாதாரண போராளி ஒருவர் மீறினாலே தண்டனை நிச்சயம். அதுவும் மூத்த போராளி பொறுப்பாளர் மீறினால் சும்மா விடுவாரா...?**

ஆகையால், அந்த உயர் பாது காப்புக்குள் நுழைய சற்று நிதானிப்பர். ஏனெனில் அறிவிப்பை மீறி சென்று மாட்டிவிட்டால் மீள்வது கனவு. அதிலும் புலிகளின் உண்மைகளை வரவழைக்கும் விசாரணைகளை நினைத்தாலே புலனாய்வாளர்களுக்கு கிடுநடுக்கம். ஆகையால் சாதாரணமாக தலைவரின் முகாம் என்றோ அல்லது தலைமை முகாம் என்று தகவல் கொடுத்துவிட்டு, அதுபற்றிய மேலதிக தகவல் சேகரிப்பை வேறு ஒருவரின் தலையில் கட்டிவிடவே முனைவர். இப்படியான சம்பவங்களே அதிகம் நடந்தது.

இதனால்தான் புலிகள் அந்த அடர் காட்டுக்குள் என்ன செய்தார்கள் என்பது இலங்கை இராணுவத்துக்கும் சரி... அரசாங்கத்துக்கும் சரி... நீண்டகாலமாகத் தெரியவரவில்லை.

அதெல்லாம் சரி, பிக்கப்பில் பறந்த பொறுப்பாளர் கட்டளையை மீறிச் சென்றால் என்ன நடந்திருக்கும் என்று யோசிக்கிறீர்களா...!

சிம்பிள்...! அவருடைய வாகனம் உள்ளே நுழையும்போதே முகாமின் பொறுப்பாளருக்கு தகவல் சென்றிருக்கும். தொடர்ச்சியாக அவரின் ஒவ்வொரு நகர்வும் நடவடிக்கையும் பொறுப்பாளருக்கு சென்று கொண்டே இருக்கும். அறிவிப்பு பலகையை தாண்டியதுமே அவரது வாகனத்துக்கு தடை ஏற்படுத்தப்படும். புலி வீரர்கள் வருவார்கள். பொறுப்பாளர் மூத்த உறுப்பினர் என்றுகூட பார்க்க மாட்டார்கள். அவரைக் கைது செய்வார்கள். அவரிடம் விசாரணை நடக்கும், இவர் என்னதான் காரணம் சொன்னாலும் ஏற்க மாட்டார்கள்.

அனுமதி இன்றி நுழைந்தமைக் காகவும் அறிவிப்பை மீறியமைக் காகவும் அவரது பதவி பறிக்கப்படும். அன்றுமுதல் அவருக்கு தண்டனை வழங்கப்படும். மூத்த பொறுப்பாளர் ஒருவருக்கு தண்டனை வழங்கப் பட்டால் பிறகு அவருக்கு மதிப்பு என்பதே கிடைக்காது. அதைத் தவிர, பொறுப்பாளராக மூத்த உறுப்பினராக இருக்கும் அவர் அனுமதி வாங்கிக் கொண்டு எந்த நேரமென்றாலும் தலைவர் பிரபாகரனை சந்திக்க முடியும். அறிவிப்பை அவர் மீறியிருந்தால் தண்டனை பெற்ற பொறுப்பாளர் அவரைச் சந்திப்பது என்பது அசாத்தியம்தான்.

ஏனெனில் தலைவர் பிரபாகரன் எப்போதும் ஒழுக்கத்தை கடுமையாகப் பின்பற்றுபவர். அமைப்பின் அடிப்படை ஒழுக்கங்களை சாதாரண போராளிஒருவர் மீறினாலேதண்டனை நிச்சயம். அதுவும் மூத்த போராளி பொறுப்பாளர் மீறினால் சும்மா விடுவாரா...? அவரின் கோபத்துக்கு ஒருமுறை பொறுப்பாளர் ஆளாகி விட்டால், நிலைமை அவ்வளவுதான். கடைசிவரை அவரிடம் மீண்டும் பழைய நம்பிக்கையைப் பெறுவதும் மன்னிப்புப் பெறுவதும் கடினம். இந்நிலைமை புலிகள் அமைப்பில் சிலருக்கு ஏற்பட்டிருந்தது. அதை நாம் இங்கு விரிவாகப் பார்க்க வேண்டியதில்லை.

எல்லாம் சரி புலிகளின் அதியுச்சப் பாதுகாப்புடன்கூடிய அடர் காட்டுக்குள் என்ன இருந்தது என்கிறீர்களா...? இதை நீளமாக விவரிக்கத் தேவையில்லை இடத்தின் பெயரைச் சொன்னாலே அது உங்களுக்கு தெரிந்துவிடும். ஏனெனில் இப்போது அது அனைவருக்கும் தெரிந்த விடயமாகி விட்டது.

இந்தப் பகுதி இரணைமடுக்குளத்தின் பின்புறமுள்ள காட்டுக்குள் உள்ளது. இரணைமடு என அழைக்கப் பட்டாலும் முகாம் உண்மையில் இருந்த பகுதி அம்பாமம் கிராம எல்லைக்கு உரியது. வான்புலிகளின் முதல் பயிற்சி முகாம் இங்குதான் இருந்தது. முதன்முதலாக ஓடுதளத்தை அமைத்ததும் இங்குதான். பயிற்சிகளைப் பெற்றதும் இங்குதான். விடுதலைப் புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்களுக்கே அனுமதி மறுக்கப்பட்ட இந்தக் காட்டுக்குள்தான் புலிகள் தாங்கள் நாட்டுக்குள் கொண்டுவந்த விமானத்தை வைத்துப் பறக்கப் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்த முகாம் கேணல் சங்கரின் கீழ் இருந்தது.

இரணைமடு முகாம் எப்படி இயங்கியது? அங்கு புலிகள் என்ன செய்தார்கள் அடுத்த இதழில்...!



# சிங்கள பௌத்தத்தின் பிடியில் வவுனியா...!

வவுனியா மாவட்டத்தில் தற்போது தமிழர்கள் 83 வீதம் முஸ்லிம்கள் ஏழு வீதம் சிங்களவர்கள் பத்து வீதமும் உள்ளனர். மகிந்த ராஜபக்ச ஆட்சியின் பின்னர் வவுனியாவில் குடிப்பரம்பலில் மாற்றங்களை ஏற்படுத்தும் அளவுக்கு சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2015 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த மைத்திரி ரணில் அரசாங்கமும் சிங்களக் குடியேற்றத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் வவுனியா மாவட்டத்தை இலக்கு வைத்து குடியேற்றங்கள் இடம்பெறுவதாக தமிழ் உறுப்பினர்கள் பலரும் இலங்கை நாடாளுமன்றத்தில் கூறியிருந்தனர்.

வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலர்பிரிவுகளில் வவுனியா வடக்கு பிரதேச செயலகமும் ஒன்று. அதன் மையபிரதேசமாக நெடுங்கேணி நகர்பகுதி அமைந்துள்ளது. 2009இற்கு முன்னர் விடுதலை புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த பகுதி 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் பல பௌதிக, சமூக ரீதியான, மாற்றங்களை வுவனியா மாவட்டம் சந்தித்து வருகின்றது.

தமிழர்களின் பூர்விக நிலமான வவுனியா இன்று அதன் தனித்துவ தன்மையை இழந்து நிற்கிறது. காரணம் சிங்கள குடியேற்றங்கள். முல்லைத்தீவு, திருகோணமலை, அனுராதபுரம், போன்ற மாவட்டங்களோடு வவுனியா வடக்கின் கிழக்குப் பகுதி சங்கமிக்கும் அடர்ந்த பெருங்காடுகளைக் கொண்டமைந்துள்ளது. அதனால் அங்கு குடியேற்றங்களும் மிக இலகுவாக நடைபெறுவதாக பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். நெடுங்கேணி நகரிலிருந்து கிழக்கு புறமாக 15 மைல் தொலைதூரத்தில் காணப்படுகின்ற அடர்ந்த வனாந்தரப் பகுதியில் பரவலாககுடியேற்றங்கள் செய்யப்பட்டும், இனிமேல் செய்யப்படுவதற்கும் தயாராகி இருக்கும் நிலைமையை பார்க்க கூடியதாக உள்ளது.

மருதோடை கிராமத்திலிருந்து நீண்டு செல்கின்ற வீதி இரு பக்கமும் வானளவு உயர்ந்த மரங்கள் நிரம்பிய பெருங்காடாக உள்ளதுடன் மனிதர்கள் வசிப்பதற்குரிய நிலை அங்கு இரண்டாம் பட்சமாகவே காணப்படுகிறது. அப்பகுதியில் பல ஆயிரம் ஏக்கர் காடுகள் அளிக்கப்பட்டு சிங்கள மக்கள் குடியமர்த்தபட்டிருக்கிறார்கள். குறித்த பகுதியிலிருந்து வெலிஓயா பிரதேசம் ஐந்து கிலோமீற்றர் தொலைவில் காணப்படுகிறது. அங்கு குடியேற்றப்பட்ட மக்களில் அனேகமானோர் அனுராதபுரத்தை சொந்த இடமாக கொண்டுள்ளதுடன் குடியேற்றப்பட்ட பின்னர் பலருக்கு வீடுகள் வழங்கப்பட்டு, வீதிகள் அமைக்கப்பட்டு, யானை வேலி அமைக்கப்பட்டு சில வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இங்கு பிரச்சினை என்னவென்றால் நெடுங்கேணியை அண்டிய பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ள புதிய சிங்கள கிராமங்களான நிகவெவ, சபுமல்தன்ன, போகஸ்வெவ உட்பட முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட வெலிஓயா, சம்பத்நுவர போன்ற பகுதிகளிற்கான வாக்காளர் பட்டியல்கள் வவுனியா மாவட்டத்துடன், இணைக்கப்பட்டுள்ளது இம்முறை நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் அந்தமக்கள் வவுனியாவடக்கு பிரதேச சபைக்கே தமது வாக்கை அளித்துள்ளனர். ஆனால், அவர்களுடைய பிரதேசசெயலக பிரிவாக வெலிஓயா காணப்படுகிறது.

இது முல்லைத்தீவு மாவட்டத்தின் நிர்வாகத்திற்குட்பட்டது. இதேவேளை மின்சார தேவைகளுக்காகவும், தொலைதொடர்பு சேவைகளை பெறுவதற்காகவும் அம்மக்கள் அனுராதபுரம் நோக்கியும் செல்கின்றனர். இது நிர்வாக ரீதியாக பல பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகிறது. இம்முறை நடைபெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலில் சிங்கள மக்கள் குடியேற்றபட்ட 17 கிராமங்கள் இணைக்கப்பட்டு 4 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. அந்த 17 கிராமங்களில் அதிகமாக வாக்குகளை கொண்ட சிங்கள கிராமமான போகஸ்வெவ (தமிழ் கிராமமான கொக்கச்சான்குளமே சிங்கள மக்கள் குடியேற்றபட்டு போகஸ்வெவ என்று பெயர் மாற்றபட்டுள்ளது) தமிழ் மக்களின் எல்லை கிராமங்களான வெடிவைத்தகல், கோவில் புளியங்குளம், ஊஞ்சல்கட்டி போன்றவை இணைந்து ஒரு வட்டாரமாக உருவாக்கப்பட்டது.

போகஸ்வெவ கிராமத்தில் 350 வாக்குகள் இருப்பதுடன் குறித்த மூன்று தமிழ் கிராமங்களிலும் 175 வாக்குகளே இருக்கின்றன. இதனால் இம்முறை நடைபெற்ற தேர்தலில் இந்த வட்டாரத்தில் சிங்கள பிரதிநிதி ஒருவரே வெற்றி பெற்றுள்ளார், அவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் கட்சியை சார்ந்தவராகவும் இருக்கிறார். அவர் தமிழ் கிராமங்களிற்கு சேவை செய்வார் என்பதை எதிர்பார்க்க முடியுமா? அத்துடன் இணைக்கப்பட்டுள்ள இந்த சிங்கள கிராமத்திற்கும், தமிழ் கிராமத்திற்கும் இடைப்பட்ட பகுதி 10 கிலோமீற்றருக்கும் அதிகமான பெரும்காடுகளை கொண்டமைந்திருக்கிறது.

இந்நிலையில் இந்த இணைப்பு எவ்வாறு சாத்தியம் என்று எண்ணத் தோன்றுகிறது. எனவே போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் எல்லைக் கிராமங்கள் அபிவிருத்தியை எதிர்பார்த்து நிற்கையில் அது தொடர்பில் கரிசனையின்றியே குறித்த எல்லை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. போர்ச் சூழல் காரணமாக ஏற்பட்ட அழிவுகள், இடப்பெயர்வு, போரிற்கு பின்னர் முறையாக மேற்கொள்ளப்படாத, மீள்குடியேற்ற செயற்பாடுகள் காரணமாக வவுனியா வடக்கில் உள்ள எல்லையோரக் கிராமங்கள் மக்கள் இல்லாமல் அழிந்து வரும்நிலையை சந்திக்கின்றன.

குறிப்பாக வெடிவைத்தகல், கோவில் புளியங்குளம், ஊஞ்சல்கட்டி போன்றவை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், மண்ணின் மைந்தர்களின் வரவுக்காக ஏங்கி நிற்பதை பார்க்கக்கூடியதாக இருக்கிறது. 40 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்த வெடிவைத்தகல் கிராமத்தில் தற்போது ஒரேயொரு முதியவர் மட்டும் வாழ்ந்து வருகிறார். இதுபோல கோவில்புளியங்குளம் பகுதியில் 6 குடும்பங்கள் வாழ்கின்றன. இப்பகுதியில்உள்ள இரு பாடசாலைகள் புதர் வளர்ந்து மாணவர்களின் வருகைக்காக ஏங்கி நிற்கிறது.

குளங்களும், வயல், நிலங்களும் அதிகம் காணப்பட்டாலும் அவற்றை பயன்படுத்த மக்கள் இல்லை என்பது பெரும் குறையாக உள்ளது. உலகமயமாதல் சூழலில் நகரத்தை நோக்கிய மனிதர்களின் பயணம் கிராமங்களை சோபையிழக்கச் செய்திருக்கிறது. எது எப்படியோ போர்ச் சூழல் காரணமாக சோபையிழந்து நிற்கும் கிராமங்களும், மனிதர்கள் நடமாடாத வீதிகளும், பாழடைந்த வீடுகளும் போர் அழிவுகளையும் மக்களின் முன்னைய இருப்பையும் தாங்கி நிற்கின்றன. இவ்வாறான நிலைமை எதிர்காலத்தில் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்படுவதற்கு இலகுவாக அமைந்து விடுகிறது.

முல்லைத்தீவு, திருகோணமலை, அனுராதபுரம், வவுனியா ஆகிய மாவட்டங்களின் எல்லைகளின் மையப் பகுதியான நெடுங்கேணியின் கிழக்கு பகுதிகளில் அரசினால் மேற்கொள்ளபடும் வகைதொகையின்றிய சிங்கள குடியேற்றங்களால் அரச திணைக்களங்களுக்கு இடையே பல்வேறு நிர்வாக சிக்கல் நிலைமைகளை உருவாக்கியிருக்கிறது. இதனைக் காரணம் காட்டி எதிர்காலத்தில் வடக்கு மாகாணத்தில் புதிய சிங்கள மாவட்டம் ஒன்று உருவாக்கப்படும் நிலையையும் மறுப்பதற்கில்லை. இது அரசின் நீண்டகால திட்டம் என்பது தமிழர் தரப்பின் நிலைப்பாடு.

ஏற்கனவே தமிழ் மக்களின் இடப்பெயர்வுகளினால் பாதிப்படைந்திருந்த பகுதிகளை மகாவலி தனக்குள் விழுங்கிக் கொண்டுள்ளதுடன் சீரான சிங்கள குடியேற்றங்களை பரவலாக மேற்கொண்டு வருகிறது. கொக்கச்சான்குளம் (போகஸ்வெவ), முல்லைதீவின் மணலாறு (வெலிஓயா), போன்றவை மகாவலி எல் வலயத்திற்குள் உள்ளடக்கபட்டு 3 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 12 ஆயிரம் சிங்களமக்கள் குடியேற்றபட்டுள்ளனர். மொரகாகந்தை நீர்தேக்கத்தில் இருந்து மகாவலிநீரை வவுனியாவின் சேமமடு குளத்திற்கு கொண்டுவரும் நடவடிக்கைகள் அரசினால் மேற்கொள்ளபட்டு வருகின்றது.

இந்நிலையில் மகாவலி எல் வலய கருத் திட்டம் நிறைவுபெறும் போது சுமார் 6 ஆயிரம் சிங்களக் குடும்பங்களை அதனை அண்டிய பகுதிகளில் குடியேற்றுவது என எல் வலயத்தின் கருத்திட்ட வரைபில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள சிங்கள குடியேற்ற திட்டங்களை செயற்படுத்தும் நடவடிக்கையே அண்மைய நாட்களில்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

## அந்தோ... பரிதாபம்...! தமிழினம்

தமிழர்கள் மீது ஈவிரக்கமற்ற போரைக் கட்டவிழ்த்து குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள், ஆயுதம் ஏந்தா இளைஞர், யுவதிகளையும்கூட கொன்று குவித்து கோர இனவழிப்பு ஒன்றை நடத்தியிருந்தார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச. இந்த இனவழிப்புக்குச் சற்றும் சளைக்காத இரத்தம் சிந்தாத, மரணங்கள் நிகழாத போரொன்றை கட்டவிழ்த்து விட்டுள்ளது ரணில் அரசாங்கம். இதில் வேடிக்கை என்னவென்றால், ரணிலின் இராஜதந்திர காய் நகர்த்தலுக்குப் பலியாகி நம் அரசியல்வாதிகள் இந்த திட்டமிட்ட இனவழிப்புக்குத் துணை போவதுதான்.

தேசிய இனம் ஒன்று தனக்கான தேசத்தை சுயநிர்ணய உரிமையை நிலைநிறுத்த அரசியல், சமூகம், தன்னிறைவு பொருளாதாரம், பாரம்பரியமாக வாழும் நிலப்பரப்பு (தாயகம்) இந்த நான்கும் அவசியம். விடுதலைப் புலிகளின் காலத்தில் இந்த நான்கும் சரியாகப் பேணப்பட்டன. ஆனால், போர் முடிந்த பிற்பாடு ஒருமித்து ஒன்றாக குரல் கொடுக்க வேண்டிய அரசியல் பலம் உடைக்கப்பட்டது. இன்று, இந்த அரசியல் பலம் சின்னாபின்னமாக சிதைக்கப்பட்டுள்ளது. இராஜதந்திரம் என்ற பெயரில் கோமாளித்தனங்கள் அரங்கேற்றப்படுகின்றன. சிங்களவர்களின் இராஜதந்திரத்துக்குள் சிக்குண்டு மணகௌவிகிறது நம் அரசியல்.

தமிழ்ச் சமூகத்துக்குள் ஏற்கனவே புரையோடிக் கிடந்த சாதிய அடக்குமுறை மெல்ல மெல்ல தலைதூக்கச் செய்யப்படுகின்றது. கூடவே மதம் பரப்பல் என்ற பெயரில் மதவாதமும் தூண்டிவிடப் படுகின்றது. சாதியவாதத்தையும் மதவாதத்தையும் மக்கள் மத்தியில் விதைப்பதில் இன்றுள்ள அரசாங்கம் வெற்றி கண்டுள்ளது. இதற்குப் பலியாகிக் கிடக்கும் தமிழ்ச் சமூகம் பிரவினைகள் நிறைந்த சமூகமாக காணப்படுகின்றது. எமக்கெனத் தனியான பொருளாதாரக் கட்டமைப்புக்கூட இல்லாத நிலையில், புலம்பெயர்ந்து வாழ்பவர்களை நம்பி உள்ளோம். தமிழர்களின் பொருளதார இருப்பு என்பது அரசின் கையில் உள்ள கடிவாளம்போன்று உள்ளது. சுதேச தொழில்வாண்மையில் நாம் மிகப் பின்தங்கியவர்களாக உள்ளோம்.

இவ்வாறான நிலையில் நமது தாயகம் சிங்கள பௌத்த பேரினவாதத்தாலும், தற்போது முஸ்லிம் தேசிய வாதத்தாலும் கூறுபோடப்படுகின்றது. தமிழர் தாயகத்தை துண்டாடும் நோக்கத்துடன் மகாவலி அபிவிருத்தித் திட்டம் இன்று மாபெரும் வெற்றியை வடக்கில் பெற்றுள்ளது. தமிழரின் பெருநிலங்களான அம்பாறை, திருகோணமலை, புத்தளம் மாவட்டங்கள் சிங்கள முஸ்லிம்களிடம் பறிபோய்விட்டது. இப்போது தமிழரின் பூர்வீக பூமியான முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் பெருவாரியில் சிங்கள குடியேற்றங்களும் கூடவே முஸ்லிம் குடியேற்றங்களும் உருவாகியுள்ளன.

கிழக்கில் தமிழர் பெரும்பான்மையாகவுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தையும் சிங்கள மாவட்டத்துடன் பங்குபோடும் நிலை உருவாகியுள்ளது. அங்கும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை கொண்டுசெல்வதை நோக்காகக் கொண்டு காய்கள் நகர்த்தப்படுகின்றன. மஹிந்த ராஜபக்ச நடத்திய கொடூர இனவழிப்புப் போர் இன்னமும் தீவிரத்துடன் நடந்து கொண்டி ருக்கிறது. தன்னை தன்னினத்தை வருங்காலத்தைக் காப்பாற்ற என்ன செய்யப்போகிறது தமிழினம்...?



# கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராக தொடரும் போர்

ஷக்திக சத்குமார ஓர் எழுத்தாளராவார், சிறுகதையாளராவார். அவர் சில மாதங்களுக்கு முன்னர் 'அர்த' (அரைவாசி) என்ற பெயரில் சிறுகதை ஒன்றை எழுதி தன்னுடைய பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டார். துறவு வாழ்க்கை, லௌகிக வாழ்க்கை மற்றும் ஓரினச் சேர்க்கை பற்றியதே இந்த சிறுகதையின் உள்ளடக்கமாகும். இதுவொரு விசேடமான சிறுகதை யல்ல. சிலவேளைகளில் முதிர்ச்சி யடைந்தோர் எனக் கருதப்படுகின்ற சிறுகதையாளர்களினால் எழுதப் படுகின்ற சாதாரண சிறுகதையைப் போன்றது. எவ்வாறாயினும், ஓரினச் சேர்க்கை பாலியலை சமநிலையாகவும் அடையாளமாக சித்தரிக்க வைப்ப திலும் அவர் வெற்றி கண்டுள்ளார். ஆசிரியரிடம் ஒருவிதமான ஒழுக்கப் பண்புகள் உள்ளதென்பது அதன் மூலமாக தெளிவாகின்றது. கதையின் ஒரு சந்தர்ப்பத்தில் சித்தார்தன் மற்றும் யசோதராவின் பாலியல் தொடர்புகளின் தன்மையினையும் ராஹுல பற்றி மகாயானத்தில் கூறப் படுகின்ற பொருள்கோடலையும் உப கதையம்சமாக உள்ளடக்கியுள்ளார்.

இந்த சிறுகதையின் பிரதான பாத்திரமாக சித்தரிக்கப்படுபவர் பௌத்த துறவியாக "சதஹம் சேனாவ" (சதஹம் படை) உடன் தொடர்பு கொண்டிருந்து பிறகு துறவறத்தை கைவிட்ட ஒரு நபராவார். கதையானது துறவறத்தை கைவிட்ட நாளிலிருந்தே ஆரம்பிக்கப்படுவதாக சித்தரிக்கப்படுகிறது. இந்தக் கதையின் ஓரிடத்தில் ஞானசார தேரரைப் பற்றியும் கூறப்படுகிறது. "நீங்களெல்லாம் வெளிநாட்டிலிருந்து பணத்தைப் பெற்று, முன்னைய புலிகள் அமைப்பினரின் தலைவர்களுடைய குடும்பத்தாருக்கு வீடுகள் அமைக்கிறீர்களாமே, உண்மையா?" என்று ஞானசார தேரர் கேள்வி எழுப்புகிறார்.

"புத்தபகவானின் ஊர்சுற்றித்திரிதல்" பற்றியும் கூறப்படுகின்றது. அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் கடமையாற்றுகின்றலொய்ட் அண்ணா என்ற ஒருவரும் உள்ளார். இந்த அனைத்து சம்பவங்களும், அதாவது, 'சதஹம் சேனாவ', ஞானசார தேரர், 'புத்தபகவானின் ஊர்சுற்றித்திரிதல்' மற்றும் 'அரச சார்பற்ற நிறுவனம்' என்பவை எமது நிகழ்கால விவாத மேடையில் சர்ச்சைக்குரிய விடயங்களாகும். இவ்வாறு கூறுவதற்கான காரணம் தற்போது இந்த ஆசிரியருக்கெதிராக எழுந்து நிற்கின்ற தரப்பினர் குழப்பம் அடைந்திருப்பது, மதத்தினை இழிவுபடுத்தும் எந்தவொரு சம்பவத்திற்காகவுமல்ல. மேலே குறிப்பிட்ட ஒட்டுமொத்த தரப்பினரால் பின்பற்றப்படுகின்ற சமூக மனப்பாங்குகள் தொடர்பில் எழுந்துள்ள பிரபல்யமான குரோதத்தினால் ஏற்பட்டதென் பதனை தெரிவிப்பதற்காகவாகும்.

இந்த இளைஞர் தேரராக இருந்த காலப்பகுதியில் தலைமைத் தேரரின் பாலியல் ஆசாபாசங்களுக்கு அடிமையாக இருந்த நிலைமையினை மறைமுகமாக வெளிப்படுத்துகின்றார். அடுத்ததாக, துறவறத்தை கைவிட்ட பிறகு மேலே குறிப்பிட்ட லொய்ட் அண்ணனாலும் அதே சம்பவம் இடம்பெற்றதென்பதனையும் மறை முகமாக கூறுகிறார். வேறொரு விதமாக கூறுவதாயின், துறவு வாழ்க்கையிலும், லௌகீக வாழ்க்கையிலும் இந்த இளைஞனுக்கு சுதந்திரம் கிடைத்திருக் கவில்லை என்பதாகும். அந்த இலக் கானது, இதனையும் விட சிறப்பான சிறுகதையொன்றினை எழுதுவதற்காக பயன்படுத்தி இருக்கக் கூடியதொரு அபூர்வமான 'கருப்பொருள்' என்பதே எனது எண்ணமாகும்.

தற்போது இந்த எழுத்தாளர் எதிர்வரும் 9ஆம் திகதி வரையில் பொல்கஹவெல நீதவான் நீதிமன் றின் மூலமாக தடுப்பில் வைக்கப் பட்டுள்ளார் (9ஆம் திகதி விசா ரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம் எழுத்தாளர் ஷக்திக சத்குமாரவை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது) . அது, 'புத்த மதத்தினை பாதுகாக்கும் இளைஞர் முன்னணி' என்ற பௌத்த துறவிகள் குழுவொன்று பொல்கஹவெல பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலாகும். 'பௌத்த மதத்தினை இழிவுபடுத்தும் வகையில் பல்வேறான ஆக்கங்களை வெளியிட்டமையே அவருக்கெதிரான குற்றச்சாட்டாகும்.

இந்த முறைப்பாட்டின் மூலமாக ஷக்திக சத்குமாரவின் நூல்கள் 'ஆக்கங்களாக' ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும். அவ்வாறு கூறுவதற்கான காரணம் வேறொன்றுமில்லை, எமது விமர்சன பணி இதன் காரணமாக இலகுபடுத்தப்படுகின்றமையே ஆகும். நாம் இங்கு கலந்துரையாடுகின்ற விடயமானது, ஒரு மத்திற்கோ, ஒரு இனத்திற்கோ அல்லது விசேட மானதொரு குழுவிற்கோ எதிராக குரோதத்தினை விதைக்கின்ற அல்லது இரத்தும் சிந்தவைக்கின்றதொரு சம்பவம் அல்ல. நாமிங்கு கலந்து ரையாடுவது, நூலொன்றைப் பற்றியும் கதையாசிரியர் ஒருவரைப் பற்றியுமே. ஓர் ஆக்கத்தினைப் பற்றியே, படைப்பாளி ஒருவரது சுதந்திரத்தைப் பற்றியாகும்.

எனவே, கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் அதாவது கலைஞர் ஒருவரது கருத்து வெளிப்பாட்டு எல்லைக்குள் வைத்து எம்மால் கலந்துரையாட முடியும்.


கருத்து வெளிப்பாட்டு சுதந்திர மானது முன்னேற்றம் அடைந்த நாடுகளிலும் சில சந்தர்ப்பங்களில் வரையறை செய்யப்படுகின்ற நிலை ஏற்படுகிறது. யுத்தம் இடம்பெறுகின்ற சந்தர்ப்பம் அதிலொன்றாகும். மற்றைய சந்தர்ப்பமாவது, இனரீதியான மற்றும் சமய ரீதியான குரோத்தினை உரைக்கின்ற போது. இவற்றைத் தவிர தனிநபர் இழிவுபடுத்தல்கள் அல்லது சமய ரீதியான, இன ரீதியான நிந்தித்தல்கள் தொடர்பாக பொதுவான சட்டங்கள் அனைத்து

தொடர்ச்சி 23-ம் பக்கம்...

நெடுங்கேணி கச்சல்ச மனங்குளத்தில் புத்தர்சிலை ஒன்றை நிறுவி அக்கிராமத்தின் பெயரை சபுமல் கஸ்கந்த என்று மாற்றியிருந்ததுடன் அதற்கு அருகில் அமைந்துள்ள, ஊற்றுகுளம் தமிழ் கிராமமும் அபகரிக்கபட்டுள்மையை கூற முடியும். குடியேற்றதிட்டங்கள் மேற்கொள்ளப்படும் பொழுது அந்தந்த மாவட்டங்களில் உள்ள மக்களிற்கு அல்லது மாகாணத்தில் உள்ள மக்களிற்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். 13 ஆம் திருத்த சட்டத்திலும் அது தொடர்பாக கூறப்பட்டுள்ளது.

இங்குள்ள தமிழ் மக்களிற்கு காணிகள் தேவைப்படும் நிலையில் அதனைகருத்தில் கொள்ளாது வெளி மாகாணங்களை சேர்ந்த மக்களை குடியேற்றுவதானது இலங்கை அரசினுடைய பேரினவாத மனோ பாவத்தை வெளிக்காட்டி நிற்பதுடன், நிலங்களை அபகரித்து விட்டால் தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களை நசுக்கி விடலாம் என்ற கபட நோக்கத்தையும் கொண்டுள்ளது. 2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில் அது நில ஆக்கிரமிப்பு போராக மாறியது. அதெற்கெதிராக தமிழ் மக்களும், மக்களை பிரதிநிதித்துவ படுத்துபவர்களும் போராடாவிட்டால் எதிர்காலத்தில் வடக்கு மாகாணத் திற்குள் சிங்கள மாவட்டம் ஒன்று இணைந்து கொள்ளும் நிலைமையை தவிர்க்கமுடியாது.

# தோல்விப் பாதையில் கூட்டமைப்பு சுமந்திரனின் மதவாதம் காரணமா?



சுமந்திரனின் மதப்பற்றும் மத நடவடிக்கைகளில் அவர் கொண்ட ஈடுபாடும் மத நிறுவனத்தில் அவரின் மனைவி திருமதி சாவித்திரி சுமந்திரன் வகிக்கும் பதவி பற்றிய விபரங்கள் அடங்கிய நீளமான குறிப்பை மறவன்புலவு சச்சிதானந்தன் வெளியிட்டுள்ளார். பொதுவாக இனத்தின் நலன்களுக்கு முன்னால் மதம் முன்னிற்குமேயானால் அது அந்த இனத்திற்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தி அந்த இனத்தின் உரிமைப் போராட்டத்தையோ அல்லது தேசியம் பற்றிய முன்னெடுப்பையோ மழுங்கடித்துவிடும். இனவிடுதலைப் போராட்டமானது மதங்களின் தலையீட்டினால் சிதைக்கப்பட்டது என்பதே வரலாற்று அனுபவம்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பதவியை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் வகித்துக் கொண்ட காலகட்டத்தில், அவரை யாரும் ஒரு கிறிஸ்தவராக எண்ணியதோ அல்லது பார்த்ததோ இல்லை. ஏனெனில் அவர் கட்சியின் தலைமைப் பொறுப்பை வகித்துக் கொண்ட எந்தச் சந்தர்ப்பத்திலும் தன்னை எந்த மத நிறுவனங்களுடனும் இணைத்துக் கொள்ளவில்லை என்றுதான் சொல்லலாம். எதிலும் அவர் தன்னை ஒரு கத்தோலிக்கராக வெளிப்படுத்தியதில்லை. பொதுவாக இலங்கைத் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் இந்துக்களாகவும், கிறிஸ்தவர்களாகவுமே இருந்தனர் என்பதே காரணம். மதம் இனத்தின் உரிமைப் போராட்டத்தையோ அல்லது அது தொடர்பான ஏனைய செயற்பாடுகளையோ சிதைத்துவிடலாம் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். இலங்கையின் குடியியல் அமைப்புக்கு ஏற்றவாறு அவர் போராட்ட வியூகங்களை வகுத்துச் செயற்பட்டதனாலேயே அவர் இறுதிவரை ஒரு நல்ல தலைவராக இருக்க முடிந்தது.

### தற்போது சுமந்திரனின் அரசியல்

குறிப்பாக கட்சிப் பிரவேசத்தை ஜீரணிக்க முடியாதவாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பலர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதை அவர்களுடனான உரையாடல்களில் தெரிந்து கொண்டோம். "கட்சிக்குச் சனி தோஷம் பிடிச்ச மாதிரி, எப்பிடி வந்து உள்ளிட்டான் எண்டு தெரியாது" என்று கட்சித் தொண்டர் ஒருவர் விசனப்பட்டதை இந்த இடத்தில் ஞாபகப்படுத்துவது பொருத்தமானது என நம்புகிறேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இதுவரை இருந்த கத்தோலிக்க மதத்தவர்கள் பலர் நல்ல கிறிஸ்தவர்களாக இருந்திருக்கின்றனர். தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்தில் கத்தோலிக்க மதத்தின் பங்களிப்பு அளப்பரியது. அளவிட முடியாதவாறு அத்தகைய தியாகங்களை ஏற்படுத்திய பல வரலாற்றை விட்டுச் சென்றிருக்கின்ற மத குருமாருக்கு என்ன கைமாறு செய்யலாம்? அவர்கள் இன விடுதலைப் போராட்டத்தோடோ, அரசியலோடோ அது தொடர்பான ஏனைய நடவடிக்கைகளோடோ மத்தை ஒருபோதும் தொடர்புபடுத்தியது கிடையாது. சுமந்திரனின் வருகைக்குப் பின் வாக்கு வங்கிகளைப் பங்குபோடுவது தொடர்பாக அவர் வகுத்த வியூகமே கிறிஸ்தவ அணியினரை ஒரு வட்டத்துக்குள் கொண்டு வந்து செயற்படுவதென்ற நிலைப்பாட்டைத் தோற்றி இருக்கிறது.

வட மாகாண சபையில் அமைச்சராக அங்கம் வகித்த டெனீஸ்வரனின் பதவி நீக்கம் சம்பந்தமாக முன்னெடுக்கப்பட்ட நீதிமன்ற செயற்பாடுகளுக்குப் பின் களமாக சுமந்திரனே செயற்பட்டார் என அப்போது ஆதாரங்களுடன் செய்திகள் கசிந்திருந்தன. பின்னர் யாழ். மேயராக ஆர்னோல்ட்டின் நியமனத்திற்காகக் கட்சிக்குள் காணப்பட்ட முரண்பட்ட கருத்துகளை உச்சம்வரை சென்று உடைத்தெறிந்து அவரை மேயராக்கிய பெருமை சுமந்திரனையே சாரும். "பயப்படாதை. உன்னை நான் மேயராக்குவன்" என்று ஆர்னோல்ட்டுக்குக் கொடுத்த வாக்குறுதியை அவர் காப்பாற்றிக் கொண்டார். பின்னர் திருக்கேதீஸ்வர பெயர்ப் பலகை வளைவு தொடர்பாக நடைபெற்ற அருவருப்பான சம்பவங்களுக்கு இவரும் ஒரு முக்கிய காரணகர்த்தாவாக இருந்தார் என மறவன்புலவு சந்சிதானந்தன் பகிரங்கமாகவே குற்றம் சாட்டியுள்ளார்.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் கத்தோலிக்க மதப் பிரிவு ஒன்றும் மறைமுகமாகச் செயற்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. அதில் சுமந்திரன் தலைமையில் டெனீஸ்வரன், ஆர்னோல்ட், செல்வம் அடைக்கலநாதன், குருகுலராஜா போன்ற கட்சிப் பிரமுகர்கள் ஒன்றிணைந்து முன்னிலையில் செயற்படுகின்றனர் எனச் சந்தேகிக்கப்படுகிறது. தற்போது வட மாகாண சபையில் உயர் பதவியை வகிக்கின்ற கிறிஸ்தவர் ஒருவரையே அடுத்த வட மாகாண சபைத் தேர்த்தலில் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தக் கூடியவாறு காய்கள் நகர்த்தப்படுவதாக நம்பப்படுகிறது.

எனவே விடுதலைப் புலிகள் இருந்தபோது என்ன நோக்கத்திற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்திலிருந்து சம்பந்தனோடு கூடிய பெரும்பலான தமிழ் தலைமைகள் (மாவை உட்பட) விலகிச் சென்றிருப்பது பல சந்தர்ப்பங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் காலங்களில் பல தேர்தல்கள் வரப் போகின்றன. அந்தத் தேர்த்தல்களில் "எதிரியை வீழ்த்த அவர்களுக்கு எதிரான அத்தனை சக்திகளோடும் நாம் ஒன்றிணைவோம்" என்ற சுலோகத்தோடு வரப் போகும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினை எப்படி வெற்றி கொள்ளப் போகிறோம் என்றதனை மக்களாகிய நாமே முடிவெடுக்க வேண்டும். இல்லாவிடில் இவர்களது மாற்று வித்தைக்குத் தொடர்ந்து பலியாகப் போகிறோமா? என்பதனையும் முடிவெடுத்துச் செயற்பட வேண்டியவர்களும் நாமே.

என்ன நடந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தளமாகக் கொண்டு தனது அரசியல் பயணத்தை எப்படி வடிவமைக்க முடியுமோ? அதற்காக மதத்தை பயன்படுத்தி ஒரு வியூகத்தை அமைத்துக் கொண்டதனால், இக்குறுக்கு வழியின் மூலம் அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்த்தலில் தனக்கென ஒரு ஆசனத்தைக் கையகப்படுத்தக் கூடிய வல்லமையைக் கொண்டிருக்கிறார் சுமந்திரன். அதற்காக சிறிய சிறிய பதவிகளைத் தனக்குப் பின் நிற்பவர்களுக்குக் கொடுத்து அவர்களையும் திருப்திப்படுத்திக் கொண்டும் செயற்பட்டுக் கொண்டு வருகிறார். அதனை ஆர்னோல்ட்டிற்கு மேயர் பதவியைப் பெற்றுக் கொடுத்து உறுதிப்படுத்தியும் இருக்கிறார். எனவே தமிழ் மக்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் விரும்பியோ அல்லது விரும்பாமலோ சுமந்திரன் தன் வழி நடப்பார் என்பதனை அவர் பல வழிகளிலும் உறுதி செய்து கொண்டு வந்திருக்கிறார்.

இனியும் அவர் தொடருவார். அதற்குரிய பாதுகாப்பையும் தமிழ் தரப்பை அரசுக்கு அடமானம் வைத்துப் பெற்றுக் கொண்டும் இருக்கிறார். அதற்கு மேற்குலகத்தின் அனுசரணையையும் மதநிறுவனங்ளின் மூலம் பெற்றுக் கொண்டும் செயற்படுகிறார். இவரின் இந்தக் குறுக்குவழிச் செயற்பாடானது ஒரு நீண்டகால அடிப்படையில் அவருக்கு நன்மை தராவிட்டாலும் இலங்கை அரசியலில் அவர் தொடர்ந்தும் செயற்பட ஒரு திருப்புமுனைக்குரிய தளமாகத் தமிழ் தரப்பை அவர் கையாண்டிருக்கிறார். எதிர்காலத்தில் அவர் ஒரு இராஜதுரை யாகவோ, நீலன் திருச்செல்வமாகவோ, கதிர்காமராகவே அல்லது அரசின் செல்வாக்கைச் சுகித்துக் கொண்டு பிழைக்கும் கருணாவாகவோ (விநாயக மூர்த்தி முரளிதரன்) இருப்பதற்குரிய வாய்ப்புகள் நிறையவே உண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாகப் பல தீர்மானங்களை எடுத்துச் செயற்பட வேண்டிய நிலையில் தமிழ் இனம் இருக்கிறது. அவர்கள் யாரை நம்புவது? யாரைத் தமது தலைமை என இனங்காணுவது? யார் பின்னால் தொடர்வது? என்ற குழப்ப நிலைக்கு ஒரு தீர்வு காண பொது நல நிறுவனங்களும், பொது அமைப்புகளும்தமிழ்தேசியத்தின் நலன் கருதி அரசியலுக்கு அப்பாற்பட்டுச் சென்று ஒரு தீர்க்கமான முடிவை எட்ட வேண்டும்.

இதிலே முக்கியமாகத் தமிழ் தேசியம் ஒன்றினை மட்டும் சிரம் மேற்கொண்டு கத்தோலிக்க திருச்சபையும், இந்து மத நிறுவனங்களும் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். இந்த இரு நிறுவனங்களின் இணைவு மட்டுமே இரு தரப்பிலும் உள்ள சுய நல அரசியல் செயற்பாட்டாளர்களை இனங்காணுவதைச் சாத்தியப்படுத்தும். மதத்தைப் பகடைக்காயாக்கி தமிழ் தரப்பைக் குழப்புவதை நிறுத்த முடியும்.

சுமந்திரன் போன்றோர் தாம் ஒரு மதப்பற்றாளர் என்று ஒரு மாயையை ஏற்படுத்தித் தமது அரசியலை அதனூடாக முன்னெடுக்கலாம். ஆனால் அவர் நடவடிக்கைகளை ஆழ்ந்து சென்று ஆய்வோமானால் தனது சுய நலச் செயற்பாடுகளில் குறியாக அவர் இருப்பதும், அதற்காக எதனையும், யாரையும் உபயோகிக்கக் கூடிய சந்தர்பவாத மனோ நிலையில் அவர் செயற்படுவதும் நன்கு புலப்படும். இதற்குரிய உதாரணமாகத் தனக்குக் கொலைப் பயமுறுத்தல் இருப்பதாகச் சொல்லிக் கொண்டு சிறப்பு அதிரடிப் படையினர் பாதுகாப்பில் வலம் வருவதைச் சொல்லலாம். அது மட்டுமல்ல தனது சுய அரசியல் நலனுக்காகத் தமிழ் தேசியத்தை மத பலத்தைக் கொண்டு சிதைக்க முற்படுவதைக் காட்டிலும் வேறு உதாரணங்கள் இருக்கலாமோ?

# அதிகாரம் உள்ளவர்களுக்கும் அதிகாரம் அற்றவர்களுக்கும் இடையிலான நீதி



மூலம்: பேராசிரியர் ஜயதேவ உயன்கொட

முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொட கைது செய்யப்படுவாரா என்ற விவகாரம் கடந்த சில வாரங்களாக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த விவகாரம் நீதித்துறையின் சுதந்திரம் குறித்து மக்கள் மத்தியில் கரிசனையை ஏற்படுத்தியுள்ளது.

அதிகாரமற்ற, உதவியற்ற மக்களின் உரிமைகள் தொடர்ச்சியாக மீறப் படும்போது அவர்களைப் பாதுகாக்கும் நீதித்துறையின் கடமை மற்றும் அதன் சுயாதீனத் தன்மை குறித்து இந்த விவகாரம் பொதுமக்கள் மத்தியில் கரிசனையை தோற்றுவித்துள்ளது.

இலங்கை கடற்படையினரால் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு பின்னர் படுகொலைசெய்யப்பட்டமை தொடர்பானதே இந்த விவகாரம்.

ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் கப்பம் பெறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த குழுவினரே இந்த இளைஞர்களைக் கடத்தி படுகொலை செய்தனர் என்பது இலங்கை குற்றப்புலனாய்வு திணைக் களத்தினரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது

இந்த விசாரணைகளின் மூலம் இந்தச் சம்பவங்களில் கடற்படை யின் முன்னாள் தளபதி தொடர் புபட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

கப்பம் பெறும் நடவடிக்கையில் கடற்படையைச் சேர்ந்த குழுவினர் ஈடுபட்டிருப்பது அவ்வேளை தளபதி யாக பணியாற்றிய வசந்த கரன் னாகொடவிற்கு தெரிந்திருந்தது. எனினும், அவர் அதனைத் தடுப்பதற்கு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என சிஐடி யினர் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. முன்னாள் கடற் படைத் தளபதி தலையிட்டிருந்தால் 11 இளைஞர்களின் உயிர்களையும் காப்பாற்றியிருக்கலாம் என்ற கருத்தும் வெளியாகியுள்ளது.

சட்டமா அதிபர் இந்த வழக்கில் வசந்த கரன்னாகொட சந்தேகநபர் என தெரிவித்து நீதிமன்றத்தில் குற்றசாட்டுகளைத் தாக்கல் செய்யவிருந்தார்.

கடத்தல் பலவந்தமாக காணாமல்போகச்செய்யப்படுதல் மற்றும் படுகொலை ஆகியன மோசமான குற்றச்செயல்களாகும். இவ்வாறான குற்றங்களில் ஈடுபட்ட வர்களை பொலிஸார் கைதுசெய்வது வழமையான நடவடிக்கையாகும்.

சட்டமும் நீதியும் பக்கச்சார்பற்ற முறையில் செயற்படும்போது இதனை விட சிறிய குற்றங்களை செய்தவர்கள் கூட கைதுசெய்யப்படுவது வழமை.

மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தி சிலருக்கு காயங்களை ஏற்படுத்தினார் என்பதற்காக வாகனச்சாரதியை கைதுசெய்து தடுத்து வைக்கலாம் என்பதை சில வாரங்களுக்கு முன்னரே லால்காந்த எங்களுக்கு நினைவுபடுத்தினார்.

இதேவேளை, பாரிய குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்ட நபருக்கு நீதிமன்றம் பாதுகாப்பளிக்க முடியும் என்பதையும் கடந்த வாரங்களில் இலங்கை மக்கள் அறிந்துகொண் டுள்ளனர். அட்மிரல் கரன்னாகொட தான் கைதுசெய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக நீதிமன்றத்தின் உதவியை நாடினார், நீதிமன்றமும் அதற்கான அனுமதியை வழங்கியது. அரசாங்கத்தின் சார்பிலும் சட்டமா அதிபர் சார்பிலும் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், சட்டமா அதிபர் முன்னாள் கடற்படை தளபதியை கைதுசெய்வது குறித்து ஆர்வம் கொண்டிருக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

பாரதூரமான குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட் டாபய ராஜபக்ஷவும் தான் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற் றுள்ளார்.

முன்னாள் கடற்படைத் தளபதி மற்றும் தற்போதைய முப்படைகளின் பிரதானி ஆகியோரும் இந்தச் சலுகைகளை ஓரளவிற்கு அனுபவித் துள்ளனர். முப்படைகளின் பிரதானி கைதுசெய்யப்பட்டு சிறிது நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பிணையில் விடுதலையானார்.

கடந்த வாரம் சண்டே ஒப்சர்வர் வசந்த கரணாகொடவின் சம்பவம் மற்றும் அவரை கைதுசெய்வதில்லை என்ற உயர் நீதிமன்றத்தின் முடிவு மக்களின் மனதில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து கட்டுரையொன்றை வெளியிட்டிருந்தது. அதன் பின்னர் இணையத்தளமொன்றும் அதன் தொடர்ச்சியை வெளியிட்டிருந்தது. இந்த இரு ஊடகங்களும் சட்டத்தின் முன்னர் அனைவரும் சமம் என்ற சட்டத்தின் அடிப்படை கொள்கை மீறப்படுவதற்குஜனாதிபதியும்சட்டமா அதிபர் திணைக்களமும் நேரடி காரணம் என தெரிவித்திருந்தன.

இந்தத் தகவல் உண்மையானால், இலங்கையில் நீதித்துறை மற்றும் மக்களின் உரிமைகள் குறித்த கலந்துரையாடல்களை மீண்டும் ஆரம்பிக்கவேண்டிய தருணம் வந்துள்ளது. இலங்கையின் ஜனநாயகம் ஆபத்திற்குள்ளாகியுள்ள இந்தத் தருணத்தில் நீதித்துறையின் சுதந்திரமும் (குறிப்பாக உச்சநீதிமன்றம்) சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஸ்தாபன ரீதியிலான சுதந்திரத்தை பாதுகாப்பதும் ஜனநாயகம் மற்றும் மக்களின் உரிமைகளைப் பாது காக்கும் பரந்துபட்ட முயற்சிகளுடன் தொடர்புபட்டுள்ள விடயங்களாகும். அதிகாரம் மிக்க மனிதர்களான கோட்டபாய ராஜபக்ஷ ரவீந்திர விஜயகுணரத்ன, வசந்த கரன்னா கொட ஆகியோர் விடயத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ள விட்டுக் கொடுப்புகள் மூன்று விடயங்களை புலப்படுத்தியுள்ளன.

முதலாவது,நீதிமன்றங்கள் அதிகாரம் உள்ளவர்கள் விடயத்தில் சட்டத்தின் அடிப்படை விதிகளை இறுக்கமாக பின்பற்றுவதை தவிர்க்கின்றனவா என்ற கரிசனை எழுந்துள்ளது.



இரண்டாவது, பாதிக்கப்பட்ட வர்களைப்பாதுகாப்பது மற்றும்சட்டம் வலுவானவர்கள்' முன்னிலையில் மன்றியிடாததை உறுதி செய்வது ஆகிய நீதிமன்றங்களின் ஸ்தாபன ரீதியிலான கடப்பாடுகள் வலுவிழக்கின்றனவா என்ற அச்சம் உருவாகியுள்ளது.

மூன்றாவது, பாதிக்கப்பட்டவர்கள் அதிகாரம் உள்ளவர்களுக்கு எதிராக நீதியைக் கோரும் வேளை நீதிபதிகளினால் மீண்டும் பாதிப்பினை எதிர்கொள்கின்றனரா என்ற அச்சமும் எழுந்துள்ளது.

இந்த விடயங்களை சுட்டிக்காட்டு வதன் மூலம் இலங்கையின் நீதித் துறையின் திறன் மற்றும் முழுமையான அநீதிகளை எதிர்கொள்ளும் எங்கள் சமூகத்திற்கான இறுதி நீதியை உறுதிசெய்வதில் அதன் பங்களிப்பு குறித்து எந்த அவமதிப்பையும் செய்வதற்கு நான் முயலவில்லை.


கடந்த வருடம் நாடு அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டவேளை நீதிமன்றம் ஒருமித்த குரலில் வழங்கிய தீர்ப்பின் போது அதன் சுயாதீனத் தன்மையையும் நேர்மையையும் நான் வெளிப்படையாக பாராட்டியுள்ளேன்.

நீதியில் பக்கச்சார்பின்மை குறித்த நீதித்துறையின் அர்ப்பணிப்பு என்ற விவகாரம் 2018 டிசம்பரில் நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பின் சட்ட கோட்பாட்டுடன் நேரடி யாக தொடர்புபட்டுள்ளது என்பதனாலலேயே நான் தற்போது இந்த விவகாரம் குறித்து கருத்து வெளியிடுகின்றேன். பிரதம நீதியரசர் நளின் பெரேரா எழுதியதாக பலர் கருதும் அந்தத் தீர்ப்பு சட்டத்தின் ஆட்சியே அடிப்படை நெறிமுறை கோட்பாடு என்பதையும் அதன் மீதே எங்களின் அரசமைப்பு கட்டியெழுப்பட்டுள்ளது என்பதையும் தெளிவாகத் தெரிவிக்கின்றது.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதே சட்டத்தின் ஆட்சி கோட்பாட்டில் பிரதான கோட்பாடாகும். இது சட்டம் எந்தவித அச்சமோ ஆதரவோ இன்றி மன்னர் சாதாரண குடிமக்கள் என்ற வேறுபாடின்றி இருப்பவர்கள் இல்லாதவர்கள் என்ற பாகுபாடின்றி அதிகாரம் படைத்தவர்கள் அதிகார மற்றவர்கள் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் சமமாக பிரயோகிக் கப்படுவதை உறுதி செய்கின்றது.

அரசாங்கத்தின் சக்தி வாய்ந்த

தொடர்ச்சி 20-ம் பக்கம்...



# இந்தியாவின் குப்பை செயல்! அச்சத்தால் எச்சரிக்கும் நாசா

14 நாள்களுக்கு முன், விண்வெளியில் உள்ள செயற்கைக்கோளைத் தாக்கி அழிக்கும் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது இந்தியா. பூமியின் கீழ் வட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டிருந்த Microsat என்ற செயற்கைக்கோள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பூமியிலிருந்து புறப்பட்ட ஏவுகணை, செயற்கைக் கோளைத் தாக்கியதில், அது சிதறியது.

விண்வெளியைக் குப்பைகளால் நிரப்புவது சரியானதாக இருக்காது என இந்தச் சோதனை தொடர்பாக அமெரிக்கா கருத்துத் தெரிவித்திருந்தது. மிஷன் சக்தியால் உருவான துண்டுகள் மட்டுமின்றி, இன்னும் பல விண்வெளிக் குப்பைகள் பு+மியை சுற்றிக் கொண்டிருக்கின்றன. அவை எவ்வளவு காலம் அங்கேயே இருக்கும்... இதுபோன்ற விண்வெளிக் குப்பைகளால் பாதிப்பு ஏற்படுமா?

### விண்வெளியை குப்பையாக மாற்றிய நாடுகள்

விண்வெளியில், மனிதர்களின் நடவடிக்கைகளால் உருவான தேவையில்லாத பொருள்கள்தான் இந்த விண்வெளிக் குப்பைகள். இவை, எந்தப் பயனும் இல்லாமல் பூமியைச் சுற்றி வந்து கொண்டிருக்கும். செயற்படாத செயற்கைக்கோள்கள், அவற்றின் பாகங்கள், றொக்கெட்டின் பாகங்கள் என இதன் பட்டியலில் இருக்கும் பொருள்கள் அதிகம். ஒரு றொக்கெட், செயற்கைக்கோளைப் பூமியின் சுற்று வட்டப்பாதையில் நிலைநிறுத்துவதற்காக விண்ணில் ஏவப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம்.

அந்த றொக்கெட்டில் இருக்கும் அனைத்துப் பாகங்களும் அதன் இறுதிச் செயற்பாடு வரை தேவைப்படுவதில்லை. சில பாகங்கள் பூமிக்கு மேலே குறிப்பிட்ட உயரம் தாண்டிய பிறகு தேவைப்படாது. குறிப்பாக, றொக்கெட்டில் கூடுதலாகப் பொருத்தப்பட்டிருக்கும் பூஸ்டர்கள் பூமிக்கு மேலே குறிப்பிட்ட உயரத்தை எட்டியவுடன் தனியாகப் பிரிந்துவிடும். அவற்றில் பெரும்பாலானவை, பூமிக்குத் திரும்பி வந்துவிடும். ஆனால், ஒரு சில நேரங்களில் இவை விண்வெளியிலேயே மிதந்து கொண்டிருக்கும். இவை தவிர, செயற்கைக்கோள்களைச் சரியான இடத்தில் நிலைநிறுத்திவிட்டுப் பிரிந்து செல்லும் பகுதிகளும் விண்வெளிக் குப்பைகளாக மாறுகின்றன.

சில சமயங்களில், செயற்கைக் கோள்களே விண்வெளிக் குப்பைகளாக மாறிவிடும் சம்பவமும் நிகழும். ஒரு செயற்கைக்கோளுக்கு பயன்பாட்டுக் காலம் உண்டு. சில மாதங்கள் தொடங்கிப் பல வருடங்கள் வரை இது இருக்கலாம். அந்தக் காலம் முடிவடைந்த பிறகு, அதுவும் விண்வெளிக் குப்பையாக மாறிவிடும். அதைத் தொடர்புகொள்ள முடியாது என்பதால், அதைக் கட்டுப்படுத்தவும் முடியாது. எனவே, அது எந்தக் கட்டுப்பாடும் இன்றி விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும். இது போன்ற பொருள்களால்தான் மற்ற செயற்கைக்கோள்களுக்கும் சிக்கல் ஏற்படுகிறது.

மனிதர்கள் எப்போது விண்வெளிக்குச் செல்லத் தொடங்கினார்களோ, அப்போதே விண்வெளி குப்பைக்கிடங்காக மாறத்தொடங்கிவிட்டது. கடந்த ஜனவரி மாத நிலவரப்படி, பூமியைச் சுற்றி 1 செ.மீ குறைவான 128 மில்லியன் துண்டுகள், 1 செ.மீ முதல் 10 செ.மீ வரை இருக்கும் 9,00,000 துண்டுகள் மற்றும் 10 செ.மீக்கும் அதிக அளவில் காணப்படும் 34,000 துண்டுகள் எனப் பல மில்லியன் கணக்கிலான விண்வெளிக் குப்பைகள் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

### கண்டிக்கும் நாசா

இந்தியா நடத்திய மிஷன் சக்தி சோதனையின்போதும் இதே போல விண்வெளிக் குப்பைகள் உருவாகியிருக்கின்றன. செயற்கைக்கோள் தாக்கி அழித்ததில், செயற்கைக்கோள் பல துண்டுகளாக உடைந்து சிதறியது. இந்தக் குப்பைகளால் மற்ற செயற்கைக்கோள்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது எனத் தகவல் வெளியானது.

இந்நிலையில், மிஷன் சக்தி தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்திருக்கிறார், நாசாவின் தலைமை நிர்வாகியான ஜிம் பிரைடென்ஸ்டெயின் (JimBridenstine).

'இது, நிச்சயமாக பயங்கரமான ஒரு செயல். இந்தச் சோதனையால் உருவான விண்வெளிக் குப்பைகள், சர்வதேச விண்வெளி நிலையத்தின் சுற்றுவட்டப் பாதைக்கும் மேலே சென்றிருக்கின்றன." குப்பைகளின் எண்ணிக்கையைப் பற்றி குறிப்பிட்ட அவர், "இந்தச் சோதனை மூலமாக 400க்கும் மேற்பட்ட துண்டுகள் உருவானதைக் கண்டறிந்துள்ளோம். அவை, விண்வெளிக் குப்பைகளாக மிதந்து கொண்டிருக்கின்றன. இதில், 60க்கும் மேற்பட்டவற்றை தற்போது கண்காணித்துவருகிறோம். அவையனைத்தும் 10 சென்ரி மீற்றருக்கும் பெரிதானவை. அந்த 60 துண்டுகளில் 24 துண்டுகள் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இருக்கின்றன" எனத் தெரிவித்தார்.

மேலும், ஏதாவது ஒரு நாடு இதுபோன்ற சோதனையை மேற்கொள்ளும்போது, மற்ற நாடுகளும் அதேபோல ஒன்றைச் செய்ய வேண்டும் என விரும்பக்கூடும். எனவே, இது நிச்சயமாக ஏற்றுக்கொள்ளவே முடியாதது என்கிறார் ஜிம். அதேநேரம், 2007ல் சீனா நடத்திய செயற்கைக்கோளைத் தாக்கி அழிக்கும் சோதனையில் உருவான சில விண்வெளிக் குப்பைத் துண்டுகள், இன்னும் மியைச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன என்ற அதிர்ச்சித் தகவலையும் தெரிவித்திருக்கிறார் ஜிம் பிரைடென்ஸ்டெயின். கடந்த இருபதே நாள்களில் சர்வதேச விண்வெளி நிலையத்தின்மீது விண்வெளிக் குப்பைகள் மோதும் ஆபத்து 44% அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்திருக்கிறார்.

### நாசாவின் அச்சம் எதற்காக?

கட்டுப்பாடின்றி விண்வெளியில் சுற்றிவரும் எந்த ஒரு பொருளாக இருந்தாலும் அது ஆபத்தானதுதான். இதுபோன்ற துண்டுகள், ஒரு நொடிக்கு 7.8 கி.மீ என்ற அதிவேகத்தில் சென்றுகொண்டிருக்கும். இந்த அதிவேகத்தில் 1 செ.மீ அளவுள்ள பொருள்கூட ஒரு செயற்கைக் கோளின்மீது கடுமையான பாதிப்பை ஏற்படுத்திவிடும். செயற்கைக்கோள் என்றால் பரவாயில்லை. ஒருவேளை சர்வதேச விண்வெளி நிலையத்தின் மீது இவை மோதிவிட்டால், அதில் இருக்கும் விண்வெளி வீரர்களின் உயிருக்கு பாதுகாப்பு இல்லாமல் போகும். எனவே, விண்வெளிக் குப்பைகளைப் பார்த்து நாசா பயப்படுவதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

அதே நேரம், மோதலைத் தவிர்க்க மாற்று ஏற்பாடுகளும் விண்வெளி அமைப்புகளின் கைவசம் இருக்கின்றன. சில வகை பாதுகாப்புக் கவசங்கள் விண்கலங்களின்மீது மோதலைத் தவிர்க்கப் பயன்படுத்தப்படுகின்றன. இவை, வெளிப்புறத்தில் பொருத்தப்பட்டிருக்கும். அதிவேகத்தில் வரும் பொருளின் வேகத்தைக் குறைத்து, பாதிப்பைத் தவிர்த்துவிடும்.

இந்த பாதுகாப்புக் கவசம், சிறிய துண்டுகளுக்குத்தான் பயன்படும்; பெரிய அளவிலான துண்டுகள் என்றால் சிக்கல்தான். அதன் காரணமாகவே, பெரிய அளவுள்ள துண்டுகளை நாசா போன்ற விண்வெளி அமைப்புகள் கண்காணித்துக்கொண்டே இருக்கின்றன. ஒருவேளை செயற்கைக் கோளின்மீது மோதும் நிலை ஏற்பட்டால், அதற்கு முன்பாக செயற்கைக்கோளின் சுற்றுப் பாதையைச் சற்று மாற்றி அமைப்பார்கள். இதன் மூலம் மோதலைத் தவிர்த்துவிடுவார்கள். அதைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார் ஜிம்.

'சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருக்கும் விண்வெளி வீரர்கள், இப்போது மிகவும் பாதுகாப்பாகவே இருக்கிறார்கள். தேவைப்பட்டால் மோதலைத் தவிர்க்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படும்" எனத் தெரிவித்திருக்கிறார்.

### விண்வெளிக் குப்பை தீர்வு என்ன?

தொடர்ந்து அதிகரித்துவரும் விண்வெளிக் குப்பைகளைக் குறைக்க, பல்வேறு உலக நாடுகள் நடவடிக்கை எடுத்துவருகின்றன. ஒரு செயற்கைக்கோள் செயலிழக்கும்போது, பூமியின் குறிப்பிட்ட பகுதியில் நுழையும்படிச் செய்யப்படும். அதன்மூலம் பசிபிக் பெருங்கடலில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வந்து விழும். செயற்கைக்கோள், அதன் இறுதி நேரம் வரை தொடர்பிலிருந்தால் மட்டுமே இதைச் செய்யமுடியும். கட்டுப்பாட்டில் இல்லாத செயற்கைக் கோள்கள் விண்வெளியில்தாறுமாறான பாதையில் சுற்றிக்கொண்டிருக்கும். அவையும் சில நேரங்களில் மோதுவதுண்டு.

2009 ஆம் ஆண்டில் அப்படி ஒரு மோதல் சம்பவம் நிகழ்ந்தது. இரிடியம் 33 என்ற செயற்கைக்கோளும், ரஷ்யாவின் முழுளஅழுள 2251 செயற்கைக்கோளும் நேருக்கு நேர் மோதின. இதன் காரணமாகவும் விண்வெளிக் குப்பைகள் உருவாகின. இதுபோன்ற மிகப் பெரிய அளவுள்ள விண்வெளிக் குப்பைகளைக் கைப்பற்றி, மீண்டும் பூமிக்கு அனுப்பிவைக்கும் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு, சில நாடுகளின் விண்வெளி அமைப்புகள் திட்டமிட்டு வருகின்றன.



# தொற்று நோய்களின் உலகம் - 16

வி.ராமசுப்பிரமணியன்,
தொற்றுநோய் சிறப்பு மருத்துவர்

காசநோய் பற்றி ஏன் இவ்வளவு பேச வேண்டும்? காரணம் இருக்கிறது. இன்று உலகைப் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கும் கொடூரநோய் இது தான். உலகில், அதிக காசநோயாளி களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இரண்டாமிடத்தில் இருக் கிறது இந்தியா. நிறைய உயிர்களைக் காவு வாங்கிக் கொண்டிருக்கிறது இந்த நோய். தவிர, காசநோய் பரவும் வேகமும் அதிகம். ஒரு காசநோயாளி, ஓராண்டில் 10 முதல் 15 பேருக்கு இந்த நோயைப் பரப்பிவிடுகிறார்.

காசநோயை முற்றிலும் குணப்படுத்த முடியும். ஆனால், இந்த நோயைக் குணப்படுத்துவதோ, ஒழிப்பதோ மருத்துவர்களால் மட்டுமே ஆகும் செயலன்று. ஒவ்வொரு குடிமகனுக்கும் அந்தப் பணியில் பங்கிருக்கிறது. காசநோயென்பது, 'ஏழைகளின் நோய்' என்று ஒரு நம்பிக்கை நிலவுகிறது. அது உண்மையில்லை. சாலையில் நீங்கள் நடந்து செல்கிறீர்கள்... அப்போது ஒருவர் இருமுகிறார். அவரிடமிருந்து ஒரு துளித் திரவம், நீங்கள் சுவாசிக்கும் காற்றில் கலந்தாலும் உங்களுக்குக் காசநோய் வரலாம். அதனால், இந்த நோயை ஒழிப்பதில் அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும்.

65 சதவிகிதம் முதல் 70 சதவிகிதம் வரை காசநோய் நுரையீரலில்தான் வருமென்று பார்த்தோம். தொடர் இருமல், இருமலின் போது சளியுடன் கலந்து ரத்தம் வெளியேறுதல், காய்ச்சல், பசிக் குறைவு, எடைக் குறைவு போன்றவை காசநோயின் பொதுவான அறிகுறிகள். சிலருக்கு சளி வெளியேறாது. அப்படி இருந்து, பிற அறிகுறிகள் இருந்தாலும் காச நோய்க்குரிய சோதனையைச் செய்து பார்த்துவிடவேண்டும். நுரையீரலில் வரும் காசநோய் மட்டும்தான் மற்றவருக்குப் பரவும். உடலில் வேறெந்த உறுப்பில் காசநோய் வந்தாலும் பிறருக்குப் பரவாது.

சுவாசம் மூலமாகக் கிருமிகள் இரண்டுவிதமாகப் பரவலாம். ஒன்று, 'டிராப்லெட் ஸ்பிரெட்' (Droplet Spread). ஒரு நோயாளி இருமும்போது, கிருமிகள் சளித்துளிகளில் ஒட்டிக்கொண்டு வெளியேறும். அவ்வாறு வெளியேறும் கிருமிகள் 2 மீட்டர் தூரம்வரை பரவும். ஃப்ளுலீ (குடர), சார்ஸ் (SARS) போன்ற நோய்களெல்லாம் இந்த டிராப்லெட் ஸ்பிரெட் மூலம் பரவக்கூடியவை. ஒருவேளை, யார்மீதும் படாமல், சளித்துளியில் அமர்ந்திருக்கும் அந்தக் கிருமி கீழே விழுந்துவிட்டால், குறிப்பிட்ட இடைவெளியில் இறந்து விடும்.

இன்னொன்று ஏர்போர்ன் ஸ்பிரெட் (Airborne Spread). காற்று மூலமாகப் பரவுவது. குட்டிக் குட்டியாக, துளித்துளியாக கிருமிகள் வெளிவந்து மற்றவர்களுக்குப் பரவும். காசநோய், தட்டம்மை, சின்னம்மை போன்ற நோய்கள் இப்படியான கிருமிகள் மூலம் வரக்கூடியவை. இந்தவகைக் கிருமிகள் 20 அடி தூரம் வரைகூடப் பரவி மற்றவர்களுக்கு நோயை உருவாக்கும்.

'டிராப்லெட் ஸ்பிரெட்' மூலமாகப் பரவும் நோய்களை 3 லேயர்களைக் கொண்ட மாஸ்க் பயன்படுத்தினால் தடுத்துவிடலாம். 'ஏர்போர்ன் ஸ்பிரெட்' மூலமாகப் பரவும் நோய் களை இந்த வகையான மாஸ்க்குகளால் தடுக்கமுடியாது. மாஸ்க்கில் இருக்கும் ஓட்டை வழியாகப் சுவாசத்தில் கலந்துவிடும். N-95 என்ற சிறப்பு மாஸ்க்குகளால் மட்டுமே இவற்றைத் தடுக்க முடியும். காசநோய் இருப்பவர்களும் சரி, காசநோய்க்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவர்களும் சரி, இந்த மாஸ்க்கைத்தான் பயன்படுத்த வேண்டும்.

காசநோய் பாதித்தவர்களைச் சிறப்பு அறைகளில் வைத்துப் பராமரிக்க வேண்டும். 'நெகட்டிவ் பிரஷர் ரூம்' (Negative Pressure Room) என்று சொல்வோம். அந்த அறையில் காற்றழுத்தம் குறைவாக இருக்கும். கதவைத் திறந்தவுடன், வெளியில் இருந்து காற்றை உள்ளே இழுக்கும். உள்ளேயிருக்கும் காற்று வெளியேறாது. அதனால், நோய் பிறருக்குப் பரவாது.

காசநோய் உறுதி செய்யப்பட்டு விட்டால், கண்டிப்பாக 6 மாதங்களுக்கு மாத்திரைகள் சாப்பிட வேண்டும். நான்கு விதமான மாத்திரைகள் என்று முன்பே பார்த்தோம். இந்த மாத்திரைகளைச் சாப்பிடத் தொடங்கிய ஓரிரு வாரங்களில் இருமல் குறைந்துவிடும். குணமாகிவிட்டதைப் போலத் தோன்றும். ஆனால், மாத்திரைகளை நிறுத்தக்கூடாது. அப்படி நிறுத்தினால் நோயின் தன்மை மாறிவிடும்.

காசநோய்க்காக எடுத்துக் கொள்ளும் மாத்திரைகள் சிலருக்குப் பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம். அதுகுறித்து அடுத்த இதழில் பார்க்கலாம். **களைவோம்...**




# கூகுள், பேஸ்புக் எப்படி சம்பாதிக்கின்றன?

உலகளவில் பெரிய தொழில் நிறுவனங்கள் எப்பொழுதுமே தங்கள் வருமானங்களை கோடிகளில் குவிக்கும். அந்த நிறுவனங்கள் எப்படி இவ்வளவு வருவாயை ஈட்டுகின்றன, எந்தெந்த வகைகளில் அந்த நிறுவனங்களுக்கு வருவாய் வருகின்றது, அதிகளவு வருவாய் ஈட்டும் நிறுவனம் எது என்பது குறித்து இந்தக் கட்டுரையில் காணலாம்.

சவுதி அரேபியா நாட்டின் ஒட்டுமொத்த ஆண்டு வருமானம் 684 பில்லியன் டொலர் (சுமாராக 11 இலட்சத்து 94 ஆயிரம் கோடி இலங்கை). இந்த மொத்த வருவாயை விட அப்பிள், அமேசான், அல்ஃபாபெட், மைக்ரோசொவ்ட் மற்றும் பேஸ்புக் ஆகிய ஐந்து நிறுவனங்களின் வருமானம் (802 பில்லியன் டொலர்) அதிகம்.

இந்த நிறுவனங்கள் இத்தனை கோடி சம்பாதிக்க முக்கிய காரணம் மக்களாகிய நாம்தான். இந்த நிறுவனங்களுக்கு வாடிக்கையாளர்கள் உலகம் முழுவதிலும் பரவியுள்ளனர். அந்த நிறுவனங்களின் பொருட்களை நாம் வாங்குவது, அவர்களின் செயலிகளைப் பயன்படுத்துவதன் மூலம் அவர்கள் சம்பாதிக்கின்றனர். அந்த விவரங்கள் இதோ.

**அப்பிள் நிறுவனம்:**

1976 இல் தொடங்கப்பட்ட அப்பிள் நிறுவனம், 2018 ஆம் ஆண்டில் மட்டும் 265.6 பில்லியன் டொலர் வருமானம் ஈட்டியுள்ளது. இதில் ஐபோன் விற்பனையில் மட்டும் 166.7 பில்லியன் டொலர் வருமானம் வருகிறது. ஐபாட் விற்பனையில் 18.8 பில்லியன் டொலரும், ஐமேக் விற்பனையில் 25.5 பில்லியன் டொ்லரும், ஹெட்போன், வாட்ச் போன்ற போன்ற சாதனங்களின் மூலம் 17.4 பில்லியன் டொலரும், மற்ற சேவைகள் மூலம் 37.2 பில்லியன் டொலர் வருமானமும் சம்பாதிக்கிறது அப்பிள் நிறுவனம்.

**அமேசன்:**

1994 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அமேசன் நிறுவனம், 2018 இல் ஈட்டிய வருமானம் 232.9 பில்லியன் டொலர். இதில் ஒன்லைன் விற்பனையின் மூலம் மட்டும் 123 பில்லியன் டொலர் வருவாய் வருகிறது. மூன்றாம் தரப்பு விற்பனையின் மூலம் 42.7 பில்லியன் டொலர், இணையதள சேவையின் மூலம் 17.2 பில்லியன் டொலரும், கடைகளின் மூலம் 17.2 பில்லியன் டொலரும், பிரைம் சந்தா சேவைகளின் மூலம் 14.2 பில்லியன் டொலர், பிற சேவைகளின் மூலம் 10.1 பில்லியன் டொலர் வருவாய் சம்பாதிக்கிறது அமேசன் நிறுவனம்.

**அல்ஃபாபெட்:**

2015 இல் தொடங்கப்பட்ட அல்ஃபாபெட் நிறுவனம், 2018 ஆம் ஆண்டில் சம்பாதித்த மொத்த வருமானம் 136.8 பில்லியன் டாலர். அதில் கூகுளில், யூரியூப், கூகுள் ப்ளே, ஜிமெயில், கூகுளில் மேப் போன் சேவைகள் மூலம் வரும் வருமானம் மட்டும் 96.3 பில்லியன் டொலர். கூகுள் நிறுவன விளம்பரங்களின் மூலம் 20 பில்லியன் டொலரும், மற்ற சேவைகள் மூலம் 20.6 பில்லியன்ஸீ டாலர் வருமானம் வருகிறது.

**மைக்ரோசொவ்ட்**

1975 இல் தொடங்கப்பட்ட மைக்ரோசொவ்ட் நிறுவனம், 2018 ஆம் ஆண்டு ஈட்டிய வருமானம் மட்டும் பில்லியன் டொலர், ஆளு ஆபிஸ் மூலம் 28.3 பில்லியன் டொலரும்,

மைக்ரோசொவ்ட் அசூர் மூலம் 26.1 பில்லியன் டொலரும், விண்டோஸ் மூலம் 19.5 பில்லியன் டொலரும், கேமிங் மூலம் 10.4 பில்லியன் டொலரும், விளம்பரங்களின் மூலம் 7.0 பில்லியன் டொலரும், நிறுவனங்களுக்கு வழங்கும் சேவைகள் மூலம் 7.0 பில்லியன் டொலரும், சாதனங்களின் விற்பனையின் மூலம் 5.1 பில்லியன் டொலரும், லிங்க்டின் மூலம் 5.3 பில்லியன் டொலரும், மற்ற சேவைகள் மூலம் 2.8 பில்லியன் டொலர் வருமானம் ஈட்டுகிறது.

**பேஸ்புக்:**

2004 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பேஸ்புக் நிறுவனத்தின், 2018 ஆம் ஆண்டு மொத்த வருமானம் 55.8 பில்லியன் டொலர். இதில் பெரும்பான்மையான வருமானம் விளம்பரங்களின் மூலமே வருகிறது. விளம்பரங்கள் மூலம் 55.0 பில்லியன் டொலரும், பிற சேவைகள் மூலம் 0.8 பில்லியன் டொலரும் சம்பாதிக்கிறது பேஸ்புக் நிறுவனம்.



சொல்லேர் உழவு

# இத்தனை சொற்களும் கடலைக் குறிப்பனவா...! 26

கவிஞர் மகுடேசுவரன்

மொழிச்சொற்கள் யாவும் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், இடைச்சொற்கள், உரிச்சொற்கள் ஆகியன அந்தப் பிரிவுகள். இவற்றில் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் தலைமையிடத்தை வகிக்கின்றன. இடைச்சொற்களும் உரிச்சொற்களும் முதலிரண்டுபகுப்புகளானபெயரையும் வினையையும் அண்டியே தம் இருப்பினைக் காட்டிக்கொள்கின்றன. பெயர்ச்சொற்களைப் பற்றியும் வினைச்சொற்களைப் பற்றியும் நாம் தேர்ந்த அறிவினைப் பெற்றுவிட்டால் போதும். சொல்லாற்றலில் நாம் பல படிகள் கடந்தவர்கள் ஆகிவிடுவோம்.



பெயர்ச்சொல் என்பது ஒரு பொருளைக் குறிக்கும். பெயர்ச்சொற்கள் பொருள்,இடம்,காலம்,சினை, குணம்,தொழில் என ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. வினைச்சொல்லாவது ஒரு செயலைக் குறிப்பது.

பெயர் என்பது ஒரு பொருளாக இருக்கும். பொருள் என்றால் கண்ணுக்குத் தெரியத்தக்க, கையால் தொடத்தக்க பருப்பொருளைக் குறிப்பது மட்டுமேயில்லை. கண்ணுக்குத் தெரியாத காலத்தைக் குறிப்பதும் பெயர்ச்சொல்தான். ஆடு, மாடு என்னும் கண்ணுக்குத் தெரியும் பொருளும் பெயர்ச்சொல்தான். மார்கழி, தை என்னும் கண்ணுக்குத் தெரியாத காலமும் பெயர்ச்சொல்தான்.

நடக்கின்ற, நடந்த, நடக்கும் ஒரு செயலைப் பெயர்ச்சொல்லாக்கிவிட முடியும். தேர்தல், பாடல், அழுத்தம், பேறு, கூட்டம் என்று ஒரு வினைச்சொல் விளைவையும் பெயர்ச்சொல்லாக்கிவிட முடியும்.

ஒரு மொழியில் இடம்பெற்றுள்ள பெயர்ச்சொற்களின் இன்றியமையாமையை நாள்முழுக்க விளக்கலாம். பள்ளியில் சேர்ந்ததும் நமக்கு அணில், ஆடு, இலை, ஈ என்று பெயர்ச்சொற்களைத்தான் கற்பித்தார்கள்.

நமது மொழிக்கல்வி ஒரு பெயரை அறிவதிலிருந்து தொடங்குகிறது. ஒரு குழந்தையிடம் மொழியை எப்படிக் கற்பிக்கிறோம் ? "அங்கே பாரு... அப்பா... அது யாரு ? மாமா... இது என்ன... பொம்மை.." என்று ஒவ்வொரு பொருளாகக் காண்பித்து அதன் பெயரைக்கூறி அறிவூட்டுகிறோம்.

பெயர்ச்சொற்களின் அறிவினை வைத்தே ஒருவரின் மொழியறிவைக் கணக்கிடுவார்கள். ஆங்கிலத்தில் ஒருவரின் சொல்லாட்சித் திறத்தினை வளர்த்துக்கொள்ள ஆயிரக்கணக்கான நூல்கள் கிடைக்கின்றன. ஆனால், தமிழில் சொல்லாட்சித் திறத்தினை மேம்படுத்த உதவும் நூல்கள் இல்லை என்றே கூறலாம். அகராதிகட்கு அப்பால் நம் சொல்லறிவினை விரிவாக்கிக்கொள்வதற்குஎன்னென்ன வழிமுறைகள் இருக்கின்றன ? வெறுமனே மொழியிலக்கியங்களைப் படித்துத் தேர்வதுதான் ஒரே வழி.

கடல் என்று ஒரு சொல் இருக்கிறது. இப்புவிப்பரப்பின் மிகப்பெரிய பொருள் அது. நம் தமிழகம் கடல் சூழ்ந்த நிலம். பேரளவில் பரந்து விரிந்த ஒரு பொருளுக்கு எத்தனையோ சொற்கள் இருக்க வேண்டுமே. கடலுக்கு வழங்கப்படும் வேறு சொற்கள் என்னென்ன ? நமக்குத் தெரிந்திருக்கிறதா ? ஒருவரை வழிமறித்துக் கேட்டால் அவர் என்ன சொல்லக் கூடும்? "கடல்னா கடல்தான். அதுக்கு வேற என்ன பேரு இருக்கும்? தெரியலயே..." என்றுதான் கூறுவார். நன்கு கற்றவர்களை இடைமறித்துக் கேட்டாலும் இதுதான் நிலை. பண்டு தொட்டே கடலைக் கலங்கட்டி ஆண்டவர்கள் நாம். ஆனால் நமக்குக் கடலைக் குறிக்கும் வேறு சொற்கள் தெரியவில்லை.

கடல் என்றால் எனக்குச் சில சொற்கள் நினைவுக்கு வருகின்றன. ஆழி என்ற சொல் ஒன்று. ஆழிசூழ் உலகு என்கிறார்கள். சில மீனவர்களிடம் பேசிப் பார்த்தேன். அவர்கள் "கரையருகே உள்ள கடலை ஆழி என்று கூறக்கூடாது" என்றனர். கடற்கரையிலிருந்து உள்ளே சென்று அதன் ஆழ்பரப்புதொடங்குமிடம்தான் ஆழி எனப்படுமாம். ஆழம் தொடங்குமிடம் ஆழி. கடலின் பரந்து விரிந்த தன்மையால் வழங்கப்படும் இன்னொரு பெயர் 'பரவை' என்பது. பறவை என்றால் புள். பரவை என்றால் கடல்.

முந்நீர் என்று அதற்கு இன்னொரு பெயரும் உண்டு. மூன்று வகையான நீர் சேர்ந்த இடம். கடல் என்பது மூவகை நீரின் சேர்திடல்தான். ஆற்று நீர் கடலில் சேர்கிறது. கடற்பரப்பில் பெய்யும் மழைநீர் கடலில் சேர்கிறது. கடலடி நிலத்தின் ஊற்றுநீரும் அங்கே சேர்ந்திருக்கிறது. அதனால் கடலுக்கு வழங்கப்படும் முந்நீர் என்ற பெயர் பெரும்பொருள் மிக்கதாகிறது. கடலைக் கண்டு வியக்க வேண்டியிருப்பதால் அதற்கு வியன்நீர் என்ற பெயரும் உண்டு. 'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் என்று புகழ்பெற்ற பேச்சாளர் இருக்கிறார். அவர் பட்டத்தில் உள்ள வாரிதி என்பதும் கடல்தான். அறிவுக்கடல் என்பதைப்போல கம்பரைப் பற்றிய அறிவுக்கடல் அவர். சமுத்திரம் என்ற சொல் கடலைக் குறிக்கும் வடசொல்.

கடலுக்கு வழங்கப்படும் வேறு பெயர்களை வீரமாமுனிவரின் சதுரகராதி கூறுகிறது. அத்தி, அப்பு, அம்பரம், அம்புராசி, அம்போதி, அரி, அருணவம், அலை, அளக்கர், ஆர்கலி, ஆழி, உத்தி, உந்தி, உப்பு, உவரி, உவர், ஓதம், கலி, கார்கோள், குரவை, சக்கரம், சமுத்திரம், சல்தி, சலநதி, சலராதி, சாகரம், சிந்து, தெண்டிரை, நதிபதி, நரலை, நீராழி, நேமி, யயோத்தி, பரப்பு, பரவை, பாராவாரம், புணரி, பெருநீர், பௌவம், மகராலயம், மகோத்தி, முந்நீர், வாரம் வாரணம், வாரி, வாரிதி, வாருணம், வீரை, வெள;ளம், வேலாவலயம், வேலை.

கடல் என்னும் ஒரு பொருளுக்கு நம் மொழியில் வழங்கப்பட்ட சொற்கள் இவை. இவற்றுள் சில பிறமொழிச் சொற்களாகவும் இருக்கலாம். ஆனாலும் கடல் என்றதும் இச்சொற்களில் பல நமக்கு நினைவுக்கு வரவில்லை என்றால் நமக்குச் சொல்லறிவு போதவில்லை என்பதே பொருள்.

தொடரும்...

# மட்டக்களப்பை விழுங்கத் துடிக்கும் சிங்கள - பௌத்த பேரினவாதம்



மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்பதே தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் நோக்கத்துடன் சிங்கள பேரினவாதம் முன்னெடுத்த திட்டம்தான். இந்தத் திட்டத்துக்கு வடக்கின் பல பிரதேசங்கள் பறிபோய்விட்டன. இப்போது மட்டக்களப்பு மாவட்டத்தையும் கபளீகரம் செய்யும் நோக்குடன் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் முறுத்தானை, குடும்பிமலை, பேர்லாவெளி, ஈரளக்குளம் முதலான தமிழர் பிரதேசங்களே இவ்வாறு மகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கு உள்வாங்கப்பட்டு அவற்றை தனிச்சிங்கள மாவட்டமான பொலநறுவை மாவட்டத்துடன் இணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், இப்பகுதியில் குடியேற்றப்பட்ட சிங்கள விவசாயிகளுக்கு பல கட்ட உதவித் திட்டங்களை வழங்கும் அரசு தமிழ் விவசாயிகளை புறக்கணித்து வருகிறது என குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. மேலும், தமிழ் விவசாயிகளிடம் உள்ள காணிகளை காணி உச்ச வரம்புச் சட்டத்தைப் பயன்படுத்தி பறிமுதல் செய்யப்படவுள்ளன.

ஏற்கனவே கால்நடைகளின் மேய்ச்சல் பிரதேசத்தை மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொண்டுவந்து அப்பிரதேசங்கள் பறிக்கப்பட்டு, அங்கு சிங்களவர்களும் குடியேற்றப்பட்டு விட்டனர்.

பொலனறுவை மாவட்டத்தின் எல்லையோரக் கிராமங்களான இப்பகுதிகள் முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களாக இருந்தன. இவற்றை இராணுவம் கைப்பற்றிய பின்னர், மாகவலி அமைச்சின் கீழ் இப்பகுதிகளில் காணி சுவீகரிப்பு மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

போர் காலத்திலும், ஆயுதம் மௌனிக்கப்பட்ட காலத்தின் பின்னும் மகாவலி அபிவிருத்திப் பிரதேசத்தின் 75 வீதமான நிலப்பரப்புகள் சிங்களவருக்கும், அடுத்து முஸ்லிம்களுக்கும், 2 வீதம் மலையகத் தமிழருக்கும் பகிரப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் எந்த கிழக்கு தமிழருக்கும் காணி வழங்கப்படவில்லை என்பது நாம் நோக்க வேண்டிய முக்கிய விடயம்.

தமிழரின் தாயகமான கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் சிங்கள குடியேற்றங்கள் மூலம் தமிழரின் இனப்பரம்பல் திட்டமிட்டு குறைக்கப்பட்டு விட்டது. மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகளவு தமிழர்கள் வாழ்ந்து வரும் நிலையில், அதையும் கபளீகரம் செய்யும் நோக்குடன் பேரினவாதிகள் திட்டமிட்டு காரியமாற்றுகிறார்கள்.




## கொரியாவின் கதை #21

# காரணமின்றி மக்களை கொன்று குவித்த சர்வாதிகாரி

சுன் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்து, இராணுவத்தை நகரங்களுக்கு அனுப்பியது மக்களுக்கு பிடிக்கவில்லை. தங்கள் நகரங்களில் இராணுவம் ரோந்து சுற்றியது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. க்வாங்ஜூ நகர மக்கள் ஒரு ஜனநாயக இயக்கத்தை தொடங்கினார்கள். அந்த இயக்கத்தை உடனடியாக ஒடுக்கும்படி சுன் உத்தரவிட்டார். அந்த நகருக்குக் கூடுதல் இராணுவத்தினரையும், பீரங்கிகளையும், வானிலிருந்து சுடும் இராணுவ ஹெலிகொப்டர்களையும் அனுப்பினார். முழுபலத்தையும் பயன்படுத்தும்படி இராணுவத்துக்கு உத்தரவிட்டார். அடுத்த சில நாட்கள் கொடூரமான இரத்தக் களறிக்கு ஏற்பட்டது. நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். க்வாங்ஜூ கொலைகாரன் என்று சுன் அழைக்கப்பட்டார்.

இந்தப் புரட்சிக்கு சுன் டூஹ்வானின் நெருங்கிய சகாக்களில் ஒருவரான கிம் டாயேஜங்தான் காரணம் என்று சுன் குற்றம்சாட்டினார். அதைத்தொடர்ந்து அவரைக் கைது செய்து இராணுவ நீதிமன்றத்தில் மரணதண்டனை விதித்தார் சுன். அவருக்கு கருணை காட்டும்படி போப் இரண்டாம் ஜோன்போல் தென்கொரிய அரசுக்குக் கடிதம் எழுதினார். அமெரிக்காவும் போப் கோரிக்கையை ஆதரித்தது. இதையடுத்து கிம்மின் மரண தண்டனை 20 ஆண்டு ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

இந்தக் கலவரங்களுக்கு மத்தியில் 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தென்கொரிய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. ஆட்சி நிர்வாகத்தை கவனிக்க இராணுவ ஜூந்தா அமைக்கப்பட்டது. உளவுத்துறை தலைவர் பொறுப்பிலிருந்து விலகிய சுன் ஒரு உறுப்பினராக மட்டுமே இருந்தார். ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி தன்னை இராணுவ தளபதியாக அறிவித்துக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து, பொம்மையாக அதுவரை இருந்த ஜனாதிபதி சோய் 1980 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தனது பதவியை ராஜினாமா செய்தார். அதாவது சுன் ஜனாதிபதியாக வழிவிட்டார். ஒற்றுமைக்கான தேசிய மாநாட்டு அமைப்பின் 2,525 உறுப்பினர்களில் ஒரு வாக்கு மட்டுமே செல்லாததாக அறிவிக்கப்பட்டு, மற்ற அனைவரும் சுன் ஜனாதிபதியாக ஆதரவு தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டது.

1980 ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் நாள் சுன் முறைப்படி ஜனாதிபதியானார். சமூக அமைப்பை சுத்தப்படுத்துவதாக அறிவித்த சுன், சுமார் 42 ஆயிரம் பேர் எந்தக் காரணமும் சொல்லாமல் பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் கொன்று குவிக்கப்பட்டனர். 1980 ஓகஸ்டிலிருந்து 1981 ஜனவரி வரை ஆறு மாதங்களில் 60 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். இந்த நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தினாலும், அச்சத்தை விதைத்தது. அதாவது சுன் சர்வாதிகாரியானார்.

தென்கொரியாவை சர்வாதிகார நாடாக மாற்றியதை அன்றைய ரீகன் தலைமையிலான அமெரிக்க அரசு ஏற்கவில்லை. உடனே, தனது அரசு அணு ஆயுத உற்பத்தியில் அக்கறை செலுத்தாது. 180 கிலோ மீற்றர் தூரம் 453 கிலோ எடையுள்ள ஆயுதங்களை சுமந்து சென்று தாக்கும் ஏவுகணைகளை மட்டுமே தயாரிக்கும் என்று சுன் அரசு அறிவித்தது. இதை ரீகன் அரசு ஏற்றது. சுன் முழுமையான சர்வாதிகாரியானார். தென்கொரியாவில் எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒழித்தார். ஜனநாயக நீதிக் கட்சி என்ற பெயரில் சொந்தக் கட்சியைத் தொடங்கினார். கொல்லப்பட்ட ஜனாதிபதி பார்க்கைக் காட்டிலும் கூடுதல் அதிகாரங்களை தன்னிடம் குவித்துக் கொண்டார்.

சர்வாதிகாரி சுன்னின் நடவடிக்கைகளை பொறுக்காத வடகொரியா சுன்னை கொல்லத் திட்டம் வகுத்ததாக கூறப்பட்டது. 1983 ஆம் ஆண்டு சுன் பர்மா தலைநகர் ரங்கூன் சென்றார். 1947 ஆம் ஆண்டு கொல்லப்பட்ட தலைவர் ஆங் சான் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த அவர் சென்றபோது, நினைவிடத்தின் கூரையில் பொருத்தப்பட்ட மூன்று சக்திவாய்ந்த குண்டுகளில் ஒன்று வெடித்தது. இதில் தென்கொரியாவின் நான்கு அமைச்சர்கள், சுன்னின் ஆலோசகர்கள் 14 பேர், நான்கு பர்மா அதிகாரிகள் உயிரிழந்தனர். சுன் போக்குவரத்து சிக்கலில் சிக்கி சில நிமிடம் தாமதமாக வந்ததால் உயிர்பிழைத்தார். இந்தக் குண்டு வெடிப்புக்குகாரணமானவர்கள் என்று இருவர் பிடிபட்டனர். அவர்களில் ஒருவர் தன்னை வடகொரிய இராணுவ அதிகாரி என்று ஒப்புக்கொண்டார். சுன் வருகைக்கு சில நிமிடங்கள் இருக்கும் நிலையிலேயே, திட்டமிட்ட நேரத்துக்கு முன்னதாக அலாரம் அடிக்கப்பட்டதால், தவறுதலாக முன்கூட்டியே குண்டு வெடித்ததாக கூறப்படுகிறது.

சர்வாதிகாரி சுன் ஆட்சிக் காலத்தில் தென்கொரியா மக்கள் பணம் அளவுகடந்து கொள்ளையடிக்கப்பட்டது. மக்கள் உரிமைகளை இழந்து, பொருளாதாரம் சீர்குலைந்து வறுமை நிலைமைக்கு தள்ளப்பட்டனர். உயிருக்கு அஞ்சிய நிலைபோய், உயிரைக் கொடுத்தேனும் தங்கள் வாழ்க்கையைச் சீர்படுத்த மக்கள் போராட்டங்கள் வெடித்தன. ஜனநாயகத்துக்கான போராட்டங்கள் தீவிரமடைந்த நிலையில் சுன் ராஜினாமா செய்ய முடிவெடுத்தார்.

அவர் தனது கட்சிப் பதவியை ரோஹ் டாயேவூவிடம் ஒப்படைத்தார். பின்னர் 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற நேர்மையான தேர்தல் என்று இதை குறிப்பிடுகிறார்கள். இந்தத் தேர்தலில் ரோஹ் டாயேவூவை எதிர்த்து, கிம் யங்சாம் மற்றும் கிம் டாயேஜங்கும் போட்டியிட்டனர். இவர்களில் கிம் சிறையில் இருந்தபடியே போட்டியிட்டார். இருவரும் வாக்குகள் 28 மற்றும் 27 சதவீதம் என்று பிரித்ததால் குறைந்த வாக்குகளைப் பெற்றாலும் ரோஹ் வெற்றிபெற்றார். 1988 ஆம் ஆண்டு சுன் தனது பதவியை ராஜினாமா செய்து ரோஹிடம் ஒப்படைத்தார்.

ஆனாலும் சர்வாதிகாரிகளுக்கு அமையும் இறுதிக் காலத்தைப் போலவே சுன்னுக்கும் அமைந்தது. புதிய அரசு அமைந்த ஒரே ஆண்டில் நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சி பெரும்பான்மை இழந்தது. சுன் மீது விசாரணை நடைபெற்றது. க்வாங்ஜூ புரட்சியை ஒடுக்க சுன் மேற்கொண்ட கொடூரமான இராணுவ நடவடிக்கைக்காக அவர் மீது குற்றம் சாட்டியது. தனது கொலைச்செயலுக்கு மன்னிப்புக் கோருவதாக பகிரங்கமாக மக்கள் மத்தியில் அறிவித்தார் சுன். தனது சொத்துக்கள் முழுவதையும் நாட்டுக்கே ஒப்படைப்பதாக கெஞ்சினார். இதையடுத்து பயேக்டம்ஸா என்ற புத்தர் ஆலயத்தில் அவர் தனது நடவடிக்கைகளுக்காக வேலை செய்ய உத்தரவிடப்பட்டார். 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் திகதிதான் வீடு திரும்பினார்.

அதன்பிறகும் அவருக்கு நிம்மதி கிடைக்கவில்லை. 1993 ஆம் ஆண்டுத் தேர்தலில் கிம் யங்சாம் வெற்றிபெற்று ஜனாதிபதியானார். சர்வாதிகாரி சுன் மற்றும் அவருக்கு அடுத்து பொறுப்பேற்ற ரொஹ் டாயேவூ இருவரும் தென்கொரியா மக்களின் பணம் 37 கோடி அமெரிக்க டாலர் அளவுக்கு கொள்ளையடித்திருப்பதாக புதிய குற்றச்சாட்டை சுமத்தினார். கிம் தனது சொந்த ஊழல்களை மறைப்பதற்காகவே இந்த புதிய குற்றச்சாட்டை சுமத்துவதாகவும் விமர்சனங்கள் எழுந்தன.

இதற்கிடையே, 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் தேதி சர்வாதிகாரி சுன் நடத்திய இராணுவ கலகம், க்வாங்ஜூ புரட்சியை ஒடுக்க மேற்கொண்டு கொலை செயல்களுக்காக தண்டனை வழங்கியே தீரவேண்டும் என்ற குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது.இதையடுத்து,சுன் மற்றும் 16 பேர் சதிக் குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீதான விசாரணை முடிவில் 1996 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

தொடரும்...



தமிழ்நாடு நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் பிறந்தவர், சாய் பல்லவி. மலையாளத் திரைப்படமான 'பிரேமம்' படத்தில் நாயகியாக நடிப்பதற்கு முன்னரே பிரசன்னா, மீரா ஜாஸ்மின் நடித்த 'கஸ்தூரி மான்' படத்தில் குழந்தை நட்சத்திரமாகவும், ஜெயம் ரவி நடிப்பில் வெளியான 'தாம் தூம்' படத்தில் ஒரு சிறிய கதாபாத்திரத்திலும் நடித்திருக்கிறார் சாய் பல்லவி.

'பிரேமம்' திரைப்படம் மாபெரும் வெற்றியைப் பெற்றதால், வரிசையாகப் பல படங்களில் நடிக்க வாய்ப்புகள் வந்தன. ஆனால், எதிலும் ஒப்பந்தம் ஆகாமல், மருத்துவம் படிக்க ஜோர்ஜியா சென்றார் சாய் பல்லவி. படிப்பை முடித்தப்பிறகே மீண்டும் சினிமாவுக்கு வந்தார். வீட்டில், 'டாக்டர். சாய் பல்லவி செந்தாமரை' என்ற பெயர் பலகையை மாட்டி வைத்திருக்கிறார்.

மலையாளத்தில், துல்கர் சல்மானுடன் 'கலி' படத்தில் நடித்த சாய் பல்லவி, அதற்குப் பிறகு மூன்று வருடங்களாக எந்த மலையாளப் படத்திலும் நடிக்காமல் இருந்தார். இப்போது, பஹத் பாசில் ஜோடியாக 'அதிரன்' என்ற மலையாளப் படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார். அறிமுக இயக்குநர் விவேக் இயக்கிக்கொண்டிருக்கும் இந்தப் படம், உளவியல் மற்றும் த்ரில்லர் படமாக உருவாகிறது.

தமிழ், தெலுங்கு, மலையாளம் என மூன்று மொழிகளிலும் முன்னணி நாயகியாக இருக்கும் சாய் பல்லவிக்கு கவர்ச்சி பிடிக்காது. "என்னுடைய அம்மா, அப்பா என்னுடைய சந்தோஷத்துக்காக நடிக்க அனுப்பியிருக்காங்க. அவங்க மனசு நோகிற மாதிரி எதையும் செய்யமாட்டேன்" என்பது சாய் பல்லவியின் பதில்.

"நடிகை என்று சொல்வதைவிட, மருத்துவர் என்று சொல்லும்போது எனக்கு ஆத்மதிருப்தி ஏற்படுகிறது. ஒருவரைக் குணப்படுத்துவது மட்டும் இல்லாமல், நோயே வராமல் தடுக்கவேண்டும் என்பதுதான் என் ஆசை" என்பது, 'மருத்துவர்' சாய் பல்லவியின் விருப்பம்.

நல்ல டான்ஸர் எனப் பெயர் எடுத்திருக்கும் சாய் பல்லவி, முறைப்படி நடனம் கற்றவர் இல்லை. மாதுரி தீக்ஷித், ஐஸ்வர்யா ராய் ஆகியோரது நடன வீடியோக்களை சாய் பல்லவியின் அம்மா ராதா, போட்டுக் காட்ட, அதைப் பார்த்து நடனம் கற்றுக்கொண்டாராம்.

தெலுங்கில், சாய் பல்லவி நடிப்பில் வெளியாகி வெற்றிபெற்ற திரைப்படம், 'ஃபிடா'. இப்படத்துக்காக, சாய் பல்லவி குரல் கொடுத்த வீடியோ ஒன்றை அந்தப் படம் வெளியான சமயத்தில், தன் பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டிருந்தார், படத்தின் இயக்குநர் சேகர் கம்முலா. இந்த வீடியோவை இதுவரை 1.5 மில்லியனுக்கும் அதிகமானோர் பார்த்து ரசித்திருக்கிறார்கள்.

## அப்போ கமலுக்கு... இப்போ ரஜினிக்கு...!

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு மும்பையில் தொடங்கி விட்டது. இந்தப் படத்தில் ரஜினி பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார். கடைசியாக பாரதிராஜா இயக்கத்தில் கொடி பறக்குது படத்தில் ரஜினி பொலிஸாக நடித்திருந்தார். அந்தப் படம் 1988 இல் வெளியானது. 30 வருடம் கழித்து மீண்டும் இப்போது அவர் பொலிஸ் வேடத்தில் நடிக்கிறார். படத்துக்கு இன்னமும் பெயர் வைக்கவில்லை. இதில் முக்கிய வேடத்தில் நிவேதா தோமஸ் நடிக்கிறார். இவர் பாபநாசம் படத்தில் கமல் மகளாகவும் ஜில்லா படத்தில் விஜய் தங்கையாகவும் நடித்தவர். இந்த படத்தில் ரஜினியின் மகளாக நடிக்கிறார். இந்த படத்தில் வில்லனாக எஸ்.ஜே.சூர்யா நடிக்கிறார். அனிருத் இசையமைக்கிறார். சந்தோஷ் சிவன் ஒளிப்பதிவு செய்கிறார்.

## அஜித்துடன் கவர்ச்சி நாயகி

எச்.வினோத் இயக்கத்தில் அஜித் நடித்து வரும் படம் நேர்கொண்ட பார்வை. இந்த படத்தை மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் கணவர் போனி கபூர் தயாரிக்கிறார். அஜித் வழக்கறிஞராக நடிக்கும் இந்தப் படத்தில் அவருக்கு ஜோடியாக வித்யா பாலன் நடிக்கிறார். இவர்களுடன் ஷ்ரத்தா ஸ்ரீநாத், அபிராமி, ஆதிக் ரவிச்சந்திரன், டெல்லி கணேஷ் உள்ளிட்டோர் நடிக்கின்றனர். யுவன்சங்கர் ராஜா இசையமைக்கும் இந்தப் படத்துக்கு நீரவ்ஷா ஒளிப்பதிவு செய்கிறார். படத்தின் முதல்பார்வையை வெளியிட்டிருக்கும் படக்குழு, ஓகஸ்ட் 10 ஆம் திகதி படம் திரைக்கு வரும் என்று அறிவித்துள்ளது. இந்நிலையில் பொலிவூட் நடிகை கல்கி கோச்லின் ஒரு பாடலுக்கு நடனமாடியுள்ளார்.

## சர்ச்சையில் காஜல்

இந்தியாவில் இப்போது தேர்தல் காலம். இந்நிலையில், 'பி.எம். நரேந்திர மோடி" என்ற பெயரில் தேர்தல் பிரசார வெளியாகியது. இப்படத்திற்கு எதிராக பல கட்சிகளும் போர்க் கொடி தூக்கியுள்ளன. படத்தில் மோடியாக விவேக் ஓபராய் நடித்துள்ளார். இது பிரசார படம் என்பதால் வாய் திறக்காமல் அமைதி காத்து வருகிறது பொலிவூட் வட்டாரம். ஆனால் எல்லோரையும் முந்திக்கொண்டு இந்த படத்துக்கு தானாக ஆதரவு கொடுத்து, நெட்டிசன்களிடம் வாங்கிக் கட்டியிருக்கிறார் காஜல் அகர்வால்.

## விஜய்காகத் தயாராகும் மைதானம்

விஜய் நடிக்கும் 'தளபதி 63' படத்துக்காக பிரமாண்ட கால்பந்தாட்ட ஸ்ரேடியம் அமைக்க படக்குழு முடிவு செய்துள்ளது. இதுவரை சுமார் 60 வீதப் படப்பிடிப்பு முடிந்துள்ள இப்படத்தில் நயன்தாரா, ஜாக்கி ஷெராஃப், கதிர், யோகி பாபு உள்ளிட்ட பலர் விஜயுடன் நடித்துள்ளனர். படத்தின் சில முக்கியமான காட்சிகளுக்கான படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ளது. கால்பந்தாட்டத்தை மையப்படுத்திய கதை என்பதால், இதற்காக சென்னைக்கு அருகில் உள்ள ஈவிபி ஸ்டுடியோவில் பிரம்மாண்டமான கால்பந்தாட்ட அரங்கம் அமைத்து வருகிறது படக்குழு. இதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இந்த அரங்கில் தான் அடுத்த 50 நாட்களுக்கான படப்பிடிப்பு நடத்தவுள்ளது படக்குழு.

## நீ ஒன்றும் அழகியல்ல...!

நடிகை சமந்தாவுக்கு தனி ரசிகர் பட்டாளம் உண்டு. அவின் சமூகவலைத்தளத்தில் இலட்சக்கணக்கானவர்கள் பின்பற்றுகின்றனர். சமீபத்தில் வெளியான சூப்பர் டீலக்ஸ் படத்தில் அவரின் பாத்திரம் பலவிதமாக விமர்சிக்கப்பட்டது. இந்நிலையில் ஓர் பட விழாவில் அவர் தனது கணவருடன் கலந்து கொண்டார். அதில், நாக சைதன்யா சொல்லும் ஒரு வார்த்தையை ஊகித்து அவர் என்ன சொன்னார் என்பதை சமந்தா சொல்ல வேண்டும் என்ற போட்டி வைக்கப்பட்டது. சைதன்யா சொன்னதை கேட்டதும் அவரை கண்டு முறைத்தார் சமந்தா. அப்படி என்னங்க சைதன்யா சொன்னார் என்றபோது, 'நீ அழகா இல்ல...'ன்னு சொல்லிட்டாராம்.

## ஹொலிவூட்டில் நிவேதா

'ஒரு நாள் கூத்து" படம் மூலம் நாயகியானவர் நிவேதா பெதுராஜ். 'டிக் டிக் டிக்", 'திமிரு புடிச்சவன்" என மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்துக்கொண்டிருக்கிறார் என்று பார்த்தால் ஒரே பாய்ச்சலாக அவர் ஹொலிவூட்டுக்கு தாவிவிட்டார். பொலிவூட்டிலிருந்து பிரியங்கா சோப்ரா, தீபிகா படுகோன், ராதிகா ஆப்தே போன்றவர்கள் ஹொலிவூட்டில் கால்பதித்துவிட்டனர். கோலிவூட் ஹீரோயின்கள் இதுவரை பொலிவூட் வரை மட்டுமே சென்று கொண்டிருந்தனர். அந்த எல்லையை உடைத்து ஹொலிவூட் செல்வதுபற்றி நிவேதா கூறும்போது,'பொன் மாணிக்கவேல், ஜக ஜால கில்லாடி, பார்ட்டி படங்களில் நடித்திருக்கிறேன். அவை விரைவில் திரைக்கு வரவிருக்கின்றன. தமிழ் படங்களில் நடித்ததில் எனக்கு மகிழ்ச்சி. அடுத்து ஹொலிவூட் படத்தில் நடிக்க ஆசைப்படுகிறேன். பெரிய ஆசைதான். ஆனால் அது நிறைவேறியிருக்கிறது." என்று கூறியுள்ளார்.





# ஓர் அடிமை தொடுத்த விடுதலைப் போர்!

கேணல் லொய்ட்டின் நிலத்தில் நான் வசித்தபோது பிற அடிமைச் சிறுவர்கள் நடத்தப்பட்ட விதத்தி லேயே நானும் நடத்தப்பட்டேன். தோட்டத்தில் வேலை செய்யுமளவு எனக்குப் போதிய வயதாகவில்லை என்பதாலும், தோட்ட வேலையைத் தவிர செய்வதற்கு சில வேலைகளே இருந்தன என்பதாலும் எனக்கு நிறைய ஓய்வு நேரங்கள் இருந்தன. மாலை நேரங்களில் மாடுகளை மேய்ப்பது, பறவைகளைத் தோட்டத்தில் அண்டாமல் பார்த்துக் கொள்வது, வீட்டு வாசலைத் துப்புரவாக வைத்துக் கொள்வது, பழைய எஜமானனின் மகள் லுக்ரேசியாவின் ஏவல்களை செய்வது ஆகியவைதான் என் வேலைகள்.

என் ஓய்வு நேரங்களின்போது நான் பெரும்பாலும் செய்வது டானியல் லொய்ட் சுட்டு வீழ்த்திய பறவைக ளைத் தேடியெடுத்து வருவதுதான். டானியல் லொய்ட்டுடனான உறவு எனக்கு அனுகூலமாகவே இருந்தது. என் மீது அன்பு கொண்டுவிட்ட அவன், என்னைப் பாதுகாப்பவனா கவும் இருந்தான். என்னைவிட மூத்த சிறுவர்கள் எனக்கு வேலை சொல்வதை அனுமதிக்காத அவன், தன்னுடைய தின்பண்டங்களை என்னுடன் பகிர்ந்து கொண்டான்.

என்னுடைய பழைய எஜமான ரால் ஒருபோதும் நான் அடிக்கப் பட்டதேயில்லை. பசியையும் குளி ரையும் தவிர வேறெதன் காரண மாகவும் நான் அவஸ்தைப்பட்ட தில்லை. பசியினால் நான் அவதிப் பட்டேன். அதைவிடக் குளிரால் மிக மோசமாக அவதியுற்றேன். கொதிக்கும் கோடை காலத்திலும் உறையும் குளிர் காலத்திலும் நிர்வாணமாகவே நான் திரிந்தேன் காலணிகள் இல்லை, காலுறைகளும் இல்லை, மேல் சட்டையுமில்லை, காற்சட்டையுமில்லை.

முழங்கால்வரையே தொங்கும் முரட்டு சணல் சட்டையைத் தவிர வேறெதுவும் இல்லை. படுக்கையும் எனக்குக் கிடையாது. கடுங்குளிரால் நான் செத்துப் போயிருக்க வேண்டும். ஆனால் குளிர்கால இரவுகளில் ஆலைகளுக்கு சோளத்தைக் கொண்டுபோகும் கோணிப்பை ஒன்றை நான் யாருக்கும் தெரியாமல் எடுத்துக் கொள்வேன். குளிர்ந்த ஈரமான மண் தரையில் அந்தக் கோணிப் பைக்குள் தலையைப் புகுத்திக் கொண்டு பாதங்கள் மட்டும் வெளியே நீட்டிக் கொள்ளுமாறு படுத்துக் கொள்வேன். பனியால் என் பாதங்கள் வெடித்துப் பிளந்து விடும். இப்போது நான் எழுதிக் கொண்டிருக்கும் இந்தப் பேனாவை அந்த வெடிப்புகளில் இருத்திவிட முடியும்.

எங்களுக்கு மாதாந்திர உணவுப் படி கிடையாது. கொதிக்க வைத்த சோளமாவுக் கஞ்சிதான் சாப்பாடு. இந்தக் கூழ் பெரிய மரத்தொட்டியில் இடப்பட்டு தரையில் வைக்கப்பட்டிருக்கும். சிறுவர்கள் அனைவரும் அழைப்பு வந்தவுடன் பன்றிகளைப் போல இத்தொட்டியைச் சூழ்ந்து கொண்டு அவசரமாய் அள்ளிச் சாப்பிட வேண்டும் சிலர் சிப்பிகளைக் கொண்டும், சிலர் மரப்பட்டைகளைக் கொண்டும், சிலர் வெறும் கையாலும் சாப்பிடுவார்கள். கரண்டியால் யாரும் உண்ணுவது கிடையாது. வேகமாக உண்ண முடிந்தவன் நிறையச் சாப்பிட முடியும். பலசாலியானவன் உண்பதற்கு வசதியான இடத்தைப் பிடித்துக் கொள்வான். வெகுசிலர் மட்டுமே சாப்பிட்ட திருப்தியுடன் தொட்டியை விட்டு அகல்வார்கள்.

> சாதாரணமாக அடிமைச் சிறுவர்கள் தாங்கள் வசிக்கிற வீட்டுடன் கொண்டிருக்கும் உறவெல்லாம் என்னைப் பொறுத்தவரை கிடையாது. அந்த வீட்டை விட்டுப் பிரிவது எனக்குக் கடின மாயிருக்கவில்லை. எனது வீடு ஈர்ப்பற்றது. எனக்கு அது வீடே அல்ல.



கேணல் லொய்ட்டின் பண்ணை யிலிருந்து நான் வெளியேறியபோது எனக்கு ஏழு அல்லது எட்டு வயது இருக்கும். சந்தோசமாக நான் புறப்பட்டேன். என் பழைய எஜமானனின் மருமகன் தோமஸ் அல்டினின் சகோதரன் கப்டன் ஹியூ அல்ட்டுடன் வசிப்பதற்காக என்னைப் பால்டிமோருக்கு அனுப்புவது என்ற என் பழைய எஜமானனின் முடிவை நான் கேள்விப்பட்டபோது நான் அடைந்த பரவசத்தை என்னால் எப்போதும் மறக்க முடியாது. நான் புறப்படுவதற்கு மூன்று நாட்கள் முன்புதான் எனக்கு இந்தத் தகவல் கிடைத்தது. என் வாழ்வில் நான் அனுபவித்த மிக சந்தோசமான நாட்கள் அந்த மூன்று நாட்கள்தான். இந்த மூன்று நாட்களும் பெரும்பாலான நேரத்தை ஓடையிலேயேதான் கழித் தேன். பண்ணை வேலையினால் தோலில் ஏற்பட்டிருந்த வெண்செதில் களை சுத்தப்படுத்திக் கொண்டு புறப்படுவதற்குத் தயாரானேன்.

இப்படிச் சொல்வதால் உண்டாகும் உடலைக் குறித்த கவனம் எனக்கு சுயமாகத் தோன்றியது அல்ல. என் உடலைச் சுத்தப்படுத்துவதில் வெகு நேரம் செலவிட்டது, நான் அவ்வாறு செய்ய விரும்பினேன் என்பதால் அல்ல. பால்டிமோருக்கு நான் செல்வதற்கு முன்பு என் பாதங்களிலிருந்தும் முழங்கால்களிலிருந்தும் உலர்ந்த தோலை நீக்கிவிட வேண்டும் என்று லுக்ரேசியா சொல்லியிருந்தாள். பால்டிமோரில் உள்ளவர்கள் மிகவும் சுத்தமானவர்கள். நான் அழுக்காயி ருந்தால் என்னைப் பார்த்து நகைப் பார்களாம்.

தவிர, அவள் எனக்குப் புதியதாக ஒரு ஜோடி காற்சட்டைகளைத் தரப்போகிறாள். என் உடல் அழுக்கை சுத்தமாக நீக்கும் வரையிலும் நான் அந்தக் காற்சட்டைகளை அணிந்து கொள்ளக்கூடாது. ஒரு ஜோடி காற்சட்டைகளை சொந்தமாகப் பெறுவதென்கின்ற நினைப்பே மிக அற்புதமானது. பன்றி மேய்ப்பவர் களால் சொல்லப்படும் சொறிநோயை மட்டுமல்லாது என் தோலை உரித்து விடுமளவு ஊக்கத்தைத் தந்தது அது. எனக்கு ஒரு நன்மை வந்தடையப் போகிறதென்கிற நம்பிக்கையில் முதன்முறையாக ஒரு காரியத்தை செய்யத் தொடங்கிய நான் மிகவும் ஈடுபாட்டுடன் அதைச் செய்தேன்.

சாதாரணமாக அடிமைச் சிறுவர்கள் தாங்கள் வசிக்கிற வீட்டுடன் கொண்டிருக்கும் உறவெல்லாம் என்னைப் பொறுத்தவரை கிடையாது. அந்த வீட்டை விட்டுப் பிரிவது எனக்குக் கடினமாயிருக்கவில்லை. எனது வீடு ஈர்ப்பற்றது. எனக்கு அது வீடே அல்ல. எந்த ஒன்றையும் விட்டுப் பிரிவது போன்ற உணர்வே எனக்கு ஏற்படவில்லை. என் அம்மாவோ இறந்து விட்டாள். நான் எப்போதோ பார்த்த என் பாட்டி எங்கோ தொலைவில் இருக்கிறாள். இரண்டு சகோதரிகளும், ஒரு சகோதரனும் எனக்கு உண்டு. அதே வீட்டில்தான் இருக்கிறார்கள். என்றாலும் எங்கள் அம்மாவிடமிருந்து நாங்கள் சீக்கிரமே பிரிக்கப்பட்டு விட்டதால் எங்கள் அனைவரின் மனதிலிருந்தும் சகோதர உறவு முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டது.

வேறொரு வீட்டை நான் அடைய விரும்பினேன். இப்பொழுது விட்டுச் செல்கிற இந்த வீட்டைவிட எண்ணி மகிழும்படியான ஒரு வீட்டைக் காண்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அவ்வாறான புதிய வீட்டிலும் துயரங்களையும், பசியையும் கசையடிகளையும், நிர்வாணத்தையும் நான் அனுபவிக்க நேரலாம். பழைய வீட்டிலேயே தொடர்ந்து இருந்தாலும் இவற்றிலிருந்து தப்பிவிட முடியாதே என்ற சமாதானமும் எனக்குச் சாதகமாய் இருந்தது. என் பழைய எஜமானனின் வீட்டில் இவற்றையெல்லாம் ஏற்கனவே போதுமான அளவு அனுபவித்து சகித்துக் கொண்டுவிட்டதால் வேறெங்கும், குறிப்பாக பால்டிமோரில் அவற்றை சகித்துக்கொள்ளும் எதிர்ப்பு

தொடர்ச்சி அடுத்தபக்கம்...



# வருமானம் கொட்டும் பனாமா கால்வாய்

கடல் பயணத்தைச் சுருக்குவதால், நாம் அடையும் நன்மைகள் அளப்பரியது. சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் ஸ்பெயின் மன்னர் ஒருவரின் சிந்தையில் உதித்த திட்டம்தான் பனாமா கால்வாய். இந்தக் கால்வாய், இன்று பனாமா நாட்டையே செல்வச்செழிப்பாக மாற்றியிருக்கிறது.

கடந்த 1914 ஆம் ஆண்டு, உலகமே வியந்த பனாமா கால்வாய் கட்டப் பட்டுவிட்டது. பனாமா கால்வாய் ஏன் கட்டப்பட்டது? அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இருந்து மறுமுனையில் உள்ள லொஸ்ஏஞ் சல்ஸ் நகருக்கு கப்பலில் செல்ல வேண்டுமென்றால், தென் அமெரிக்கக் கண்டத்தைச் சுற்றியே செல்ல வேண்டும். 40 நாள்கள், கிட்டத்தட்ட 20,000 கிலோமீற்றர் பயணிக்க வேண்டும்.

உலகிலேயே அபாயகரமான கடல் பகுதி தென் அமெரிக்கா ஹேறப் ஹோர்ன் முனை. இதைக் கடந்தால் தான் மறுபக்கத்தில் உள்ள பசிபிக் கடலை அடைய முடியும். ஹேறப் ஹோர்ன் முனையைக் கப்பல்கள் கடப்பது சவால் நிறைந்த விஷயம். ஆயிரக்கணக்கான கப்பல்கள் இங்கே மூழ்கிப் போயிருக்கின்றன. இந்தக் காலகட்டத்தில், பிரிட்ட னைப் போலவே ஸ்பெயினும் மெக்ஸிகோ, பெரு, பாரகுவே போன்ற தென்னமெரிக்க நாடுகளில் சாம்ராஜ்யத்தை விரிவு செய்துகொண் டிருந்தது.

கி.பி 1530 ஆம் ஆண்டில் ஸ்பெயின் மன்னர் ஐந்தாம் சார்ள்ஸ், ஸ்பெயினில் இருந்து பெரு நாட்டுக்குச் செல்வதற்காக, எளிதான கடல் வழி உருவாக்குவதுகுறித்து யோசித்தார். பனாமா நாட்டில் கால்வாய் கட்டுவதுகுறித்து ஆராயப்பட்டது. கால்வாய் வெட்டுவது சாத்தியமில்லை என்று ஆய்வு முடிவில் தெரிய வர, திட்டத்தைக் கைவிட்டது ஸ்பெயின்.

பிறகு, 1881 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாடு பனாமா கால்வாயை வெட்ட முன்வந்தது. அப்போது, பனாமா நாடு கொலம்பியாவின் பிடியில் இருந்தது. திட்டத்துக்காக 250 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டது. சுமார், 20 ஆண்டுகளாக பிரான்ஸ் வேலை பார்த்துக் கொண்டிருந்தது. கிட்டத்தட்ட 70 கோடி தொன் மண்வெட்டி அகற்றப்பட்டது. திடீரென பிரான்ஸ் நாடு கட்டுமானப் பணியை நிறுத்திவிட்டு, 'எங்களால் முடியாது' என்று ஒதுங்கியது.

பிறகு, அமெரிக்கா, 'நாங்கள் கட்டுகிறோம்' என்று களம் இறங்கியது. 1904 ஆம் ஆண்டு அமெரிக்கா, பணிகளைத் தொடங்கியது. பனாமா நாட்டில் கால்வாய் வெட்டுவதற்குப் பதிலாக, அருகில் உள்ள நிகரகுவா நாட்டில் கால்வாய் வெட்டவே அமெரிக்கா தீர்மானித்தது. பிறகு மனம் மாறி, பிரான்ஸ் விட்டுச்சென்ற இடத்திலேயே அதாவது, பனாமா நாட்டிலேயே கால்வாய் வெட்ட அமெரிக்கா முடிவெடுத்தது.

சுமார் 10 ஆண்டுகள் கழித்து 1914 ஆம் ஆண்டு பணிகள் முடிக்கப்பட்டிருந்தன. ஜோன் வின்ட்லே வால்லஸ், ப்ராங்ன் ஸ்ரீபன்ஸ், ஜோர்ஜ் வாஷிங்டன் ஆகிய மூன்று பொறியியலாளர்கள் தலைமையில் கட்டுமானப்பணி நடைபெற்றது. கிட்டத்தட்ட 50,000 தொழிலாளர்கள் கட்டுமானப் பணியில் ஈடுபட்டனர். 1914ஆம் ஆண்டு ஒகஸ்ட் 15 ஆம் நாள், பனாமா கால்வாய் திறக்கப்பட்டது. கால்வாய்க்குள் தண்ணீர் விடுவதற்காக அணை ஒன்றும் கட்டப்பட்டது. இதன் பெயர், 'மாடன் அணை'. இந்தக் கால்வாய் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, 25,000 பேர் உயிரிழந்தனர். விபத்துகள் தவிர மலேரியா, மஞ்சள் காமாலை, காய்ச்சல் போன்ற நோய்களும் தொழிலாளர்களின் உயிரைக் குடித்தன.

கால்வாய் கட்டி முடிக்கப்பட்ட போது, 400 மில்லியன் அமெரிக்க டொலர் செலவானது. இப்போது, அட்லாண்டிக் கடலில் இருந்து பசிபிக் கடலை 8 முதல் 10 மணி நேரத்தில் அடைந்துவிட முடியும். தினமும் 50 கப்பல்கள் இந்தக் கால்வாயைக் கடக்கின்றன. கப்பல்களின் சரக்குக் கொள்ளளவைக் கொண்டு டோல்கேட் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆண்டுக்கு 15,000 கோடி ரூபாய் பனாமா நாட்டுக்குக் கிடைக்கிறது.

நோர்வேயைச் சேர்ந்த பயணிகள் கப்பல் கிரவுன் பிரின்ஸ், அதிகபட்சமாக 144,344.91 டொலர் களை சுங்கவரியாகச் செலுத்தியுள்ளது. நீச்சல் வீரர் றொபேர்ட் லிபர்ட்டன், குறைவான சுங்கவரி 0.36 டொலர் செலுத்தியுள்ளார். 1928 ஆம் ஆண்டு, இந்தக் கால்வாயை நீந்திக் கடந்த முதல் நீச்சல் வீரர் இவர். 1999 ஆம் ஆண்டு வரை பனாமா கால்வாயின் கட்டுப்பாடு அமெரிக்காவிடம்தான் இருந்தது. பிறகுதான் பனாமா வசம் ஒப்படைக்கப்பட்டது.

பனாமா சிட்டி அருகே, 'பிரிட்ஜ் ஒவ் அமெரிக்கா' என்ற இடத்தில் பசிபிக் கடலில் பனாமா கால்வாய் தொடங்குகிறது. கொலம்பியா நாட்டுக்குள் புகுந்து 'கோலன்' என்ற இடத்தில் அட்லாண்டிக் கடலில், மறுமுனையில் இணைகிறது. சுமார் 82 கிலோமீற்றர் தொலைவுக்கு 31 மீற்றர் அகலம்கொண்ட இந்தக் கால்வாயில், இப்போது ஆண்டுக்கு 15,000 கப்பல்கள் கடந்துசெல்கின்றன. 160 நாடுகளைச் சேர்ந்த 1,700 துறைமுக நகரங்களுக்குப் பனாமா கால்வாயுடன் தொடர்பு உண்டு.

ஒரு பக்கத்தில் கப்பல் செல்லவும் மறுபக்கத்தில் கப்பல்கள் வரும்படியும் இந்தக் கால்வாய் கட்டப்பட்டுள்ளது. பனாமா கால்வாயில் கப்பலை இயக்க கேப்டன்களுக்கு தனித்திறமை வேண்டும். சீனாவைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று, நிகரகுவா நாட்டில் மற்றொரு கால்வாய் வெட்டலாம் என்று அந்த நாட்டுக்கு ஆசையைத் தூண்டியுள்ளது. அதனால், விரைவில் பனாமா கால்வாய்க்குப் போட்டி ஏற்படலாம்.

பனாமா கால்வாய் போலவேதான் சுயேஸ் கால்வாயும். எகிப்தில் அமைந்துள்ளது. இந்தக் கால்வாய் ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையேயான கடல்வழிப் போக்கு வரத்தை எளிதாக்குகிறது. 1878 ஆம் ஆண்டு, எகிப்து நாட்டைப் பிடித்த பிரான்ஸ் மன்னர் நெப்போலியன், முதலில் சுயேஸ் கால்வாய் வெட்டு வதற்கான ஆய்வுப் பணிகளைத் தொடங்க உத்தரவிட்டார். இந்தக் கால்வாய், 1869 ஆம் ஆண்டே கட்டப் பட்டுவிட்டது. சுயேஸ் கால்வாயை வெட்டிய பிரான்ஸ்காரர்கள், பிறகு பனாமா கால்வாயை வெட்ட திட்டமிட்டு தோல்வியடைந்தனர். தோல்வியடைந்தாலும் விதை போட்டது பிரான்ஸ் நாட்டுக் காரர்களே!

---

சக்தியைப் பெற்றிருந்தேன்.

'அயர்லாந்தில் இயற்கையாகச் சாவதை விடு இங்கிலாந்தில் தூக்கிலிடப்பட்டு சாவதே மேல்" என்று சொல்லப்படுவதைப் போல பால்டிமோர் நகரத்தைக் குறித்து எனக்குள் ஏதோவொரு நல்லுணர்வு இருந்தது. அந்த நகரத்தைப் பார்த்தே தீரவேண்டுமென்கிற அடக்க முடியாத ஆர்வம் எனக்கிருந்தது. கோர்வையாகப் பேசத் தெரியாதபோதிலும் கூட என் உறவுக்காரன் டாம் அந்த நகரத்தைப் பற்றி சிறப்பாக வர்ணித்ததன் மூலம் எனக்குள் அந்த ஆசையைத் தூண்டிவிட்டிருந்தான்.

பெரிய வீட்டுப் பண்ணையில் இருந்த எந்தவொரு பொருளையும் அது எத்தனைதான் அழகானதாயும், சக்தி வாய்ந்ததாகவும் இருந்தாலும் வெகுதொலைவில் இருந்த பால்டிமோரில் அவன் பார்த்த ஒரு பொருளின் அழகுக்கும் சக்திக்கும் இணையானதாக என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. அவ்வளவு ஏன்? பெரிய வீடேகூட அதன் அத்தனை ஓவியங்களுடனும் சேர்த்து பால்டிமோரின் பல மாளிகைகளை விடவும் மட்டமான தாகவே இருந்தது. இந்த இடமாற்றத் தினால் எனக்கு எந்தவித அசௌகரி யங்கள் ஏற்பட்டாலும் கூட, அந்த நகரத்தைக் காண்கிற சந்தோசமே அவற்றையெல்லாம் சரிக்கட்டிவிடும் என்று நான் நினைக்குமளவு அந்த ஆசை எனக்குள் உறுதியானதாக இருந்தது. எனவே நான் எதிர்காலத் தின் சந்தோசங்கள் குறித்த நம்பிக்கை களுடன் எந்த வித மனவருத்தங்களும் இல்லாமல்தான் அங்கிருந்து புறப் பட்டேன். (போர் நீளும்)

## ஜெருசலேம் யாத்திரை பயண அனுபவம் – 11

# வியக்க வைத்த மாதுளம் பழங்கள்

மனிதர், உணவுகளைப் பற்றிச். சொல்லும்போது இங்குள்ள பிரபல்யமான சில மரங்கள் பற்றி யாவது சொல்ல வேண்டாமா? மிகப் பழமை வாய்ந்த பைபிள் காலத்து அத்தி மரங்கள், ஒலிவ் மரங்கள் பற்றிய விபரங்கள் சுவையானவை


பேரீஞ்சு (பேரிச்சை) பண்ணை

### இரு முறை விளைச்சல் தரும் மரம்

இஸ்ரேல் ஒரு மத்திய கிழக்கு நாடு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பூர்வ இஸ்ரேலில், திராட்சைக் கொடிகளைப் போலவே நிலப்பரப்பின் கலாசாரக் கருப் பொருட்களில் ஒன்றாக இருந்தது அத்திமரம். அது சுட்டெரிக்கும் கோடையில் நிழல்தரும் மரமாகவும் இருந்ததால் அத்தி மரங்களைச் சாலைநெடுகிலும் நிழலுக்காக நட்டு வளர்க்கும் வழக்கமும் இருந்தது. அதேபோல் திராட்சைத் தோட்டங் களின் வரப்புகளில் அத்திமரங்கள் நடப்பட்டன.


காய்த்துக் குலுங்கும் மாதுளம்பழங்கள்


விற்பனைக்காக அடுக்கி வைக்கப்பட்டுள்ள மாதுளம் பழங்கள்


வயலில் வேலை செய்பவர்கள் இளைப்பாறுவதற்கு ஏற்றதாக அத்திமரம் இருந்தது. பெரிய இலைகளும், பரந்த கிளைகளும் இருப்பதால் அத்திமரம் மத்திய கிழக்கு நாடுகளில் இன்றும் போற்றப்படுகிறது. அத்திமரம் அநேகமாக எந்த மண்ணிலும் வளரக்கூடியது பரந்து விரிந்து செல்லும் அதன் வேர் அமைப்பு, மத்திய கிழக்குப் பகுதியின் நீடித்த, வறட்சிக் காலத்தைத் தாக்குப்பிடிக்க உதவுகிறது. அதன் முதல் பழங்கள் ஜூன் மாதத்தில் அறுவடை செய்யப்படுகின்றன. இஸ்ரேல் நாட்டினர் முதலில் அறு வடை செய்தவற்றை அப்படியே பழங்களாக சாப்பிட்டனர்.

பிந்திய விளைச்சலை உலர வைத்து வருடம் பூராவும் பயன்படுத்தினர். உலர்ந்த அத்திப் பழங்களை தட்டி வட்டமான அடைகளாகவும் செய்தனர் சில சமயங்களில் அவற்றில் பாதாம் பருப்புகளை சேர்த்தனர். அத்திப் பழ அடைகள் எடுத்துச் செல்ல எளிதானவை.

### ஒலிவ் சமாதானத்தின் சின்னம்

திரும்பிய இடங்களிலெலாம் ஒலிவ் மரங்களை இந்த மண்ணில் பார்க்க முடிகின்றது. நம் ஊரில் மாமரங்கள் காணப்படுவது போலத்தான், இங்கேயும் ஒலிவ் மரங்கள் பரவலாக வளர்ந்துள்ளன. அத்திமரம் அளவுக்கு இல்லாவிட்டாலும் ஒலிவ் மரங்கள் அவற்றின் எண்ணெய்க்காகக் கொண்டாடப்பட்டன.

ஒலிவ் மரம் இஸ்ரேலிலும் பிற வளைகுடா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் இயற்கையாகவே காணப்படுகிறது. இது மத்திய தரைக்கடல் பகுதியைச் சேர்ந்த சிறு மரம். இதன் தாயகம் கிரேக்க நாடு ஆகும். இது வெப்ப மண்டல பிரதேசமாகிய, ஆபிரிக்காவிலிருந்து எகிப்தின் வழியாக இஸ்ரேல் நாட்டில் முதன்முதலாக அறிமுகம் செய்யப்பட்டது. இது 815 மீற்றர் அளவு உயரம் வரை வளரும். நாம் பொடி நடையாகச் செல்லும்போது திரும்பிய இடங்களிலெல்லாம் ஒலிவ் மரங்கள் வளர்ந்திருப்பதைக் கண்டோம். ஏறக்குறைய ஆயிரம் வருடமாக வளர்ந்து கனிகொடுக்கும் ஒலிவ் மரங்களையும் இஸ்ரேல் நாட்டில் நேரில் கண்டோம்.


ஒலிவ் தோட்டத்தில் கட்டுரையாளர்

முற்காலங்களில் விளக்குகளை எரிய வைத்து நிரந்தரமாக ஒளி கொடுப்பதற்காக இஸ்ரேல் மக்கள் தெளிந்த எண்ணெயை உபயோகித் துள்ளார்கள். முற்காலத்தில் எப்படி பழங்களில் இருந்து எண்ணெய் எடுத்தார்கள் என்பதை ஒரு கிராமத்தில் நேரில் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. ஒரு முதிர்ந்த மரத்தில் இருந்து வருடத்திற்கு அரை தொன் (500 கிலோ) எண்ணெய் எடுக்கக் கூடிய தரமான பழுத்த காய்கள் கிடைக்கும். யூதர்கள் ஒலிவ்எண்ணெயை குறிப்பாகசமையல் எண்ணெயாகவும், மருந்தாகவும் உபயோகித்து வருகிறார்கள்.

முற்காலங்களில் இஸ்ரேல் நாட்டின் ராஜாக்களை அபிஷேகம் செய்வதற்கு "அபிஷேக தைலமாக" ஆசாரியர்கள் இந்த ஒலிவ் எண்ணெயை பயன் படுத்தினார்கள். ஒலிவ் இலை சமாதானத்தின் சின்னம் மற்றும் நட்பின் அடையாளமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் சின்னத்தில் ஒலிவ் மர இலைகள் இடம்பெற்றுள்ளன என்பதை நீங்கள் அறிவீர்களா?

### செழிக்கும் மாதுளம்பழம்

அத்திப் பழங்கள், ஒலிவ் பழங்களைச் சொல்லி விட்டு மாதுளம்பழங்களை பற்றி நாம் சொல்லாமல் போய்விட முடியாது. மேலிரு பழங்கள் போல, இந்தப் பழமும் வேதகாமத்தோடு சம்பந்தப்பட்டது. மோசேஸ் கானான் தேசத்திற்கு 12 உளவாளிகளை அனுப்பிய சமயம், கானான் தேச நிலச் செழிப்பைக் காண்பிக்கும் முகமாக ஆளுக்கொரு மாதுளம்பழத்தை கையோடு கொண்டுவந்தனர் என வேதகாமத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

இஸ்ரேல் மதகுருமாரின் மேலங்கி ககளில் மாதுளம்பழங்களின் உரு வங்கள் இருந்துள்ளன. நீர்யானையின் தந்தத்தினால் கடையப்பட்ட சிறு மாதுளம்பழத்தை இஸ்ரேல் அருங்காட்சியகம் 1989இல் கொள்முதல் செய்திருக்கின்றது. இது சாலமோன் தேவாலய காலத்து ஞாபகச் சின்னம் என்று கூறி, இந்த அருங்காட்சியகம் பல வருடங்கள் இதை முதன்மைக் காட்சிப் பொருளாக வைத்திருந்துள்ளது. 2004இல் இது போலியானது என்ற சர்ச்சை கிளம்பியது.

கி.மு.6673 காலகட்டத்தில் யூதப் புரட்சி வெடித்தது. ஆலயம் உரோமர்களால் அழிக்கப்பட்டது.யூதப் புரட்சிவாதிகள் வெள;ளி ஷெக்கெல் நாணயத்தை அச்சிட்டுள்ளார்கள். இதில் 3 மாதுளம்பழங்கள் பொறிக் கப்பட்டிருப்பதோடு, புனித ஜெருசலேம் என்றும் பொறிக்கப் பட்டிருந்தன. சில காலம் கோவில் வரிப் பணம் கட்ட இந்த ஷெக்கெல் நாணயங்களே பயன்படுத்தப்பட்டுள் ளன.

கடைகளில் விற்பனையான மாதுளம்பழங்களின் அளவுகள் எம்மைப் பிரமிக்க வைத்தன. அளவில் மிகப் பெரிதானவை இந்த மாதுளம் பழங்கள். இந்த மாதுளம்பழங்கள் சிலவற்றை தாயகத்திற்கு திரும்பி வந்தபோது எடுத்துவர நான் மறக்கவில்லை.

திராட்சைச் செடிகளும் அத்தி மரங்களும் மாதுள செடிகளுமுள்ள தேசத்தில்தான் அவர்கள் குடியிருக்கப் போகிறார்கள் என்று இஸ்ரவேலரிடம் மோசே கூறினார் என்பதை வேத காமத்தில் காண்கிறோம்.

அதிகமான திராட்சை மதுவைப் பெறுவதற்காக, இஸ்ரவேல் விவசா யிகள் திராட்சைச் செடிகளை நன்கு கவனித்துக்கொள்ள வேண்டியிருந்தது. மது தயாரிப்பதற்காகவே திராட்சை முக்கியமாக பயன்படுத்தப்பட்டாலும், இஸ்ரவேல் நாட்டினர் திராட்சையை அப்படியே பழமாகவும் சாப்பிட் டர்ர்கள், உலர வைத்தும் சாப்பிட் டார்கள்.

இவர்களின் சாப்பாடு பற்றி சொல்ல வந்தபோது, முக்கியமான நான்கு பழங்கள் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.. இன்னும் இரண்டு பழங்களைப் பற்றி சொல்லவில்லையே... தோடம்பழம். ஒன்று மற்றையது பேரீஞ்சு (பேரீச்சை).

தொடரும்...

# நான்காவது சர்வதேச இதழியல் மாநாடு சமூக நலனை முன்னிறுத்தாத நிகழ்வாக..?



லம்போதரன்

"கடந்தஇருநாட்களாக"பன்னாட்டு இதழியல் மாநாடு" என்ற பெயரில், யாழ்ப்பாண பொது நூலகக் கேட்போர் கூடத்தில் ஒரு கூட்டம் நடந்தது. அதில் தினகரன் சார்பில் நானும் ஆலோசகர் எம்.ஏ.எம்.நிலாம், பிரதி ஆசிரியர் அருள் சத்தியநாதன் ஆகியோரும் கலந்துகொண்டோம். சென்னைப் பல்கலைக்கழகத்தின் தொடர்பியல் துறைப் பேராசிரியர் கோபாலன் ரவீந்திரன், பேராசிரியை மீனாட்சி பாரதி, சென்னைப் பல்கலையின் தொடர்பியல் துறை மாணவ, மாணவிகள் முதலானோர் கலந்துகொண்டிருந்தார்கள். அவர்களுடன் சீன வானொலியின் தமிழ்ப்பிரிவு தலைவி கலைமகள் தலைமையிலான குழுவினரும் வந்திருந்தார்கள். பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்துகொண்டு சிறப்பித்தார். இவர்கள் தவிர, கலாநிதி ஆறு திருமுருகன், பாதுகாவலன் ஆசிரியரான அருட்தந்தை ஏன்சிலி றொஷான் அவர்கள், யாழ் எப்.எம்.கட்டுப்பாட்டாளர் முருகேசு ரவீந்திரன் இந்த நிகழ்ச்சிக்கு வாழ்த்துரை வழங்கினார்கள். இந்த மாநாடு பற்றி நிறைய எழுதலாம் என்றிருக்கின்றேன்."

இவ்வாறு நடைபெற்று ஓய்ந்த இதழியல் மாநாட்டை முன்னிறுத்திய குறிப்பொன்றை தனது முகநூலில் எழுதியிருக்கிறார் விசு கருணாநிதி. அவர் ஓர் எழுத்தாளராகவும் ஒலிபரப்பாளராகவும் செய்தி ஆசிரியராகவும் என இதழியலோடு தொடர்புபட்டவர். அத்துடன் இந்த மாநாட்டில் கலந்து கொண்டவரும் கூட.

இந்த இதழியல் மாநாட்டை பற்றிப் பலருடன் பேச முற்பட்டபோது இரு விதமான கருத்துக்களை நாம் எட்டக்கூடியதாக இருந்தது. மேலோட்டமாக இதை ஒரு நிகழ்வாகக் கருதி இதில் பங்குகொண்டவர்கள் முதல் வகையினர். இதன் ஆழத்தை நன்கு அறிந்து கொண்டு செயற்பட்டவர்கள் அல்லது விலகி நின்றவர்கள். இவர்கள்தான் இரண்டாவது வகையினர். இந்த வகையில் முதல் வகையினரின் கருத்திப்படி ஒரு நல்ல மாநாடு. நல்ல அமர்வு. நல்ல கருத்தாடல்கள் எனப் பல விடயங்களை உள்ளடக்கியதாக அமைந்து காணப்பட்டதாகச் சொன்னார்கள்.

இரண்டாவது வகையினரின் கருத்துக்களில்இப்படியான மாநாடுகள் ஒரு பரந்துபட்ட அடிப்படையில் பல நோக்கச் செயற்பாடுகளோடு எமது மண்ணில் ஆரம்பந்தொட்டுக் காணப்படும் இதழியல் வரலாற்றை இணைத்துக் கொண்டதாகவும் அதனைப்பிரதிபலிப்பதாகவும் அமைய வேண்டும் என்பதில் குறியாகவிருந்து தமது கருத்தைத் தெரிவித்தனர். ஒரு குறுகிய வட்டத்தையும், குறுகிய நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட இந்த மாநாட்டின் பின்னணியில் ஒரு அரசியல் நோக்கம் இருந்தது எனக் குற்றஞ்சாட்டினார்கள். அதுமட்டுமல்லாமல் இந்த அமைப்பாளர்களால் கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட சர்வதேச மகளிருக்கான மாநாடு பல மகளிர் செயற்பாட்டாளர்களையும், செயற்பாட்டு நிறுவனங்களையும், அது பற்றிச் சதா சிந்தித்துச் செயற்படுபவர்களையும், போராடுபவர்களையும் உள்ளடக்காமல், அவர்களைப் புறந்தள்ளிவிட்டுச் செயற்பட்டதனை ஞாபகப்படுத்தினர்.

இவர்களால் முன்னெடுக்கப்பட்ட மகளிர் மாநாடானாலும் சரி, இதழியல் மாநாடானாலும் சரி அவர்கள் தம்மைச் சில ஈனங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் தற்காப்பு நடவடிக்கைகளுக்காகவே நடத்தினர் என அவர்கள் குற்றஞ் சுமத்தினர். பல உலகமறிந்த பேராளர்களையும், பேச்சாளர்களையும், உள்ளூர் பிரமுகர்களையும், அதிகாரிகளையும் மற்றும் பலரையும் பலிக்கடவாக்கித் தன்னை முன்னிலைப்படுத்துபவராக காணப்படும் இம்மாநாட்டு முக்கியஸ்தருக்கு இது போன்ற செயற்பாடுகளினூடாகப் பெற்றுக்கொள்ள வேண்டிய அல்லது சாதித்துக் கொள்வதாகக் காட்டிக் கொள்ள வேண்டிய தேவைகள் பல உண்டு என ஒரு பகுதியினர் சந்தேகிக்கின்றனர்.

**செய்தியே எழுதத் தெரியாத பலர் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளனர். இந்த மாநாடு வெறுமனே ஒரு கேலிக்கூத்து பெயர் புகழ், பணம் சம்பாதிப்பதற்காகப் போலியாக நடத்தப்பட்டமாநாடு இது.**

சரி இந்த மக்களின் சந்தேகங்களைப் புறந்தள்ளி விட்டுப் பார்ப்போம். கடந்த காலங்களில், அதுவும் போர்க் காலங்களில் தமது உயிரைப் பணயம் வைத்து இதழியல் வரலாற்றில் முக்கிய இடத்தை பிடித்துக்கொண்ட பலர் இன்னும் உயிரோடுதான் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரது தலையைக்கூட மாநாட்டில் காணமுடியவில்லை..! ஏன்?

அதுமட்டுமின்றி தற்போது நடைமுறையிலுள்ள இதழியலோடு சம்பந்தப்பட்ட பல ஜம்பவான்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட வேண்டிய கதிரைகளில் அந்தத்துறை சம்பந்தப்படாதவர்கள் அழைக்கப்பட்டு அமர்த்தப்பட்டு ஆசியுரைகளும் பெறப்பட்டு மாநாடு நடத்தி முடிக்கப்பட்டது. இந்த மாநாட்டை நடத்தி முடித்து எதைச் சாதிக்க நினைத்தாரோ அந்த நாடக நடிகர் அதைச் சாதித்துவிட்டார்.

இப்படிப்பட்ட குறுகிய ஒரு நோக்கத்தோடு நடத்தப்பட்ட இதழியலோடு சம்பந்தப்பட்டவர்கள் பலருக்கு அழைப்பு விடுக்கப்படாமலும் நடத்தப்பட்ட மாநாட்டில் ஆளுநர், ஆறு திருமுருகன் போன்ற பலர் பகடைக்காய்கள் ஆக்கப்பட்டுள்ளனர் என்பது கவலைக்குரிய விடயம். இப்படியானவர்களை வைத்துக் கொண்டு சமூக விரோதச் செயலில் ஈடுபடுபவர்கள் தம்மை நியாயப்படுத்திக் கொள்வதற்கு இவர்கள் தெரியாமல் துணைபோகின்றார்கள்.

விசு கருணாநிதியின் முகநூல் பதிவுக்குப் பலர் வாழ்த்தியும் எதிராகவும் தமது கருத்தைப் பதிவு செய்திருக்கின்றன. அதில் அமலன் அமலன் என்றொரு முகநூல் நண்பர் தனது கருத்தைப் பின்வருமாறு பதிவு செய்திருக்கிறார்.

"இந்த மாநாட்டுக்கு அங்கீகாரம் இல்லை. போர்க் காலத்தில் பணியாற்றிய செய்தியாளர்கள் பலர் இன்றும் வடக்கு கிழக்கு மற்றும் கொழும்பு போன்ற பிரதேசங்களில் வாழ்கின்றனர் ஊடகத் தொழிலையே செய்து கொண்டுமுள்ளனர். ஆனால் செய்தியே எழுதத் தெரியாத பலர் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளனர். இந்த மாநாடு வெறுமனே ஒரு கேலிக்கூத்து பெயர் புகழ், பணம் சம்பாதிப்பதற்காகப் போலியாக நடத்தப்பட்ட மாநாடு இது.

இந்த மாநாட்டை நடத்தியவர்களில் எத்தனை பேர் போர்க் காலத்தில் தமிழ் ஊடகத்துறை எதிர்கொண்ட அச்சுறுத்தல்களைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்? யாழ். ஊடக அமையத்தின் செய்தியாளர்களில் எத்தனை பேர் இந்த மாநாட்டில் பங்குபற்றினார்கள்? இப்படி ஒரு மாநாடு நடக்கிறது என்று தெரிந்து அவர்கள் வெட்கப்பட்டதாக அறிந்தேன் ஊடகத்துறைக்கே சம்பந்தம் இல்லாதவன் எல்லாம் வந்து குதிரையோடுறான், சவாரி விடுகிறான் என்று எண்ணி யாழ். ஊடக அமையத்தில் உள்ள செய்தியாளர்கள் பலர் சிரித்துக் கொண்டனர் எனவும் கேள்வி எனப் பதிவிட்டிருக்கிறார்.

இதில் ஒரு முக்கியமான கருத்துப் பதிவொன்றும் இடம் பெற்றிருக்கிறது. அதுதான் இந்த மாநாட்டை நடத்தியவர்களில் ஒருவரின் உண்மையான நிலைப்பாட்டை பற்றி அவர் பதிவு செய்திருக்கிறார்.

**ருசாங்கன் கோடீஸ்வரனின் பதிவு இது.**

"அருமையான கோரிக்கையும், பதிவும். முதலில் அதைச் செய்துவிட்டுத்தான் பிறகு ஊடகத்துறை தொடர்பான எந்தப் பணியையும் முன்னெடுக்கவேண்டும். ஊடகத்துறையின் பெயரால் பயிற்சிக் கல்லூரிகளை நிறுவி, கோடி கோடியாக வெளிநாட்டுப் பணத்தைப் பெற்று, விருதுகள் வழங்கி, விழாக்கள் கொண்டாடி என்று எத்தனையோ பணிகளைச் செய்துகொண்டிருப்பவர்கள், இன்னமும் ஒரு தொழில் வாண்மையாக அங்கீகரிக்கப்படாத ஒரு துறையைத்தான் தூக்கிக் கொண்டு திரிகிறோம் என்பதை ஏன்

தொடர்ச்சி 20-ம் பக்கம்...

9-ம் பக்க தொடர்ச்சி...

ஆணவம் மிக்க கையாட்களின் கண்மூடித்தனமான நடவடிக் கைகளால் தங்கள் உரிமைகளை இழக்கும் அதிகாரமற்ற மக்களுக்கான ஒரே பாதுகாப்பாக மிகக்கடுமையான சுதந்திர நீதித்துறையே காணப்படு கின்றது.

சட்டம் மற்றும் நீதியென்ற பேரில் நீதியைப் பாழடிப்பதற்கான அனைத்து வழிமுறைகளும் அதிகாரம் மிக்கவர்களிடம் உள்ளன என்பதையும் நீதித்துறை அறிந்து வைத்திருக்கவேண்டும்.

கோட்டபாய ராஜபக்ஷவிற்கும் வசந்த கரன்னாகொடவிற்கும் வழங்கப்பட்ட நீதித்துறை சலுகைகள் இலங்கையில் நீதி குறித்த கவலைகளை உருவாக்கியுள்ளன. அவர்கள் இருவர்களிடம் காணப்பட்ட சட்ட வளங்கள் மற்றும் பொருளாதார வளங்கள் காரணமாக மாத்திரம் தங்களுக்கு சாதகமான தீர்ப்புகளை பெறமுடிந்தது என தெரிவிக்க முடியாது. ஊடகங்கள் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்துள்ளது போன்று அவர்களுக்கு அரச கட்டமைப்பிற்குள் இயங்கும் வலையமைப்புகளின் ஆதரவும் பாதுகாப்பும் உள்ளது. இந்த வலையமைப்புகள் அரசியல் கட்டமைப்பில் மிகவும் வலுவான வர்களாக காணப்படுபவர்களையும், வர்த்தக சமூகத்தின் மிக முக்கிய நபர்களையும், சட்ட அமுலாக்கல் துறையின் சில அதிகாரிகளையும் இணைக்கின்றன. இந்த வலைய மைப்புகள் தங்கள் தனிப்பட்ட அரசியல் நலனிற்காக நீதித்துறையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடிய அதிகாரம் மிக்கவர்களின் புதிய கூட்டணியைக் கொண்டுள்ளன.

வசந்த கரன்னாகொடவின் வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப் பட்ட அன்றைய தருணத்தில், சக்தி வாய்ந்த வலுவான கூட்டணிக்கு எதிராக நீதி கோரும் அதிகார மற்றவர்களிற்கு நீதி எவ்வாறு மறுக் கப்படுகின்றது என்பது புலனாகியது. இந்த வழக்கில் ஒருவராக ஆஜரானவர் சரோஜினி நாகநாதன். இவர் கடற்படையினரால் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட இளைஞன் ஒருவரின் தாய். இந்த வழக்கில் ஆஜரான இன்னொருவர் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட. இவருக்கு வர்த்தக சமூகத்தின் செல்வாக்கு மிக்க சிலரும், அரசாங்கத்தின் சிலரும் ஆதரவளித்தனர் போல தோன்றியது.

## லசந்த விக்கிரமதுங்க படுகொலை, பிரதீப் எக்னலிகொட காணாமலாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை, 11 இளைஞர்கள் கடத்தப்பட்டமை போன்ற சம்பவங்கள் நீதிபதிகள் மத்தியில் ஆராயப்படும் சிந்திக்கப்படும் விடயங்களாக காணப்படக்கூடாதா?



இருவருக்கும் எவ்வளவு அதிகாரம் உள்ளது என சிந்தித்தால் அது பாரிய வித்தியாசத்தைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இந்த அதிகார சமநிலையற்றதன்மை நீதிமன்றத்தில் காணப்படும் வேளை இவ்வாறான வழக்குகளில் நீதிபதிகள் வெளிப்படுத்தவேண்டிய உணர்வுபூர்வ தன்மை என்பது நீதிபதிகள் மத்தியில் மனச்சாட்சிக்கும் ஆழ்ந்த சிந்தனைக்குமான கருப்பொருளாக அமையும் என எதிர்பார்ப்போம்.

நீதித்துறையின் கவனத்தை ஈர்க்கவேண்டிய மற்றொரு விடயமும் உள்ளது. கடந்த பல வருடங்களாக மனித உரிமை மீறல்களுக்காக நீதித்துறையிடம் நீதி கோரிய தாய்மார்களும் தந்தைமார்களும் மனைவிமார்களும் பிள்ளைகளும் வறியவர்களாவும் எங்கள் தேசத்தின் குறைந்த சலுகைகளை அனுபவிப்பவர்களாகவும் அரசாங் கத்தினாலேயே நீதி மறுக்கப்பட்ட வர்களாக உள்ளதையும் நீதவான் நீதிமன்றம் முதல் உச்ச நீதிமன்றம் வரை உள்ள நீதிபதிகள் கருத்தி லெடுத்திருப்பார்கள் என நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

பல தசாப்தங்களாக வலுவான ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் திலிருந்து அவர்களிற்கு நீதி கிடைக்காததன் காரணமாகவே அவர்கள் நீதித்துறையிடமிருந்து நீதிக்காக பிரார்த்திக்கின்றனர்.

அவர்களுக்கு நீதி கிடைப்பதை எங்கள் அரச ஸ்தாபனங்கள் திட்டமிட்டு தடுத்துள்ளன என்பது வெளிப்படையான விடயம். இதன் காரணமாக தற்போதைய அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனது பதவிக்காலத்தின் முதல் இரண்டு வருடங்களில் தற்போது அவர்களுக்கு நீதியை மறுக்காத நீதித்துறை உள்ளது என தெரிவித்து வந்தது.

இவ்வாறான வாக்குறுதிகள் வழங்கப் பட்ட போதிலும் நீதிமன்றத்திற்குச் சென்று நீதி கோருவது என்பது பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் பாதிப்பை எதிர்கொள்ளும் அனுபவமாக மாறியுள்ளது என்பதை நாங்கள் பார்க்கக்கூடியதாக உள்ளது.

அப்படியானால் இதன் உண்மை யான அர்த்தம் என்னவென்றால் நீதிக்காக நீதிமன்றம் வரும் பாதிக்கப் பட்டவர்களின் குடும்பத்தவர்களுக்கு அது இன்னொரு மனவேதனையை ஏற்படுத்தும் விடயமாக அமைந் துள்ளது.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை, பிரதீப் எக்னலிகொட காணாமலாக் கப்பட்டு படுகொலை செய்யப் பட்டமை, 11 இளைஞர்கள் கடத்தப்பட்டமை (இதில் திருமதி நாகநாதனின் மகனும் ஒருவர்) போன்ற சம்பவங்கள் நீதிபதிகள் மத்தியில் ஆராயப்படும் சிந்திக்கப்படும் விடயங்களாக காணப்படக்கூடாதா? நான் நினைக்கின்றேன் நிச்சயமாக அவை அவர்கள் மத்தியில் பேசப்படும் விடயமாக காணப்படவேண்டும். ஏனென்றால், இந்தச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட நீதி என்பது அதிகாரம் மிக்கவர்களினதும் நீதியை மறுக்க முயலும் வலுவானவர்களின் வலுவான கூட்டணியினதும் அரசியல் அபிலாசைகளுடனும், பின்னிப்பிணைந்துள்ளது.

இலங்கையின் நீதி அமைப்பு புதிய அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றது என தெரிவிப்பது மிகையானதில்லை. ஏனென்றால், நீதி என்ற அடிப்படை விடயம் தற்போது அளவுக்கதிகமாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அதிகாரத்திற்கும் நீதிக்கும் இடையிலான இடைவெளி மங்கலாக்கப்பட்டுள்ளது.

தங்களின் சட்ட வாதத்தினால் நாட்டின் முக்கிய பெரும் பிரமுகர் களைக் காப்பாற்றும் ஜனாதிபதி சட்டத்தரணிகளும் இது குறித்து விவா திக்கவேண்டும். என்றாவது ஒரு நாள் இந்த ஜனாதிபதி சட்டத்தரணி களில் ஒருவராவது அதிகாரம் மிக்கவர் களின் வலுவான கூட்டணிக்கு எதி ராக நீதி கோரும் தனியான ஆதர வற்ற தாய்மார்களுக்காக ஒரு அரை நாளாவது ஆஜராவார்கள்.

நீதியினை பின்பற்றி வாழ்பவர்கள் நீதி என்பது மனச்சாட்சியுடன் தொடர் புடையது என்பதை வெளிப்படுத்தும் நாளாக அந்த நாள் அமையும்.

19-ம் பக்க தொடர்ச்சி...

கண்டுகொள்ளவில்லை.


நான் அறிந்தவரையில் அச்சகப் பணியாளருக்கு ஈடான ஒரு நிலைதான் ஊடகப் பணியாளருக்கு இலங்கை அரசியல் யாப்பின்படி இட மளிக்கப்பட்டிருக்கிறது. முதலில் அதை மாற்றிவிட்டுத்தான் இனி இந்த ஊடகத்துறை பற்றிய பேச்சை யெல்லாம் ஆரம்பிக்க வேண்டும். இந்தப் பணிக்கான முன்னெடுப்பை, ஒரு முழு செயலியக்கமாக நீங்களே தலைமை தாங்கி முன்னெடுங்கள்! இறுதி வெற்றி பெறும்வரையில் தொடர்ந்துழைப்போம் என்று விசு கருணாநிதியின் பதிவுக்குப் பதில் பதிவை இட்டிருக்கிறார்.



மாநாட்டைப்பற்றியோ அல்லது அது தொடர்பான நடவடிக்கைகளையோ கொச்சைப்படுத்துவதல்ல இந்தக் கட்டுரையின் நோக்கம். அண்மைக் காலமாக நன்மையான விடயங்களை முன்னெடுப்பதாகக் காட்டிக் கொண்டு இது போன்று ஒரு சமூகப் பொறுப்பற்ற விதத்தில் சுய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக எடுக்கப்படும் நிகழ்வுகளின் அடி ஆழங்களை மக்களுக்கு முன் நிறுத்தி நியாயம் கேட்க வேண்டும். ஏனெனில் வட பகுதி மக்களைக் காட்டி அவர்களுக்கு நன்மை அளிப்பதெற்கென்றுதானே பல விடயங்கள் செய்யப்படுகின்றன. ஆனால் அவற்றில் பல மக்களைச் சென்றடைவதில்லை அல்லது அவை கொண்ட குறிக்கோளை நிறைவேற்றுவதுமில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு. அத்துடன் அது பல வழிகளில் நிரூபிக்கப்பட்டும் இருக்கிறது.

போருக்குப் பின்னான காலப்பகுதி களில் வட பகுதிக்கு நிவாணம் அழிக்கிறோம் என்று வந்த எந்தச் செயற்பாடுகளிலும் புனிதத்தன்மை இருக்கவில்லை. அது தொண்டர் நிறுவனங்களானாலும் சரி, நிதி நிறுவனங்களானாலும் சரி, கலை பண்பாட்டுச் செயற்பாடுகளானாலும் சரி, அரச நிறுவனங்களானாலும் சரி, தனியாருக்குச் சொந்தமான வணிக நிறுவனங்களானாலும் சரி இவை அனைத்தும் ஏதொ ஒரு வகை யில் வடக்கு மக்களின் இரத்தத்தை நேரடியாகவோ அல்லது மறைமுக மாவோ குடிப்பதாகவே காணப்பட்டி ருக்கிறது. அது மட்டுமல்லாது அவை ஒரு அரசியற் செயற்பாட்டுப் பின்னணிகளையும் நிகழ்சி நிரல்களையும் கொண்டு இயங்குப வையாகவும் காணப்பட்டிருக்கிறது. அந்த நிலை தொடர்ந்தும் இருந்து வருகிறது.

இவர்களுக்குப் பின்னணி இசை கொடுக்க வெனச் சில ஊடகங்களும் செயற்பட்டுவருகின்றன. மேற் சொன்ன ஒரு சமூகப் பொறுப்பற்ற விதத்தில் நடத்தப்பட்ட நிகழ்வைக் கூட ஊதிப் பெருப்பித்துச் செய்தியை வெளியிட்ட ஊடகங்களும் உண்டு. பார்தால் அவை தனிப்பட்ட உறவு சார்ந்ததாகவும் காணப்பட்டது மிகவும் வேடிக்கைக்குரிய விடயம் எனலாம். எனவே இத்தகைய செயற்பாடுகளைத் தட்டிக் கேட் காது இருந்தோமானால் மேற்குறிப் பிட்டவர்களைப் போல பல நடவடிக்கைகள் தொடர்ந்து நடை பெறப்போகிறது. சுய நலன்களை விட்டு எமது சமூக நன்மைக்காக வாவது வாய் திறந்து பேச முற்படு வோமாக.



# அந்த ஒரு நிமிடம்...!

எஸ்.கணபதி

சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியாரினால் இயற்றப்பட்ட "குறை ஒன்றும் இல்லை" என்ற அந்தப் பாடல் வரிகளை வயலினில் வாசிப்பதில் சுகத்தை காணும் ஆனந்தராமன், அன்றும் அந்த ராக மாலிகையின் அடிப்படையிலமைந்த பாடலை வாசிப்பதற்குச் சபையோரின் வேண்டுகோளே காரணமாயிருந்தது.

கடையநல்லூர் வெங்கட்ராமனின் இசை வடிவத்தில் பிரபல சங்கீதப் பாடகி எம்.எஸ்.சுப்புலட்சுமியே முதன்முதலில் இப்பாடலைப் பாடியிருந்தார். பல்லவி, அனுபல்லவி தொட்டு முதல் சரணம் வரை சிவரஞ்சனியில் இசையமைக்கப்பட்டிருக்கும். இரண்டாவது சரணம் காபி ராகத்திலும் மூன்றாவது சரணம் சிந்து பைரவியிலுமாக ஒரு ராகமாலிகை வடிவமைத்திலமைந்த இப் பாடல் கச்சேரிகளின்போது "துக்கடா" வாகப் பாடப்பட்டு வருகிறது.

பலத்த கரகோஷத்தின் நடுவே ஆனந்தராமன் கைவிரல்கள் சுருதி சேர்க்கத் தொடங்கின. மிருதங்கமும், தவிலும், கெஞ்சிராவும் என எல்லாப் பக்கவாத்தியகாரர்களும் நிமிர்ந்து இருந்து ஆயத்தமானார்கள்.

**நேரம் மாலை 08 மணி 05 நிமிடம் 13 செக்கன்**

வருடாவருடம் திருவிழாவின்போது நடைபெறும் இசைக் கச்சேரியில் ஆனந்த ராமனின் வயலின் கச்சேரியும் இடம்பெறும். ஏறத்தாழ குன்னக்குடியின் கச்சேரியைக் கேட்பதுபோல இருக்கும். அன்று கூட்டமும் அலைமோதும். சிறுவயதில் ஆனந்தராமன் தன் தந்தையுடன் கூடவந்து கச்சேரிக்குச் சுருதி போட்டது இன்னும் ஞாபத்தில் உண்டு. எனவே ஆனந்தராமனுக்குப் பல ஆண்டுகள் பரீட்சயமான மேடை அது.

சிறு வயதில் வயலினைக் கையிலெடுத்துக் கச்சேரி செய்யத் தொடங்கியதால், பல இசைக் கலைஞர்களுக்கு ஆசிரியராக இருப்பவர் ஆனந்தராமன். வழமையாக இசைக் கலைஞர்களுக்கு இருக்கின்ற பலவீனங்கள் இல்லாத மனிதராக இருப்பதனால் ஆனந்தராமனுக்கு ஏகப்பட்டவர்கள் மாணவர்களாக வாய்ப்புக் கிட்டியது. கலியாண வீட்டுக் கச்சேரிகளானாலும் சரி, கோயில் திருவிழாக் கச்சேரிகளானாலும் சரி எல்லா இடங்களிலும் கச்சேரிக்கும் முன்னும், பின்னும் ஒரு சிறு கூட்டமே அவரைச் சூழ்ந்து நிற்பதைக் காணலாம். அவர் இசைபற்றிப் பேசுவதை இரசிக்க வென்றே ஒரு கூட்டம் எப்பவும் அவரைச் சூழ்ந்து நிற்கும். அத்தனை இசைஞானம் கைவரப் பெற்றவர் அவர்.

அவரின் இசைப் புலமை தெய்வீக மானது என்பதற்கு ஒரு கதையை அவர் ஊரார் சொல்லுவர். ஆனந்தராமனின் வகுப்புத் தோழர் ஒரு விவசாயி.

**வயலின் இசை மட்டும் மண்டபத்தை நிரப்ப சபை அமைதியாக இருந்தது. இசை வசப்பட்ட அந்தச் சபையிலே "கருணைக் கடல் அன்னை என்றும் இருந்திட ஏது குறை எனக்கு...**

அவரைப் பார்க்க வந்திருந்தாராம். வரும்போது வழமையாக அவர் தன் தோட்டத்திலுள்ள விளைபொருட்களை எடுத்து வருவாராம். அன்றும் வந்தபோது அவர் பல கதைகளுக்கு மத்தியில் மழை இல்லாத குறைபற்றிக் கதைத்துக் கவலைப்பட. ஆனந்தராமன் தனது வயலினை எடுத்து வந்து அமிர்தவர்ஷினியத் தொடர்ந்து மேக ரஞ்சனி ராகத்திலமைந்து இரு பாடல்களை வாசித்ததும் மழைத் துளிகள் விழ ஆரம்பித்துவிட்டதாம்.

**நேரம் மாலை 08 மணி 07 நிமிடம் 13 செக்கன்**

"திரையின் பின் நிற்கின்றாய் கண்ணா உன்னை மறையோதும் ஞானியர் மட்டுமே காண்பர்" என்ற இரண்டாவது சரணத்திலமைந்த வரிகளை காபி ராகத்தில் வாசித்துக் கொண்டிருந்த ஆனந்தராமன் கண்கள் மூடிக்கிடந்தன. விழி ஓரத்தில் கண்ணீர் திவலைகளாக வெளிப்பட்டுக் கொண்டதை பக்கவாத்தியக்காரர்கள் அவதானித்து விட்டனர். அவர் தன்னை மறந்து வாசித்துக் கொண்டிருப்பது புரிந்தது.

காற்றலைகளில் அசைந்து வந்த அந்தக் கானாமிர்தத்தைச் சுவைத்தபடி இரசிகர்கள் கூட்டம் ஆடாமல் அசையாமல் இருந்தது.

வழக்கத்தைவிட ஆனந்தராமன் அந்தப் பாடலை இசைப்பதற்குரிய நேரத்தை அன்று அதிகம் எடுத்துக் கொண்டார். "கலிநாளுக்கிரங்கி கல்லிலே இறங்கி

நிலையாகக் கோவிலில் நிற்கின்றாய் கேசவா" கம்பிகளிலிருந்து பிறந்து வெளிப்பட்ட அந்த நாத அலைகளை, இசையின் அற்புதத்தை என்னவென்று சொல்ல...?

**நேரம் மாலை 08 மணி 10 நிமிடம் 39 செக்கன்**


கச்சேரி ஒருங்கமைப்பாளர்கள், ரசிகர்கள், மாணவர்கள் எனப் பலர் கையில் பொன்னாடையுடனும், மாலைகளுடனும் மேடை ஏறக் காத்திருந்தனர். வெளிநாட்டிலிருந்து வந்த ரசிகர் ஒருவர் அவருக்கு தனது அன்பளிப்பாக ஒரு சிறிய மோதிரத்தை அணிவிக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தையும் தெரிவித்துவிட்டு எழுந்து மேடைக்கருகாமையில் காத்திருந்தார்.

என்றுமில்லாதவாறு உச்சத்தைத் தொட்ட கச்சேரியாக எல்லோரும் உணரத்தொடங்கினர். வயலின் இசை மட்டும் மண்டபத்தை நிரப்ப சபை அமைதியாக இருந்தது. இசை வசப்பட்ட அந்தச் சபையிலே "கருணைக் கடல் அன்னை என்றும் இருந்திட ஏது குறை எனக்கு..." என்ற வரிகளை பல தடவை அவர் கைவிரல்கள் இசைத்தன. கச்சேரியின் உச்சம் அதுவாகத்தானிருந்தது. ஆடாத தலைகளும் ஆடின. தட்டாத கைகளும் தட்டின. ஊதுபத்தியின் மணம் கமழ்ந்து வியாபித்திருப்பதைப்போல மண்டபமும் ஆனந்தராமனின் இசையலைகளால் நிரம்பியிருந்தது. ஆடாமல் அசையாமல் இருந்த அத்தனைபேரையும் இசையால் தன்வசப்படுத்திக் கொண்டிருந்த அந்த இசைச்சங்கமம் திடீரென நின்றது. என்ன? ஏது? என்று அனைவரது கவனமும் மேடையை நோக்க...

**நேரம் மாலை 08 மணி 11 நிமிடம் 43 செக்கன்**

"ஏது குறை எனக்கு? ஏது குறை எனக்கு?"என்றுஇசையினூடாகயாரைக் கேட்டாரோ... யாரிடம் வினவினாரோ அவர் பதம் ஆனந்தராமன் சென்று சேர...

இசையோடு வாழ்ந்தவர்... இசைக்காக வாழ்ந்தவர்.. இசையோடு சங்கமித்துவிட்டார் ஆனந்தராமன். நல்ல மரணம் எனப் பலர் பேசிக் கொண்டனர்.



## பேராசை பேரிழப்பு

ஒரு நாய் ஒன்று ஒரு இறைச்சிக் கடையில் இருந்த மாமிசத்துண்டை திருடியது. அதனை வாயில் கவ்விக்கொண்டு தன் இருப்பிடத்திற்குப் புறப்பட்டது. வழியில் ஒரு ஓடையைக்கடக்க வேண்டியிருந்தது. நாய் ஓடையைக் கடக்கும் போது கீழே தண்ணீரைப் பார்த்தது. அந்தத் தண்ணீரில் அதன் உருவம் தெரிந்தது. தண்ணீரில் தெரிந்த அதன் உருவத்திலும் வாயில் மாமிசத் துண்டு இருந்தது.

அதைக் கண்ட நாய் அந்த மாமிசத்துண்டினையும் கௌவ்வ எண்ணியது. உடனே அது பலமாக 'லொள்','லொள்' எனக் குரைத்து கொண்டே தண்ணீரில் தெரிந்த நாயின் மீது பாய்ந்தது. அதனால் அதன் வாயில் இருந்த மாமிசமும் தண்ணீரில் விழுந்தது. அதனைத் தேடிச் சென்ற நாய் தண்ணீரில் தத்தளித்தது. மிகவும் துன்பத்துடன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என கரையேற வேண்டியதாயிற்று.

## கத்திரிகோல், கத்தரிகோல் எது சரி ?

கத்திரிகோலா? கத்தரிகோலா? நிறையச் சந்தர்ப்பங்களில் SCISSORS என்பதைக் குறிக்க கத்திரிகோல் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. சில இடங்களில் கத்தரிகோல் என்ற சொல் கையாளப்படுகிறது. இந்த இரண்டில் எது சரி? கத்தரிகோல் என்பதே சரி. கத்திரிகோல் என்பது தவறு. ஏன் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். கத்தரிப்பது என்பதுதான் கத்தரிகோல் செய்யக்கூடிய தொழில். கோல் என்பது இவ்விடத்தில் கருவி என்ற பொருளில் வருகிறது.

கத்தரிக்கப் பயன்படும் கோல் என்பதைக் குறிக்கவே கத்தரிகோல் என்ற சொல் உருவாக்கப்பட்டது. இதற்கு மாறாக கத்திரிகோல் என்று எழுதினால் அது பல மாறுபட்ட அர்த்தங்களை தந்துவிடும்.

ஏனெனில் கத்திரி என்பது வெயிலைக் குறிக்கும். ஆதலால் கத்திரிகோல் என்று எழுதுவது தவறு. கத்தரிகோல் என்று எழுதுவதே சரி.

## விடுகதைகள்

1. கடிபடமாட்டான். பிடிபட மாட்டான். அவன் யார்?
2. இளமையில் பச்சை. முதுமையில் சிவப்பு. குணத்திலே எரிப்பு. அவன் யார்?
3. ஆகாரமாக எதையும் தந்தால் சாப்பிடுவேன். ஆனால் நீரைக் குடிக்கத் தந்தால் இறந்து விடுவேன். நான் யார்?
4. முழு உலகமும் சுற்றிவரும். ஆனால் ஒரு மூலையில் இருக்கும். அது என்ன?
5. கண்டுபிடித்தவனும் வத்திருக்கவில்லை வாங்கியவனும் உபயோகிக்கவில்லை. உபயோகிப்பவனுக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாது.





விடைகள்
1. தண்ணீர்
2. மிளகாய்
3. நெருப்பு
4. முத்திரை
5. சவப்பெட்டி









## கேள்விக்கென்ன பதில்?

**நாம் வாழும் இலங்கை பற்றிய சில தகவல்கள்**

1. இலங்கையில் வனவிலங்குகள் காப்பாற்றப்படும் ஒரு காட்டின் பெயர் தருக.
2. இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் எந்த நாட்டவர்?
3. யாழ்ப்பாணத்தில் மழை பெய்விக்கும் காற்று எது?
4. இலங்கையிலுள்ள பெரிய ஆறின் பெயர் என்ன?
5. இலங்கை எத்தனை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?

பதில்கள்
1.யால/வில்பத்து
2. இந்திய வம்சாவளி
3. வடகீழ் பருவக்காற்று
4. மகாவலி கங்கை
5. ஒன்பது

## புதிருக்கு என்ன பதில்?

1. பொண்ணு குண்டுதான். ஆனால் உடை பள... பள.... பள... பள... இவள் யார்?
2. ஆயிரம் பேர் அயராது உழைத்துக் கட்டிய மண்டபத்தை,ஒருவன் உடைத்தான். இது என்ன?
3. தாகம் தீர்க்காது, கிணற்றில் தங்காது, கைகளால் அள்ள முடியாது, பார்வைக்கு மட்டுமே விருந்து. இது என்ன?
4. ஓட ஓடக் குறையும் வால். அது என்ன?
5. கருநீல உருவத்திலிருந் தாலும் சுவைக்கு மட்டும் பஞ்சமில்லை. இது என்ன?

விடைகள்:
1.வெங்காயம்
2. தேன்கூடு 3. கானல் நீர்
4. ஊசி நூல் 5. நாவற் பழம்



## அட அப்படியா?

**அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியிலும் குடை பிடிப்பான்.**


மேற்காணும் தொடர் உண்மையில் ஒரு விடுமொழி ஆகும். ஒரு காலத்தில் விடுகதையாய் இருந்து இன்னொரு காலத்தில் பழமொழியாய் மாறியவைகளே விடுமொழிகள் ஆகும். மேற்காணும் தொடர் ஒரு காலத்தில் 'அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியிலும் குடை பிடிப்பான். அவன் யார்?' என்று விடுகதையாகப் பயன்படுத்தப்பட்டது. இந்த விடுகதைக்குப் பதில் 'காளான்' ஆகும். காலப்போக்கில் இந்த விடுகதை பழமொழியாக மாறிவிட்டது.

## எறும்பு

சின்ன சின்ன எறும்பே
சிங்கார சிற்றெறும்பே !
உன்னைப் போல் நானுமே
உழைத்திடவே வேணுமே !
ஒன்றன் பின்னே ஒன்றாய்
ஊர்ந்து போவீர் நன்றாய் !
நன்றாய் உம்மைக் கண்டே
நடந்தால் நன்மை உண்டே !



## அறிவோம் உயர்வோம்!





உலகின் பற்பல உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து, பிறநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் விவரங்கள் சில .

| | | |
|---|---|---|
| 1. அப்பிள் பழம் | - | இத்தாலி, கனடா, நெதர்லாந்து, அவுஸ்ரேலியா |
| 2. முந்திரிப் பழம் | - | பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா, ஸ்பெயின் |
| 3. பேரீந்து | - | ஈராக், அல்ஜீரியா, ஈரான், சூடான் |
| 4. கோதுமை | - | அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா, ஆர்ஜென்ரீனா |
| 5. தேயிலை | - | இந்தியா, இலங்கை, சீனா, இந்தோனேஷியா |





7-ம் பக்க தொடர்ச்சி...

நாடுகளிலும் காணப்படுகின்றன. எனவே, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் என்பது எந்தவொன்றையும் கூறுவதற்கு ஒருவருக்குள்ள உரிமையாக கொள்வதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லை என எவரும் அறிவர். ஆயினும் மறுபுறம், அதே கூற்று, அதாவது சுதந்திரம் என்பது 'எந்தவொன்றையும் தெரிவிப்பதற்கான உரிமையன்று' என்பது மிகவும் ஆபத்தான வகையில் கலைஞரது படைப்பிற்கான வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் சிந்தனை உரிமையினை பறித்துக் கொள்வதற்கும் அதிகாரம் படைத்த ஒருவரால் மிக இலகுவாக பயன்படுத்தக் கூடிய ஒன்றென்பதனையும் யாரும் அறிந்து கொள்வது அவசியமே.

இவ்விரண்டையும் வேறுபடுத்தி அடையாளம் காணக்கூடிய இரண்டு சந்தர்ப்பங்களை இங்கு குறிப்பிடுகிறேன். 19391945 இரண்டாம் உலக மகா யுத்த காலப்பகுதியில் ஜேர்மனியில், போலந்தில் மற்றும் இன்னும் பல இடங்களில் அமைக்கப்பட்டிருந்த எரிவாயு அறைகளில் இடப்பட்டு அறுபது இலட்சம் யூதர்கள் படுகொலைசெய்யப்பட்ட ஒருசம்பவம் உள்ளது. இச்சம்பவமானது அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாகவும், கடந்த காலத் தரவுகள், தகவல்களாகவும் இன்றும் உயிரோட்டத்துடன் காணப்படுகின்ற பல்லாயிரக் கணக்கான மக்களது உயிரோட்ட சாட்சியாகவும் உலகம் முழுவதும் காணக்கூடியதாகவுள்ள ஓர் உண்மைச் சம்பவமாகும். ஓர் இனத்தை இலக்காகக் கொண்டு மானிட வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் அழிவாக கருதப்படுவது இந்தச் சம்பவமேயாகும். அந்தச் சம்பவத்தினை ஒரு கற்பனையென்றோ அல்லது பொய்யென்றோ இன்று பகிரங்கமாகக் கூறுவது ஐரோப்பிய நாடுகளில் சிறைத்தண்டனை வழங்கக் கூடிய குற்றமாகும். இது முன்னேற்ற மடைந்த நாடுகளில் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தினை வரையறை செய்துள்ள ஒரு சந்தர்ப்பமாகும். அதன்படி, பல நாடுகளில் வலதுசாரி இனவாத அரசியல்வாதிகள் சிலர் கடந்த காலங்களில் அந்த நாடுகளில் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மறுபுறம், 'கடவுள் இறந்துவிட்டார்' என பகிரங்கமாக கூறுவது எந்தவகையிலும் தவறாகாது என இன்று முன்னேற்றம் கண்ட உலகம் கருதுவதற்கில்லை. அதாவது, 15ஆம் 16ஆம் நூற்றாண்டுகளில் அவ்வாறான கூற்று அல்லது அதற்கு குறைவான கருத்தையுடைய கூற்றாக இருப்பினும் 'மதத்தினை இழிவுபடுத்தல்' என்ற கருத்தின் அடிப்படையில் பல்லாயிரக்கணக்கான மக்களும் பெண்களும் தீயில் இட்டு கொழுத்திய ஓர் இனத்தின் முன்னேற்றமானது இன்று, முன்பு காணப்படாத இணக்கமான நிலைக்கு தேவாலயங்களும் கிறிஸ்தவ மதமும் இன்று மாற்றமடைந்துள்ளது.

அடுத்ததாக கடந்த ஒரு தசாப்த காலமாக மேற்கத்தேய தேவாலயம் எனப்படும் கூட்டுத்தாபனத்திற்குள் இடம்பெறுகின்ற பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் காரணமாக ஆயர்களும் காதினல்களும் சிறைக்கு சென்ற சந்தர்ப்பங்களை எம்மால் கேட்க கிடைத்தது. யாராயினும் மதகுரு ஒருவர் தொடர்பில் இவ்வாறான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட உடனேயே அந்த சம்பவமானது நீதிமன்றிற்கு கொண்டு செல்வதற்கு முன்னரே குறிப்பிட்ட நபருக்கெதிரான தடைகள் அறிவிக்கப்பட்டது தேவாலயங்களில் ஆகும். அவர்கள் அவ்வாறு செயற்படுவதற்கான காரணம், தேவாலயம் எனப்படும் சமயத்தைப் பாதுகாப்பதற்கு விசேடமாக நவீன யுகத்தில் அவ்வாறான கடும் நடவடிக்கைகளை மேற்கொள்வது அத்தியாவசியமானது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனாலும், எமது விகாரைகள் தொடர்பில் நிலைமை அவ்வாறில்லை. விகாரைகள் அவ்வாறான விமர்சனங்களைப் பொறுத்துக் கொள்வதில்லை. மதிப்புரைக்கும் விமர்சனத்திற்கும் தமது தர்மம் மிகவும் வெளிப்படையானது என தெரிவித்த ஒரே மகான் புத்தபகவான் ஆவார். எனவே, வரலாற்று ரீதியாக பார்க்கின்ற போது பொறுமை என்பது தேவாலயங்களை விடவும் விகாரைகளிலேயே இருக்க வேண்டும். அவ்வாறிருக்கையில் புத்தபகவானுடைய சீடர்கள் என கூறிக் கொள்கின்ற புத்த துறவிகள் தற்போது அதற்கு புறம்பான வகையில் புத்தரின் போதனைகளுக்கு எதிராகவே செயற்படுகின்றனர். ஷக்திக சத்குமாரவிற்கெதிராக குற்றஞ்சாட்டுகின்ற இந்தத் தேரர்கள் அந்த பிரிவிற்குரியவர்களாவர்.



சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனத்தின் கீழ் ஷக்திக சத்குமாரவுக்கு எதிராக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இலங்கை அந்த சாசனத்தில் ஒரு பங்குதாரர் என்ற காரணத்தினால் அவ்வாறு செய்வதற்கான வாய்ப்பு அதிகாரிகளுக்கு உண்டு. ஆயினும், இந்த எழுத்தாளருக்கு தண்டனை வழங்குவதே அதிகாரிகளின் தேவைப்பாடாக இருந்திருந்தால், இந்த சர்வதேச சாசனத்தினை கையாளாமல், அதனை எமது குற்றவியல் தண்டனைச் சட்டத்தின் 291 (ஆ) பிரிவின் கீழ் வழங்கியிருக்கலாம். அந்த பிரிவு பின்வருமாறு உள்ளது:

"...சமய உணர்வினை இழிவிற்குட்படுத்துவதற்காக ஒருமுகப்பட்டதும் துவேசமானதுமான எண்ணத்துடன், பேச்சு வழக்கிலோ அல்லது எழுத்து மூலமான சொற்பதங்களால் அல்லது காணக்கூடிய சைகைகளின் மூலமாக குறிப்பிட்டதொரு வகுப்பின் சமயத்திற்கோ அல்லது சமய நம்பிக்கைகளுக்கோ இழிவினை ஏற்படுத்தும் அல்லது இழிவினை ஏற்படுத்த முயற்சிக்கும் நபரொருவருக்கு இரண்டு வருட காலப்பகுதிக்கென, இருவகையிலும் ஒருவகையில் சிறைத்தண்டனை வழங்கல் அல்லது தண்டப்பணம் அறவிடல் அல்லது இரண்டு வகையான தண்டனைகளும் வழங்கப்படுதல் வேண்டும்".

ஆயினும், பொல்கஹவெல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவரது அதிகார எல்லையையும் மீறிச் சென்று, இதனை மேற்படி சர்வதேச சமவாயத்தின் அடிப்படையில் வழக்கினை தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். இது சாதாரண பொலிஸ் அதிகாரி ஒருவருடைய பொறுப்பற்ற செயற்பாடெனில், அதற்கு மாற்றீடாக நிர்வாக ரீதியான தீர்வொன்றினைப் பற்றி ஆராய முடியும். ஆயினும், எமது நம்பிக்கைக்குரிய விடயமாக இருப்பது மேற்படி தீர்மானமானது உயர்மட்ட அரசியல் அதிகார வர்க்கத்திடமிருந்தே வந்ததென்பதாகும். இவ் அதிகார வர்க்கமானது ஒரு வகையான இனரீதியான மற்றும் சமய ரீதியான சித்தாந்தப் பார்வையின் உள்ளடக்கமாகும்.

மேற்படி சர்வதேச பிரகடனத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் பிணை பெறக்கூடியது உச்ச நீதிமன்றத்திலிருந்து மாத்திரமே. ஆயினும், சந்தேகநபர் முன்நிறுத்தப்பட்டதோ நீதவான் நீதிமன்றத்திலாகும். நீதவான் நீதிமன்றத்திற்கு பிணை வழங்கும் அதிகாரம் இல்லை. நீதவான் நீதிமன்றில் அடுத்த வழக்குத் திகதியாக 9ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த திகதியின் போது உச்ச நீதிமன்றமானது இரண்டு வார விடுமுறையில் சென்றிருக்கும். அதன் உள்ளார்ந்த அர்த்தம் யாதெனில் இன்னும் இரண்டு மாதங்களாயினும் பிணை பெறுவதற்காக எழுத்தாளர் காத்திருக்க வேண்டும் என்பதாகும்.

விடயம் இவ்வாறிருக்க, மேற்படி சர்வதேச பிரகடனத்தின் நோக்கமாக அமைவது நபர்களது சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதே தவிர அரசியல் ரீதியான அல்லது சமய அதிகாரிகளுக்கு அந்த உரிமைகளைப் பறிப்பதற்கான அனுமதிப் பத்திரமாக அமையக் கூடாது. அந்த சர்வதேச பிரகடனத்தின் 19ஆவது உறுப்புரை பின்வருமாறு உள்ளது.

"தடையின்றி தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கு அனைத்து நபர்களுக்கும் உரிமை உள்ளது." அதில் மேலும் பின்வருமாறு கூறப்படுகின்றது.

"அனைத்து நபர்களுக்கும் கருத்து வெளிப்பாட்டு உரிமை உள்ளது. அதில் உள்ளடக்கப்படுவது தகவல்கள் மற்றும் அனைத்து வகையிலுமான கருத்துக்களை, கலைப் படைப்பாக புத்தக வாயிலாகவோ அல்லது தாம் விரும்பும் வேறு வகையிலான எந்தவொரு ஊடக வாயிலாகவோ ஆராய்வதற்கும், பெற்றுக் கொள்வதற்கும் பகிர்ந்தளிப்பதற்கும் உள்ள உரிமையாகும்".

இப்போது எமது உள்ளத்தில் எழும் கேள்வியாவது, சர்வதேச பிரகடனத்தில் கூறப்பட்ட விடயங்கள் அவ்வாறு இருக்கின்ற போது இந்தப் பிரகடனத்தின் கீழ் ஷக்திக சத்குமார எவ்வாறு கைது செய்யப்பட்டார் என்பதாகும். அதனை அவ்வாறு செய்ய முடியும் என பொலிஸ் தரப்பினர் கூறுவதற்கு அந்த பிரகடனத்தின் 20ஆவது உறுப்புரையில் இவ்வாறு கூறப்பட்டிருப்பதன் மூலமாக இருக்கலாம். "அநீதியாக, எதிரானதாக அல்லது வன்முறையைத் தூண்டும் வகையில் தேசியம், இனரீதியான அல்லது மதரீதியான குரோதத்தினை பரப்புரை செய்தலை தடுத்தலாகும்".

தற்போது நாங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டியது, அநீதிக்கோ அல்லது எதிராகவோ அல்லது வன்முறையைத் தூண்டும் வகையில் இந்த சிறுகதையில் ஏதேனும் இடம்பெற்றுள்ளதா என்பதனையே ஆகும். ராஹுலவின் தந்தை சித்தார்த்தன் அல்ல என்று கூறுவது ஏதேனும் தூண்டுதலுக்கு ஏதுவாக அமையும் காரணியாக யாராயினும் கருத முடியுமா? அவ்வாறெனில், 'கடவுள் இறந்து விட்டார்' என்று கூறுவது அதையும் விட அதிகமான தூண்டுதலாக அமையாதா? இந்த தவறு இடம்பெறுவதற்கு அவ்வாறான தூண்டுதலாக இருக்கக் கூடிய, 'தேசியம், இனரீதியான அல்லது மதரீதியான குரோதத்தினை பரப்புதலும்' அதனோடு இணைந்ததாக இடம்பெற்றிருக்க வேண்டும். இவ்வகையான சட்டம் அப்படியானதொரு நிலைமையில் மாத்திரமே உரித்துடையதாக அமையும். காரணம், இவ்விடத்தில் அடிப்படையாக தடைசெய்யப்படுவது தேசியம், 'இனரீதியான அல்லது மதரீதியான குரோதத்தினை பரப்புதல்' என்ற காரணமே ஆகும். மேற்படி உறுப்புரையில் கூறப்படும் உள்ளடக்கம் அதுவே. எனவே, ஷக்திக சத்குமாரவின் சிறுகதையில் 'தேசியம், இனரீதியான அல்லது மதரீதியான குரோதத்தினை பரப்புதல்' இடம்பெறுவது எந்த சொல்லில் அல்லது வசனத்தில் அல்லது எந்த பந்தியின் மூலமாக?

கலை படைப்புகள் தொடர்பாகவோ, கலையினுள் காணப்படுகின்ற பரிமாற்றத்துக்குரியதான விசேட பண்புகள் தொடர்பாகவும் அறிந்திருக்க வேண்டுமென்பதனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவரிடம் நாம் எதிர்பார்க்க முடியாத விடயமாகும் (கலை ரசிகர்கள், கலையுணர்வு கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்களும் உள்ளனர் என்பதும் உண்மையான விடயமே). ஆயினும் 'சமயம்' என்ற சொல் இருந்த மாத்திரத்திலோ, 'தூண்டிவிடல்' என்ற சொல் இருந்த மாத்திரத்திலோ மேற்படி உறுப்புரையானது ஷக்திக சத்குமாரவினது சிறுகதையுடன் தொடர்பற்றதென்ற தன்மையினை இந்த பொலிஸ் அலுவலர் புரிந்து கொண்டிருந்திருக்கலாம். ஆயினும், ஏற்கனவே நாம் தெரிவித்த அரசியல் வாதியினால் அதற்குரிய வாய்ப்பை வழங்காதிருந்திருக்க வாய்ப்புண்டு.

எவ்வாறெனினும், இந்த சிறுகதையானது மேலே கூறப்பட்ட கருத்தையுடைய, அதாவது சமய குரோதமல்லாத, சமய அன்பை முன்னிலைப்படுத்தி எழுதியதொன்றாக, அவசியமெனில் இதனை விட மிக இலகுவான விதத்தில் யாருக்காவது தர்க்கரீதியாக தெரிவித்திருக்கலாம். பிரம்மச்சர்ய ஒழுக்கம் என்பது பிக்குகளுக்கு அவசியமானதொன்றாகும். இந்த சிறுகதையினுள் தலைமைத் தேரர் இங்கு கூறப்படுகின்ற இளம் பிக்குவை பாலியல் ரீதியாக பயன்படுத்துவதனை பிரம்மச்சர்ய ஒழுக்க மீறலாக சமூக கருத்தியலை ஏற்படுத்துவதனூடாக, அத்திய நபரிடமிருந்து விகாரையை தூய்மையாக்கிக் கொள்ள முடியுமென்பது செய்யக்கூடியதாகவிருந்த ஒரு வழியாகும். அது சமயம் தொடர்பில் காணப்படுகின்ற அன்பே தவிர அன்பற்றதொரு விடயமாக அமைவது எவ்வாறு?


எப்படியோ சாசன (சமய) திருத்தம் என்ற விடயம் இங்கு எமக்கு அவசியமில்லை. எமக்கு அவசியமான விடயமாக அமைவது, ஒரு எழுத்தாளருக்கு, ஒரு கலைஞருக்கு, ஒரு ஊடகவியலாளருக்கு, ஒரு சிந்தனையாளருக்கு போலவே வேறெந்த நபருக்கும், சுதந்திரமாக சிந்திப்பதற்கும், சொல்வதற்கும், எழுதுவதற்கும், காட்சிப்படுத்துவதற்கும் உள்ள உரிமையானது நவீன மானிட நாகரீகத்தினுள் அசையாத உரிமையொன்றாக இருப்பது அவசியமே. எனவே, ஷக்திக சத்குமாரவினது உரிமை மற்றும் சுதந்திரத்தின் பொருட்டு நாம் யாவரும் அணிதிரள்வது அவசியமாகின்றது.

# ஐம்பதிலும் ஆசை வரும்...!

இந்த மல்யுத்த வீராங்கனைகளுக்கு இத்தனை அசுர பலமா? ஆண் பாதுகாப்பு அதிகாரிகளை பந்தாடி விட்டு, ஆளுக்கு ஆள் பாய்ந்து ஆக்ரோஷமாக மோதும்போது, அடிபட்ட பெண் புலிகள்தான் ஞாபகத்திற்கு வருகின்றன.

இந்தவாரம்பொலிஸ் அதிகாரிகளின் வருகையால், களம் ஒரே அல்லோல கல்லோலம்தான்! விலங்கிட்டு, பொலிஸ் காருக்குள் தள்ளினாலும், அட்டகாசம் அடங்குவதாக இல்லை. பொலிஸாரின் கார் கண்ணாடி உடைப்பு வரை பல "மசாலாக்கள்" அரங்கேறின. இறுதியில் றொண்டா, லிஞ்ச், சார்லொட் என்ற மூன்று பெண் புலிகளையும் தனித்தனியாக பொலிஸ் கார்களில் கொண்டு போகவேண்டியதாயிற்று.!

கைது செய்து கொண்டு போன மூவரில் ஒருவரான லிஞ்ச், களத்திற்கு வந்து முழங்கி விட்டுப் போயிருக்கிறார். இன்று (ஏப்ரல்7) நியூஜேர்ஸி நகரில் றெஸ்ஸிள்மேனியா 35 இடம்பெறப்போவதும், இந்த மோதல்களில் முதன்மையாகப் பேசப்படுவதும், இரண்டு சம்பியன் பெல்ட்டுகளுக்காக (றோ,ஸ்மாக்டவுன்) அடிபடப்போகும் இந்த மூன்று பெண்புலிகளின் கதைதான்!



அடிவாங்கி அடிவாங்கி பெரும் ஆவேசத்திலிருந்த சேத் றொலின்ஸ், "மனித மிருகம்" புறொக் லெஸ்னரை, "அடிக்கக் கூடாத இடங்களில்" ஒன்றுக்கு இரண்டு தடவையாக அடித்து, அவரை 'நான்கு கால்களில்" தவழவிட்டு, பெல்டை கையில் எடுத்து, கால்களை லெஸ்னரின் உடலில் மிதித்து, குரூரமாக ரசித்து குதூகலித்திருக்கிறார். இந்த விளையாட்டில் அடிக்கடி இடம்பெறும் பல "அநியாயங்களின்" நடுவில் இது அப்படியொன்றும் புதியது அல்ல!

இன்றைய மோதலில் வட்டியும் குட்டியுமாக யாருக்கு எது திரும்பக் கிடைக்கிறதோ தெரியவில்லை. றெஸ்ஸிள்மேனியா 21 இல், றிபிள் எச்சுடன் மோதிய பற்றிஸ்டா(50வயது) மீண்டும் இன்று றெஸ்ஸிள்மேனியா 35இல் மோதப்போகிறார் என்பது நம்மை ஆச்சரியப்பட வைக்கும் விடயம். 2005இல் றிபிள் எச்சுடனான மோதிய ஆசை, 2019இலும் அதாவது ஐம்பதில், மீண்டும் இவருக்கு வந்திருக்கின்றது.

# ஆட்டம் காணும் ஆட்டக்காரர்கள்

இலங்கையில் அரசியல் எந்த அளவுக்கு ஆட்டங் கண்டிருக்கிறதோ அந்த அளவுக்கு சற்றும் குறையாமல் ,கிரிக்கெட் ஆட்டமும் நன்றாகவே ஆடிப்போயிருக்கின்றது. வரப்போகும் உலக வெற்றிக் கிண்ணத்திற்கான அணிக்கு டிமுத் கருணரட்ண முற்றிலும் பொருத்தமானவர் என்று முடிவெடுத்த கையோடு, விடிகாலைப் பொழுதில் மதுபோதையில் ஓட்டி வந்த காரை முச்சக்கர வண்டியொன்றுடன் மோதவிட்டு, இவருக்கு நீதிமன்றப் படியேறும் அவலம் வந்து சேர்ந்திருக்கின்றது. 13 இலட்சம் ரூபா அபராதமும் செலுத்தியுள்ளார்.

அஞ்சலோ மத்தியூஸ் தனது சகலதுறை ஆட்டத்தை தொடர முயாமல் போக, அணித்தலைவர் பொறுப்பேற்று அனைத்து மோதல்களையும் கோட்டைவிட்டிருக்கிறார் மலிங்க. இந்தியாவின் தற்போதைய ஐ.பி.எல். சுற்றுப்போட்டிபோல, சுப்பர் மாவட்ட ஒருநாள் சுற்றுப்போட்டித் தொடரை, இலங்கை கிரிக்கெட் சபை ஆரம்பித்துள்ளது. ஏப்ரல் 4 இல் ஆரம்பித்த இந்தச் சுற்றுப்போட்டி, 11 இல் முடிவடையப் போகின்றது.

கொழும்பு அணி (தலைவர் டினேஷ் சந்திமால்), காலி அணி (தலைவர் லசித் மலிங்க. )கண்டி அணி(தலைவர் டிமுத் கருணரட்ண), தம்புள்ள அணி(தலைவர் அஞ்செலோ மத்தியூஸ் என்று நான்கு அணிகள் மோதப்போகின்றன. (அந்தோ பரிதாபம். இலங்கை அணிக்கு விளையாட இந்த நான்கு இடங்களில்தான் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் இருக்கிறார்கள் போலும்)இதில் சம்பியனாக வரும் அணிக்கு பத்து இலட்சம் ரூபா பரிசு, இரண்டாம் பரிசு ஏழரை இலட்சம் என்பது ஒருபுறமிருக்க, இந்த மோதல்களை வைத்தே இனித் தலைவர் உட்பட , அணித் தேர்வுக்கான இறுதி முடிவு எடுக்கப்படுமாம்.





# பிழைக்கத் தெரிந்த நட்சத்திரம்

விளையாட்டு நட்சத்திரங்கள் தங்கள் உழைப்பை. உருப்படியான விடயங்களில் முதலிட்டு வைப்பது உலகறிந்த செய்தி. போர்த்துக்கல் உதைபந்தாட்ட நட்சத்திர வீரரான றொனால்டோவின் முதலீடு வித்தியாசமாக இருக்கின்றது. ஸ்பெயினின் தலைநகரான மட்ரிட்டில், றொனால்டோ சமீபத்தில் தன் சினேகிதியுடன் இணைந்து, திறந்து வைத்திருப்பது ஒரு கிளினிக். தலைமுடி இழந்தவர்களுக்கு செயற்கையாக முடி நடும் ஸ்பெஷல் கிளினிக் இது.

"இன்ஸ்பர்யா" என்ற பெயரில் இயங்கும் இந்த மருத்துவ நிலையம், றொனால்டோவின் ஒரு கனவு நிலையம் என்கிறார்கள். இது ஸ்பானிய மக்களுக்கு உதவும் ஒரு நிலையமாக இருக்கும் என்பதோடு, நாட்டுக்கு பொருளாதாரரீதியாக வருமானத்தையும் ஈட்டித்தரும் என்கிறார் இவர் உற்சாகத்தோடு!

# அடிபடுவதும் கடிபடுவதும்...!



அடிக்க வேண்டியவர் கடிக்க முனைந்ததால், தொழில்ரீதியாக குத்துச் சண்டைகளில் பங்குபற்றுவதற்கான அனுமதிப் பத்திரம் ரத்தாகி இருக்கின்றது. காஷ் அலி என்ற பிரிட்டிஷ் அதிபார குத்துச்சண்டை வீரர், டேவிட் பிரைஸ் என்ற வீரரைக் களத்தில் அடித்ததோடு கடித்தும் இருப்பதால், இவரது ஊதியமான 20,000 பவுண்ஸ் (சுமாராக 40இலட்சம் ரூபா) அபராதமாக பறிமுதலாகி இருக்கின்றது.

இங்கிலாந்தின் லிவர்பூலில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. எதிராளியை கயிற்றில் சாய்த்து, தோள்ப்பட்டையில் நன்றாகப் பற்களைப் பதித்து, வேட்டை நாயைப் போல கடித்திருக்கிறார் இந்த வெறியர். முதலில் எதிராளியிடம் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்ட இவர், தான் தப்பவே இந்த வழியைக் கையாண்டுள்ளார். ஐந்தாவது சுற்றில் நடந்த இச் சம்பவத்தின் போது, தோள்பட்டையில் கடித்த அலி, எதிராளியை தரையில் வீழ்த்தி, மீண்டும் வயிற்றில் கடித்துள்ளார். உடனடியாக நடுவர் மோதலை நிறுத்த, பாதுகாப்பு அதிகாரிகள் அங்கு வந்து, அலியைக் கொண்டு சென்றுள்ளார்கள். ஆத்திரமடைந்த விசிறிகளினால் அலிக்கு "பியர் அபிஷேகம்"நடந்துள்ளது.." தரையில் விழுந்தவனை வயிற்றில் கடிப்பது எவ்வளவு கேவலமானது.







**யாழ்ப்பாணம்**

முதலாம் கட்டைச் சந்தி
பருத்தித்துறை
021 4923201
071 4546961

இல 227/6 கே.கே.எஸ் வீதி
சுன்னாகம் (மதவாடி
அண்மையில்)
021 224 2022
071 454 6958

பிரதான வீதி, நெல்லியடி
(பொலிஸ் நிலையம்
முன்பாக)
021.300 6550
071 454 6958

கண்டி வீதி, சாவகச்சேரி
(நீதிமன்றம் அண்மையில்)
021 492 3202
021 227 0700

யாழ்.கச்சேரியடி,
யாழ்ப்பாணம்
39, நல்லூர் வீதி
021 222 6699
076 722 5292

ஓம் பிளாசா
பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்
021 222 6688
077 242 2622

**கிளிநொச்சி**

ஏ9 கிளிநொச்சி
(கச்சேரி முன்பாக)
021 228 5505
071 454 6955

வாடியச்சந்தி
பூநகரி
021 320 1818
070 333 7171

புளியடிச்சந்தி
முல்லைவீதி, விசுவமடு
021 320 1515
071 454 6955

**வவுனியா**

நாச்சிகுடா சந்தி
மன்னார் வீதி, முழங்காவில்
021 300 6544
070 333 6161

216, ஏ9 வீதி, வவுனியா
(வசந்தி திரையரங்கு முன்)
024 222 7777
077 710 0444

**மன்னார்**

இல 94, பிரதான வீதி
மன்னார்
023 225 1656
077 847 2732

பெண்களாலேயே பெண்களுக்கு
பயிற்சி வழங்கப்படும்

தலைமைக் காரியாலயம்: 226, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
021 222 4353, 021 492 3200, 077 722 5292


MFD
MILLENNIUM
FASHION
DESTINATION
மிலேனியம்
எதிர்கால நாகரீகம் இன்றே
ஜீன்ஸ், சர்ட்ஸ், டீசர்ட்ஸ்,
சல்வார்ஸ், புடவைகள், ஆண்களின்
ஆடைவகைகள் மற்றும் பல...
Retail Dealers in: Textile,
Specialist in
Jeans, T.Shirt, Shirts, Salwar,
Sarees & Boys Suits & Etc...
இல.227,மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.
தொ.பே.இல: +94212215393
No.10-11,Power House Road, Grand
Bazaar,Jaffna.
Tel : 021-2217575
www.facebook.com/MILLENNIUM
இனிய தமிழ் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்...!

# "தூய்மையானதும் நீண்ட காலம் பாவிக்க கூடியதுமான இல்லத்தரசிகளின் ஒரே தெரிவு"



தேசிய எரிவாயு ஏக விநியோகஸ்தர்

## S.V முருகேசு

No. 154, Hospital Road, Jaffna.
T.P: 0212228899, 0214925831

No. 106, Hospital Road, Jaffna.
T.P: 0214925830, 0212224341
Fax: 0212224341

No. 288, A9 Road karadippokku, kilinochchi.
T.P: 0214925827

LITRO FUELS

இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...!



# சசிகா லேணர்ஸ்

# THE SASIKA LEARNERS




## தலைமைக் காரியாலயம்

இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021-2217678 / 0777226247
sasikadrivingschool@gmail.com
sasikalearners.com

**அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை**

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு 15% கட்டண கழிவு வழங்குவதுடன் மருத்துவ சான்றிதழும் இலவசமாக பெற்றுத்தரப்படும்.
09.04.2019 - 30.04.2019 வரை

## கிளை நிறுவனங்கள்

**யாழ்ப்பாணம்**
இல 281C, மணிக்கூட்டு கோபுரவீதி யாழ்ப்பாணம்
0212228004/0703015004

**மல்லாகம்**
கே.கே.எஸ் வீதி
0212243393/0703013014

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு
021-2252333 / 0712554135

**சங்கானை**
ஒடக்கரை வீதி, சங்கானை
0212251664/0703013016

**வேலணை**
வங்களாவடி சந்தி, வேலணை
0212215472/0703013012

பழைய கண்டி, காரைநகர் (பிரதான வீதி) 0212252454


இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 14.04.2019 அன்று வெளியிடப்பட்டது.